www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி

පුදිය පූමි

Puthiya Poomi

சுற்று 13 சித்திரை(ஏப்பிரல்) 2006 பக்கம்12 விலை 15/- சுழற்சி 90

# மகிந்த என்ன செய்யப் போகிறார்?

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பதவி ஏற்று 110 நாட்கள் கடந்து விட்டன. இந்நிலையிலேயே கடந்த மார்ச் 30 திகதி உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் இடம் பெற்றது. ஆளும் தரப்பான ஐ.ம.சு. முன்னணி அதிக இடங்களைப் பெற்று பல உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்களைக் கைப் பற்றியுள்ளது. கிராமங்களைக் கைப் பற்றுவோம் எனக் கூறித் தனித்துப் போட்டியிட்ட ஜே.வி.பி. ஏற்கனவே பெற்றிருந்த ஒரே ஒரு பிரதேச சபையின் அதிகாரத்தை மட்டுமே கைப்பற்ற முடிந்தது. ஐக்கிய தேசியக்கட்சி எதிர்பார்த்த வெற்றியைப் பெற முடியவில்லை. ஜாதிக ஹெல உறுமயவும் படுதோல்வி அடைந்து மஞ்சள் அங்கி அரசியலாளர்களைத் தலைகுனிய வைத்துள்ளது.

ஜே.வி.பி யும் - ஹெல உறுமயவும் இத் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக தமது பேரினவாத வெறிக் கூச்சலை உச்சமாக்கிக் கொண்டனர். ஆனால் சிங்கள மக்கள் இதற்கு செவி சாய்க்கவில்லை. அவர்கள் மகிந்த சிந்தனையின் பக்கம் சாய்ந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. மகிந்த சிந்தனை பல வழிகளிலும் தமக்கு வரப்பிரசாதங்களைக் கொண்டுவரப் போவதாக சிங்கள மக்கள் நம்பிக்கை கொண்டிருக்கின்றனர். அதே வேளை யுத்தம் மீண்டும் தொடங்கப்படக் கூடாது என்பதையும் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காணப்படுவதையும் இத் தேர்தல் முடிவுகள் வலியுறுத்தியுள்ளன. மேலும் கூறுவதனால் சமாதானத்திற்கான சமிக்ஞையை இத் தேர்தல் மூலம் சிங்கள மக்கள் காட்டியுள்ளனர்.

இந் நிலையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ என்ன செய்யப் போகிறார். பேச்சுவார்த்தையை உரிய வழிமுறைகளில் முன்னெடுத்துச் சென்று அரசியல் தீர்வை முன்வைத்து "கௌரமான சமாதானத்தை" வென்றெடுக்க "வியர்வை சிந்தப்" போகிறாரா? அல்லது பேச்சுவார்த்தையை இழுத்தடித்துச் சென்று மீண்டும் ஒரு யுத்தத்திற்கு வழி வகுத்து இரத்தம் சிந்த வைக்கப்போகிறாரா?

ஜனாதிபதி செல்லுமிட மெல்லாம் யுத்தத்திற்கு செல்லமாட்டேன் என்றும் சமாதானத்தைக் கொண்டு வருவேன் என்றும் கூறி வருகிறார். ஆனால் அதற்குரிய ஆக்க பூர்வ வழிகளில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றதா என்பதே கேள்வியாகும். ஜனாதிபதி சமாதானம் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் அதே வேளை ஆயுதப்படைகளின் தளபதிகள் ராணுவ ஆலோசகர்கள் பாதுகாப்புத்துறை உயர் நிர்வாகிகள் அதிகாரிகள் என்போர் நவீன ஆயுதங்கள் உட்பட பெருந்தொகை ராணுவத் தளபாடங்களைக் கொள்வனவு செய்வதில் வேகமாக ஈடுபட்டும் வருகின்றனர். எதற்காக இவையனைத்தும் செய்யப்பட்டு வருகின்றன.

தொடர்ச்சி 12ம் ➡

## செய்திச் சாராம்சம்

இந்தியாவுடன் செய்து கொள்ளப்பட்ட அணுசக்தி ஒப்பந்தம் அமெரிக்க நலனுக்கு அவசியமானது. நாம் உலக கமயம்ாதல் பொருளாதாரத்தின் கீழ் வாழ்கின்றோம். அடுத்த 30ஆண்டுகள் பற்றிச் சிந்திப்பதே இன்றைய தேவையாகும் என அமெரிக்க அதிபர் புஷ் கூறியுள்ளார்.

● அதனால் தான் தமது நலனுக்கு எதிரான ஈரானிய வடகொரிய அணு சக்தித் திட்டங்களைப் பயங்கரமானது என அமெரிக்கா கூறிவருகிறது.

இந்த வருடத்தில் நூறு கோடி அ. டொலர் பெறுமதியான வெளிநாட்டு மூலதனம் கொண்டு வரப்படவுள்ளதாக இலங்கை முதலீட்டுச் சபை தெரிவித்துள்ளது. இது மகிந்த சிந்தனை காட்டிய தூர நோக்குத் திட்டம் என்றும் கூறப்படுகிறது.

● இது தான் தேசிய பொருளாதாரத்தை மகிந்த சிந்தனை மீட்கப் போவதாகக் கூறும் வழிமுறையா?

எட்டு மாவட்டங்களில் 20 முதலீட்டாளர்கள் 300 தொழிற்சாலைகளில் 9441.7 மில்லியன் ரூபா முதலிடுவதன் மூலம் 8967 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கப்படும் என முதலீட்டுச் சபைத் தலைவர் கூறியிருக்கிறார்.

● நல்ல விடயம் தான். யூஎன்.பி .காலத்தில் தொடங்கப்பட்ட 1000 ஆயிரம் ஆடைத் தொழிற்சாலைகளுக்கு என்ன நடைபெறுகிறது என்று கூறுவார்களா?

ஜனாதிபதியின் அண்ணன் மகன் ராஜபக்ஷ கதிர்காம ஆலயத்தின் திவ்வியன நிலாமையாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

● ஜனாதிபதி குடும்பத்தின் பௌத்த மேட்டுக்குடி மேன்மைக்கு இதுவும் ஒரு நற்சாட்சிப் பத்திரமாகும்.

கடந்த 2005ம் ஆண்டில் மொத்தம் 59480 குற்றச் செயல்கள் இடம் பெற்றுள்ளன. இதில் 1223 கொலைகள் உள்டங்கும். இக் குற்றச் செயல்கள் முன்னைய ஆண்டைவிட 2500 ஆல் கூடியுள்ளதாகப் பொலீஸ் புள்ளி விபரம் கூறுயுள்ளது.

● இந்த நாடு புனித புத்த தர்மத்தை உபதேசிப்பதையும் கேட் பதையும் முதன்மைப்படுத்தும் நாடு என்று அண்மையில் ஜனாதிபதி பெருமைப்பட்டுக் கொண்டமைக்கு மேற்படி புள்ளி விபரம் சமர்ப்பணம்.

பத்தாயிரம் கோடி ரூபாவை அமெரிக்காவிடமிருந்து கடனாகப் பெற நிதி அமைச்சு முயற்சி செய்து வருகிறது.

● அப்படியானால் அது அறுதி ஈட்டுக் கடனாகவே அமையப் போகிறது.

# வலப்பனை பிரதேச சபைக்கு தோழர் பன்னீர்செல்வம் தெரிவு

## போராட்ட அரசியலுக்கு மக்கள் அங்கீகாரம்!



புதிய- ஜனநாயக கட்சியின் மலையகப் பிரதேச செயலாளர் தோழர் ச.பன்னீர் செல்வம் (ஆசிரியர்) அண்மையில் இடம் பெற்ற உள்ளூராட்சிசபைத் தேர்தலில் வலப்பனை பிரதேச சபைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதன் மூலம் புதிய- ஜனநாயக கட்சியின் வெகுஜனப் போராட்ட அரசியலுக்கு மக்கள் தமது அங்கீகாரத்தை வழங்கியுள்ளனர். அவ்வாறே நுவரேலியா பிரதேச சபைத் தேர்தலிலும் மக்கள் கணிசமான வாக்குகளை அளித்து தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர்.

புதிய- ஜனநாயகக் கட்சிக்குக் கிடைத்துள்ள வெற்றியும் அங்கீகாரமும் மலையகத்தில் எழுந்து வரும் புதிய அரசியல் எழுச்சிக்கு கட்டியும் கூறி நிற்கின்றன. தொழிற்சங்க அரசியல் ஏமாற்று இன்றி பண பலமோ குறுக்கு வழிகளில் வாக்குகள் பெறுதலோ இன்றி முற்றிலும் சமூக மாற்றத்திற்கான வெகுஜனப் போராட்ட அரசியலை முன்னெடுத்துச் சென்றே புதிய- ஜனநாயக கட்சி இத் தேர்தலைச் சந்தித்தது. அதற்கான அடையாள வெற்றியை மக்கள் வழங்கியுள்ளனர். மலைய மக்கள் சுய கௌரவத்துடன் சொந்த அரசியல் பலத்தில் எழுந்து நின்று முன்னோக்கி வழி நடக்க முடியும் என்பதையும் மலையக மக்களில் ஒரு பகுதியினர் அரசியல் ஒளிக்கீற்றாக வெளிப்படுத்தியுள்ளனர். இதன் மூலம் மலைய மக்கள் முன்னெடுத்து வரும் அடிப்படை உரிமைகளுக்கான வெகுஜனப் போராட்ட அரசியலுக்கு மேலும் பலம் சேர்க்கப்பட்டிருக்கிறது. இதே பாதையில் மலையக மக்கள் மேன்மேலும் அணிதிரண்டு முன் செல்லும் காலம் அதிக தூரத்தில் இல்லை என்ற நிலை மலையகத்தில் தோன்றியுள்ளதை இவ்வெற்றி வெளிப்படுத்துகிளது.

# அரசாங்க ஊழியர்களின் சம்பள உயர்வுப் போராட்டங்கள் நியாயமானதே!

அரச நிர்வாகம், கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளிலுள்ள அரச ஊழியர்களின் சம்பள உயர்வை வற்புறுத்தி மார்ச் மாதம் 16 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் அடையாள வேலைநிறுத்தமும், ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றன. ஏப்ரல் 3 ஆம் திகதி கொழும்பில் சத்தியாக்கிரகப் போராட்டமும் நடைபெற்றது. அவை மிகவும் வெற்றிகரமாக நடத்தப்பட்டன. அரசாங்க சார்பு தொழிற்சங்கங்கள் பழைய இடதுசாரிக் கட்சிகளினது தொழிற்சங்கங்கள் ஐ.தே.கட்சி தொழிற்சங்கங்கள், ஜே.வி.பி மற்றும் ட்ரொஸ்கிபவாதிகளின் தொழிற்சங்கங்களும் ஆதரவளிக்காத நிலையில் அத்தொழிற் சங்க அங்கத்தவர்களும், புதிய அரசியல் வேலைத்திட்டத்துடன் இயங்கும் தொழிற்சங்கங்களும் கலந்து கொண்டு அப்போராட்டங்களைக வெற்றிபெறச் செய்துள்ளனர்.

அரசாங்க ஊழியர்களுக்கு சிறிதளவு சம்பள உயர்வை சிபாரிசு செய்த 01/2006 சுற்று நிருபத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச ரத்துச் செய்து விட்டு புதிய சிபாரிசுகளைச் செய்ய குழுவொன்றை நியமித்துள்ளார். அதாவது 01/2006 சுற்று நிருபம் சில அரசாங்க அதிகாரிகளுக்கு சமமான சம்பளத்தை அடுத்தடுத்தமட்ட ஊழியர்களுக்கு மேற் படி சிபார்சுகள் வழங்கியதை சில அரசாங்க அதிகாரிகள் எதிர்த்தனால் ஜனாதிபதி அச்சி பாரிசுகள் அரச ஊழியர்களுக்கு அதிகபட்ச சம்பள உயர்வை வழங்குவதாகக் கூறி அதனை இரத்து செய்தார். அதனை இரத்து செய்தது மட்டுமன்றி அரச உழியர்களுக்கு மாதம்

தொடர்ச்சி 12ம் பக்கம்

இடைநிறுத்தப்பட்ட சம்பள உயர்வை வழங்கக் கோரி கொழும்பில் இடம் பெற்ற தொழிற்சங்கங்களின் ஆர்ப்பாட்டம்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# மேல்கொத்மலைத்திட்டத்தை காட்டிக் கொடுத்தோர் யார் 50 கோடி கையூட்டாகக் கிடைத்தனவாம்?

மலையகத்தின் தலவாக்கெல்லையில் அமைக்கப்பட இருக்கும் மேல் கொத்மலை நீர் மின் திட்டத்திற்கு கடந்த வாரம் அமைச்சர் ஜோன் செனிவிரட்னாவால் அடிக்கல் நாட்டப்பட்டது. யப்பானிய உதவியினால் முன்னெடுக்கப்படும் இத்திட்டத்தின் உடனடி நீண்டகாலப் பாதிப்புகள் அழிவுகள் பற்றி புதிய பூமியில் தொடர்ச்சியாகவே எடுத்துக் கூறப்பட்டு வந்துள்ளது. மேலும் இத்திட்டம் பற்றி அறிவிக்கப்பட்ட பின் மேல் கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. பதினேழு அமைப்புகளும் தனி நபர்களும் சேர்ந்து தோற்றுவிக்கப்பட்ட அவ்வமைப்பு பல்வேறு போராட்ட இயக்கங்களை தொடர்ச்சியாக முன்னெடுத்து வந்தது. இன மத வேறுபாடின்றி இவ் அமைப்பில் இணைந்து கொண்ட அனைவரும் மேல் கொத்மலைத்திட்டம் கைவிடப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திய இயக்கங்களை மலையகத்திலும் கொழும்பிலும் முன்னெடுத்து வந்தனர். யூஎன்.பி- சிறிலங்கா தலைமையிலான அரசாங்கங்கள் மேல் கொத்மலைத்திட்டத்தை முன்னெடுப்பதில் பேரினவாத முதலாளித்துவ அங்கீகாரத்துடன் விடாப்பிடியாகச் செயலாற்றி வந்துள்ளன. நமது திட்டத்தைத் தடுக்க மலையகத் தமிழர்கள் யார்?இவர்களது எதிர்ப்புக்கு நாம் காது கொடுக்கத் தேவை இல்லை என்ற நிலையிலேயே அவர்கள் செயலாற்றி வந்திருக்கிறார்கள். அத்தகைய பேரினவாத அரசாங்கங்களில் அமைச்சர் பதவிகளும் சலுகைகளும் பண வருவாய்களும் பெற்றுக் கொண்ட இ.தொ.கா, ம.ம.மு போன்ற தலைமைகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஒத்துழைப்பு வழங்கி வந்துள்ளன. இவர்கள் இரு பகுதியையும் விமர்சனம் செய்து கொண்ட புதிய கோஷ்டியினரும் அதே பேரினவாத அரசாங்கங்களுடன் பேரம் பேசி பதவிகள் பணமுடிபுகள் பெற்றுக் கொண்டதுடன் மேல் கொத்மலைத் திட்டத்திற்கு ஆதரவும் கொடுத்தனர்.

மேலும் அடிக்கல் நாட்டும் வைபவத்தைத் தொடர்ந்து அரசாங்கத் தரப்பிலிருந்து இ.தொ.கா - ம.ம.மு தலைமைகளுக்கு ஐம்பது கோடி ரூபா கைமாற்றப்பட்டதாகக் கொழும்பில் செய்திகள் கசிந்துள்ளன. மேல் கொத்மலைத்திட்டத்தை மட்டுமன்றி எதிர்வரும் சம்பள உயர்வுக்கான பேச்சுவார்த்தைக்கும் சேர்த்து வழங்கப்பட்ட கையூட்டாகவே கொள்ளப்பட வேண்டும். அன்றிலிருந்து இன்று வரை தாத்தா முதல் பேரன் வரை அண்ணன்மார் தம்பிமார் எல்லோரும் கைநிறையச் சங்கிலிகள் மோதிரங்கள் கழுத்து நிறைய தங்கமாலைகள் நெற்றியிலேயே சந்தனம் குங்குமம் எனத் தமிழ் மணம் பரப்பித் தலைவர்களாகப் பவனி வருவது இன்றும் தொடர்கிறது. இவையனைத்தும் கோடி, லட்சம் எனப் பெற்றுக் கொண்டதன் விளைவாகும். இவர்களது மாளிகைகளையும் வாகனத் தொடரணிகளையும் பார்த்து "நம்ம தலைவங்க என்ன மாதிரிப் போறாங்க" என்று மலையக மக்கள் இனிமேலும் ஏமாந்து கொள்வதற்குத் தயாரில்லை என்ற நிலையே மலையகத்தில் உருவாகி வருகின்றது.

மலையகத் தலைமைகளுக்கு மக்களையும் தொழிலாளர்களையும் ஏமாற்றி வந்த துரோக வரலாறு தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது. அதன் அண்மைய துரோகமே மேல் கொத்மலைத்திட்டக் காட்டிக் கொடுப்பாகும். இக்காட்டிக் கொடுப்பில் இத்தலைமைகள் மட்டுமன்றி சில புத்திஜீவிகளும் சமூக அக்கறையாளர்கள் எனப்பட்டோரும் அலட்சியம், மௌனம் வக்காலத்து வாங்கல் போன்றவற்றின் மூலம் துணை போயிருக்கிறார்கள். மலையகத் தேசியம் பற்றி உரத்துக் கூவும் சிலர் ஆரம்பத்தில் மேல் கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான இயக்கத்தில் சேர்ந்து இயங்குவது போன்று பாவனை காட்டிவிட்டு அதன் உச்ச கட்டப் போராட்ட நிலையில் பயந்து ஒதுங்கிக் கொண்டனர். அதுமட்டுமன்றி தமது இயலாமையை சீர்குலைவுகளை மறைக்க அடிக்கடி பத்திரிகை அறிக்கைகள் வெளியிட்டு தாம் நேர்மையானவர்கள் போன்று காட்டிக் கொள்ளவும் செய்தனர்.

நேர்மையாகவே மேல்கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கத்தை முன்னெடுத்த தலைவர்களையும் அமைப்புகளையும் பற்றி தூற்றவும் செய்கின்றனர். இத்தகையோரின் நேர்மீனத்தின் மறைவில் என்னென்ன கைமாறல்கள் சலுகைகள் கிடைத்தன என்பதை அறிய அதிக காலம் எடுக்கமாட்டாது. எனவே மலைய மக்களுக்கும் இளம் தலைமுறையினருக்கும் மேல் கொத்மலைத்திட்டக் காட்டிக் கொடுப்பின் மூலம் பல அனுபவங்களும் பட்டறிவுகளும் ஏற்பட்டுள்ளன. தொழிற்சங்க அரசியல் தலைமைகளின் ஏமாற்று ஒரு புறம் என்றால் மலையகத் தமிழ்த் தேசியம் என்ற குறுகிய பிரதேசவாதத்தால் மக்களை ஏமாற்ற முற்படும் சக்திகள் மறுபுறமாக இருந்து வருகின்றமை காணக் கூடியதேயாகும்.

இவ்விரு போக்குகளுக்கும் அப்பால் புதிய அரசியல் பாதையில் புதிய தலைமைத்துவத்தில் புதிய மலையகத்தை உருவாக்க மக்கள்- தொழிலாளர்கள் இளைஞர் யுவதிகள் அணிதிரண்டு வருகின்றனர் என்பது இன்றை போக்காக வளர்ச்சி பெற்று வருகிறது. அதற்கு புதிய ஜனநாயக கட்சி உரிய போராட்டத் தலைமையை வழங்கியும் வருகின்றது. மேலும் அப்பாதையில் உறுதியுடன் வழிநடப்பதே மலையகத்தின் எதிர் காலத்திற்கு உரிய தெரிவாகும்.

ச.மங்களநாதன்
அட்டன்

# இலவச பாடப்புத்தகங்கள் கிடைப்பது எப்போது?

மாணவர்களுக்கான இலவச பாடப் புத்தகங்கள் வவுனியா பிரதேசத்திற்கு முதலாம் தவணை முடிகிற இக் காலப் பகுதி வரையிலும் முழுமையாக வந்து சேரவில்லை. குறிப்பாக புதிய பாடத்திட்டத்தைக் கொண்டுள்ள தரம் 8க்கான புத்தகங்கள் தேசியப் பாடசாலைகளுக்கு வந்துள்ள போதிலும் குறைந்தளவே வந்துள்ளன.

இவ்வாறு பற்றக்குறையான புத்தக வரவால் மாணவர்கள் புத்தகங்களை போட்டோ பிரதி செய்து கற்க வேண்டியிருப்பதால் பெருந்தொகைப் பணம் செலவு செய்ய வேண்டியுள்ளனர். பற்றாக்குறை காரணமாக புத்தகம் வழங்குவதில் பாரபட்சம் காட்டப்படுகின்றது. இதனால் பெரும்பணச் செலவு, பாரபட்சம், புறக்கணிப்பு என்பவற்றுக்கு மாணவர் முகம் கொடுக்க வேண்டியுள்ளதால் கல்வி பாதிக்கப்படுகிறது.

இலவச பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டுவிட்டதாக அமைச்சு செயலாளர் அறிக்கை விடுத்திருக்கிறார். இலவச புத்தகங்கள் விநியோகச் சீரின்மைக்கு கோட்டக்கல்வி அதிகாரிகளும் அதிபர்களுமே பொறுப்பாவார் என கூறியுள்ளார். மேலதிகாரிகள் கீழ் அதிகாரிகள் மீது பழி சுமத்துவது அரச திணைக்களகங்களில் நடப்பது வழக்கமல்லவா? இருப்பினும் குறிப்பிட்ட அதிகாரிகள் பாதிக்கப்படுகின்ற சாதாரண மாணவர்களுக்கு வகை கூறுவார்களா? பாடப் புத்தகங்கள் பற்றாக்குறை ஏற்படக் காரணந்தான் என்ன? தில்லு முல்லுகளா? கொமிசன் அடிப்பா? அல்லது பேரினவாதப் புறக்கணிப்பா? இவை எவையாயிருந்தாலும் யாவும் சேர்ந்து சாதாரண கஷ்டப்படும் மக்களது பிள்ளைகளின் தலைகளிலேயே ஏற்றப்படுகின்றன. முதலாம் தவணை முடியப்போகும் தறுவாயிலும் கூட உரிய பாடப்புத்தகங்கள் வந்து சேரவில்லை என்பது கல்விக்கு இழைக்கும் பெரும் அநீதியாகும்.

வே. வேலுப்பிள்ளை
வவுனியா




நன்றி : சுடர் ஒளி நாளிதழ்
06- 03- 2006

# நாலு நடக்கும் உலகிலே — நற்குணன்

## தோல்விக்குக் காரணம்

பிரித்தானிய பாதுகாப்புத்துறை நிபுணர் ஒருவர் ஈராக்கில் போரை வென்றதை அடுத்து அமெரிக்கப் படையினர் செய்த முக்கியமான தவறுகள் என அமெரிக்கப் படைகள் நடந்து கொண்ட விதம் பற்றிய விமர்சனங்கள் சிலவற்றை அப்போதே பிரதமர் பிளேயருக்கு தெரியப்படுத்தியதாகவும் அவர் அதைக் கணிப்பிலெடுக்கவில்லை எனவும் ஒரு பத்திரிகைச் செய்தி கூறுகிறது. ஆட்டம் தோல்வி கண்டால் ஆயிரம் விளக்கங்கள் உண்டு. அமெரிக்கப் படைகள் சதாம் ஹுசேனை வீழ்த்திய பின்பு தொடர்ந்தும் ஈராக்கில் நிற்க விரும்பியதாலேயே பல "தவறுகள்" நடந்தன என்பது தான் உண்மை. எல்லாத் தவறுகளையும் விமர்சனங்களையும் விமர்சிக்கிற நிபுணர்கள் பொய் சொல்லி ஆக்கிரமிப்புப் போரைத் தொடங்கியது தவறு என்பதை மட்டும் ஏன் சுட்டிக்காட்டுவதில்லை.

அமெரிக்கப் படைகள் வேறெந்த விதமாக நடந்து கொண்டிருக்க முடியும்? ஒரு ஆக்கிரமிப்புப்படை செய்கிற தவறுகளையெல்லாம் அமெரிக்காவின் படைகள் செய்துள்ளன. அமெரிக்கப்படைகள் சந்திக்கின்ற ஒவ்வொரு தோல்விக்கும் காரணம் அதன் நோக்கங்கள் தாம்.

## சங்கரிக்கு விளையாட்டு சனங்களுக்குச் சீவன் போகுது

ஜெனீவா பேச்சுவார்த்தை நிகழ்ச்சி நிரலை மாற்றுவது பற்றிப் பேசுவது என்றால் தாம் வெளியேறப் போவதாக விடுதலைப் புலிகளின் பேச்சாளர் அன்ரன் பாலசிங்கம் மிரட்டியதற்கு அரசாங்கக் குழு பணிந்து போனது தவறு என்று ஆனந்தசங்கரி அங்கலாய்த்திருக்கிறார். தாங்கள் விலகிக்கொள்ளப் போவதாக அரசாங்கத் தரப்பு பதிலுக்கு மிரட்டியிருக்கலாம் என்பது அவரது, கணிப்பு

அரசாங்கம் பேச்சுவார்த்தைகளில் பங்கு பற்ற முன்னமே ஆனந்தசங்கரி ஆலோசனை சொல்லியிருந்தால் ஜெனிவாவுக்குப் போய்ப் பணத்தையும் நேரத்தையும் செலவிட்டிருக்க வேண்டியதில்லையே. அதைவிட முக்கியமாக, ஆனந்தசங்கரி மூலம் பேசுகிற ஒரு அயல் அரசாங்கம் தானே அதை வெளிவெளியாகச் சொல்லியிருந்தால் இன்னும் சுலபமாக இருந்திருக்குமே.

## தன் முதுகு ஒரு போதும் தனக்கே தெரியாது

வாசுதேவ நாணயக்கார கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் வெற்றிலைச் சின்னத்திற் போட்டியிடுவதைக் கண்டித்து அவர் பேரினவாதத்திடம் சரணாகி விட்டாரென்று விக்கிரமபாகு கருணாரத்ன பேசியிருக்கிறார். பின்னவர் தன்னை மேல்மாகாண சபையின் சபாநாயகராக்கிக் கொள்ள ஜே. வி. பியிடமும் யூ என். பியுடனும் என்ன விதமான சமரசங்கள் செய்தார் என்பதை அவர் மறந்து விட்டார். அவருடைய துரோகத்தால் புதிய இடதுசாரி முன்னணி சிதைந்தது. அவர் களவாடிச் சென்ற மேசைச் சின்னத்தைக் கைவிட்டு இப்போது முச்சக்கரவண்டியில் போய் நிற்கிறாரே. இது ஏன்?

## பழைய கூத்தும் புதிய கூத்தாடிகளும்

ஆற்றில் வந்த வெள்ளம் கிணற்று வெள்ளத்தையும் அள்ளிக் கொண்டு போனமாதிரி ஆறுமுகன் தொண்டமான் முதலில் விடுதலைப் புலிகளின் பக்கமும் பிறகு அரசாங்கத்தின் பக்கமும் பாய்ச்சல் காட்டிக் கடைசியில் சந்திரசேகரனையும் இழுத்துக் கொண்டு போய் அரசாங்கத்தில் இணைய வைத்திருக்கிறாரே. இது அவருடைய நெறியாளர்கையில் நடந்த கூத்தா அல்லது இருவரையும் வைத்து ஒரு அந்நியத் தூதரகத்தின் நெறியாள்கையில் நடத்த கூத்தா என்பதை யாரும் விரும்பிய படி ஊகித்துக் கொள்ளலாம். ஆனால் இந்தக் கூத்து ஒன்றும் புதியதல்ல. இது "தாத்தா" காலத்துக் கூத்து.

இன்று மலையகத்தின் தொழிற்சங்கவாத- பிரதேசவாத அரசியல் பாரம்பரியத்தில் வந்த அத்தனை தலைமைகளும் தறிகெட்டுத் தன்னலத்திற்காக என்னவும் செய்ய ஆயத்தமாக உள்ளனர் என்பது தான் உண்மை. இவர்கள் எல்லாரையும் மட்டுமல்ல, இவர்களுடைய சந்தர்ப்பவாதப் பாதையையும் நிராகரிக்காமல் மலைய மக்களுக்கு விடிவு ஏற்படுமா?

## பழி ஓரிடம், பாவம் இன்னோரிடம்

கொழும்பு மாநகர சபை யூ என். பி வேட்பாளர் பட்டியலில் அனுமதியில்லாமல் மாற்றங்களைச் செய்ததில் மஹ்ரூஃப், மிலிந்த மொறகொட இருவருக்கும் பெரிய பங்குண்டு. சனாதிபதித் தேர்தலின் போது விடுதலைப் புலிகளைப் பிளவுபடுத்தியதில் யூஎன்.பி தலைமையில் பங்கு பற்றிய குட்டை அவிழ்த்து விட்டவர்கள் மொறகொடவும் நவீன் திஸ்ஸாநாயக்கவும். இவர்களில் யார் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. யார் யாரோ சிற்றூழியர்கள் தண்டிக்கப்பட்டுள்ளனர். இப்படிப்பட்ட ஒரு கட்சியால் ஊழலற்ற நிர்வாகத்தை நாட்டுக்கோ நகரத்துக்கோ தர இயலுமா?

தேர்தல் அரசியலில் தெரிவுகள் அதிகம் உள்ளது போல தெரிந்தாலும், உண்மையில் தெரிவுகளே இல்லை என்பதை ஒவ்வொரு பெரிய அரசியற் கட்சியையும் தேர்தல் கூட்டணியையும் கவனித்தால் விளங்கும்.

## ஜோர்ஜ் புஷ்சும் அவரது நாய்களும்

மார்ச் 2 திகதி அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் தனது இந்தியாவுக்கான கன்னிப் பயணத்தின் போது புஷ்சின் பாதுகாப்புக்கென அமெரிக்க இரகசியப் பிரிவின் மு-9 அணியைச் சேர்ந்த நாய்களும் புது டில்லி சென்றிருந்தன. அந்த நாய்கள் இந்தியாவின் ஐந்து நட்சத்திர கோட்டேல்களில் தங்கவைக்கப்பட்டிருந்தன. புஷ் பயணம் செய்யும் இடங்களுக்கு முதலில் நாய்கள் அனுப்பப்பட்டு மோப்பமிடப்பட்டன. புதுடில்லி ராஜ்காட்டில் "மகாத்மா" காந்தியின் நினைவாலயத்தில் ஜனாதிபதி புஷ் தம்பதியினர் மலர் வளையம் வைக்க ஏற்பாடாகியிருந்தால் காலையில் பதினேழு அமெரிக்க மோப்ப நாய்கள் தமது நக்சி மொகரும் வேலையில் ஈடுபட்டிருந்தன. இந்திய சுதந்திரத்தின் தேச பிதா எனக் கூறப்படும் அகிம்சாவாதியான காந்தியின் நினைவாலயத்தைக் கூட அந்த அமெரிக்க நாய்கள் விட்டுவைக்கவில்லை. இந்தியர்களுக்கு அமெரிக்க ஆளும் வர்க்கம் கொடுக்கும் கௌரவம் இத்தகையதுதான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# தெற்கில் பேரினவாதிகளின் இனவெறிக் கூச்சல்!

கொழும்பில் பேரினவாதிகளின் கூச்சல் அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகிறது. அவற்றில் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் முக்கியஸ்தர்களும் ஜே.வி.பி யின் பிரமுகர்களும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்ல என்பதை வெளிப்படுத்தி வருகிறார்கள். முன்னைய கே.எம்.பி.ராஜரட்ணாவின் மறு உருவமாகக் காணப்படும் ஹெல உறுமயவின் கொள்கை வகுப்பாளர்களில் ஒருவரான சம்பிக்க ரணவக்க அண்மையில் ஆங்கில நாளிதழுக்கு பேட்டியளித்திருந்தார். அதில் வடக்கிலிருந்து நாற்பதினாயிரம் படையினரின் சவப் பெட்டிகள் இங்கு வந்தால் கொழும்பிலிருந்து நாலு லட்சம் தமிழர்களின் சவப்பெட்டிகள் கிளிநொச்சிக்கு அனுப்பப்படும் என முன்னெச்சரிக்கை செய்வது போன்று கூறி இருந்தார். இத்தகைய இன வெறி விசர்க் குரைப்பைப் பற்றி யாரும் அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை. மேலும் அதே ஹெல உறுமயவின் சிரேஷ்ட தலைவரும் முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபரும் தற்போதைய மகிந்த சிந்தனைக்கான பொலீஸ் ஆலோசகருமான கொட்டகதெனிய நீதிமன்றத்தில் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு வற்புறுத்தும் ஒரு வழக்கைத் தொடுத்திருக்கிறார். இதே இன வெறி மனிதரால்தான் இரண்டு மாதங்களுக்கு முன்பு கொழும்பில் தமிழ் மக்கள் மீதான சுற்றிவளைப்புகள் தேடுதல்கள் கைதுகள் இடம் பெற்றன.

அதேவேளை அண்மையில் வடக்கிலிருந்து கிழக்கைப் பிரிப்பதற்கான ஒரு மாநாடும் கலந்துரையாடலும் கொழும்பில் இடம் பெற்றுள்ளது. இதில் ஜே.வி.பி. ஹெல உறுமய முன்னணி என்பன இணைந்து கிழக்கின் மக்களுக்காக அழுது கண்ணீர் வடித்து நின்றனர்.

அத்துடன் நோர்வையை வெளியேறுமாறு கோரி தேசிய பிக்குமார் சங்கம் ஓர் ஊர்வலத்தை நடாத்தியது. ஊர்வலத்தில் ஒரு சிறு தொகையான பிக்குமாரே கலந்து கொண்டனர். இருப்பினும் பேச்சுவார்த்தை புலிகள் இயக்கம் நோர்வே என்பனவற்றுக்கு எதிரான முழக்கங்களையே கேட்க முடிந்தது.

இவ்வாறு நாளாந்தம் தெற்கிலிருந்து இன வெறிக் கூச்சல்கள் வெளிவந்த இருக்கின்றன. மேற் கூறியவர்கள் பேரின வாதம் பேசும் போது சிறிலங்கா சுதந்திரக் கட்சி யூஎன்.பி. கட்சி ஆகிய வற்றில் உள்ள பேரினவாதிகள் பேச முடியாது வாயடைத்து நிற்கிறார்கள். இவ்வாறு ஜே.வி.பி- ஹெல உறுமயவின் பேரினவாத வெறிக் கூச்சாலல் தேசிய இனப்பிரச்சினை மேலும் சிக்கலடைந்து செல்கிறது. பேச்சுவார்த்தை உரிய தடத்திற்கு வரமுடியவி ல்லை. தீர்வு திக்குத் தெரியாத காட்டின் நடுவே விடப்பட்டுள்ளது. ஆனால் நாளாந்தம் பல்வேறு பிரச்சினைகளால் பாதிக்கப்படுவது வடக்கு கிழக்கு மக்களாகவே உள்ளனர். அதேவேளை இப் பேரினவாதக் கூச்சலால் சிங்கள உழைக்கும் மக்கள் எதிர்நோக்கும் அன்றாடப் பிரச்சினைகளில் இருந்து திசைதிருப்பப் பட்டு ஏமாற்றப்படுகின்றனர்.

# ராணுவ உயர் பாதுகாப்பு வலயத்திற்காக வலி வடக்கிலிருந்து விரட்டப்பட்ட மக்களின் அவல நிலை!

- வலிவடக்கில் ராணுவ உயர் பாதுகாப்பு வலயத்திற்காக மக்கள் சொந்த இடங்களில் இருந்து விரட்டப்பட்டு 15 வருடங்களில் ஆகி விட்டன.
- ராணுவப் பிடியில் அகப்பட்டுள்ள நிலத்தின் விஸ்தீரணம் 58.5 சதுர கி.மீ. ஆகும்.
- 36 கிராமசேவையாளர் பிரிவுகளில் இருந்து 15 ஆயிரத்து 482 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டன. அவர்களின் மொத்த எண்ணிக்கை 65 ஆயிரத்து 756 உறுப்பினர்கள்
- இவர்களில் 60 வீதமானவர்கள் விவசாயிகள். 30 வீதமானவர்கள் மீனவர்கள். பத்துவீதமானோர் ஏனைய தொழில் புரிவோர் .
- இடம் பெயர்ந்து அவல வாழ்வு வாழ்ந்து வரும் இம்மக்கள் பல்வேறு நலன்புரி நிலையங்களிலும் உறவினர் இல்லங்களிலும் நிரந்தரமற்ற வாழ்வை வாழ்ந்து வருகின்றனர்.
- இம் மக்கள் பெறும் ஒரே ஒரு சலுகை வாராந்த உலர் உணவை அரசாங்கத்திடமிருந்து பெறுவதேயாகும். இதற்காக அரசாங்கம் மாதம் ஒன்றிற்கு 30 கோடி அறுபது லட்சம் ரூபாவை செலவிடுகிறது.


இத்தகவல் யாழ் அரசாங்க அதிபர் உயர் நீதிமன்றத்திற்கு அளித்த அறிக்கையில் இருந்து பெறப்பட்டதாகும்

# அமெரிக்காவில் மூளைச் சலவை!

எதிர்வரும் யூலை மாதத்தில் அமெரிக்காவின் வாஷிங்டன் டி.சி. யில் "உலகின் வருங்காலத் தலைவர்களின்" ஒன்று கூடல் நடைபெற உள்ளது. 16 வயது முதல் 19 வயது வரையான பாடசாலைகளின் மாணவத் தலைவர்களே இவ்வாறான ஒன்று கூடலுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். நாற்பத்தைந்து நாடுகளில் இருந்து மொத்தம் 550 மாணவத் தலைவர்கள் இதில் கலந்து கொள்வார்கள். வருடாவருடம் நடைபெறும் இவ் ஒன்று கூடலின் நோக்கம் சர்வதேச உறவுகள் இராஜதந்திர உறவுகள் மாற்றமடைந்து வரும் உலகப் பொருளாதாரம் போன்றவற்றைப் பற்றிய அமெரிக்க ஜனாதிபதி செயலகத்தின் ஊடான வழிகாட்டல்கள் இடம் பெறுவதுடன் விளக்கங்கள் வழங்கப்படும். அத்துடன் மாணவத் தலைவர்களின் திறமைகள் விவாதிக்கும் ஆற்றல்கள் தலைமைத்துவ ஆளுமை விருத்தி என்பனவற்றுடன் தற்போதைய உலக விவகாரங்கள் சமூக பண்பாட்டு அம்சங்கள் என்பனவும் விவாதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இருந்து 66 மாணவத் தலைவர்கள் பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அப்பாடசாலைகள் மேட்டுக்குடிகளின் மாணவர்கள் கல்வி பயிலும் பாடசாலைகளாம். அவற்றினுள்ளும் தெரிந்தெடுத்துக் கொள்ளப்பட்டவர்கள் மேட்டுக் குடி மாணவர்கள்களேயாவர். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உலகமயமாதலுக்கான மூளைச் சலவைக்காக அதற்குத் தகுதியான மாணவத் தலைவர்களே அழைத்துத் செல்லப்படுகிறனர்.

# தோழர் தருமுவின் மறைவுக்கு புதிய-ஜனநாயக கட்சியின் அஞ்சலி!



த.தருமலிங்கம்

சங்கானை நிச்சாமம் தோழர் த. தருமலிங்கம் (தருமு) அவர்களின் மறைவு ஆழ்ந்த துயரத்திற்கு உரியதாகும். அவர் தனது இளமைக் காலம் முதலாக சாதிய தீண்டாமை ஒடுக்கு முறைக்கும் ஏனைய சமூக அநீதிகளுக்கு எதிராகவும் போராடி வந்த ஒருவராவார். 1960பதுகளின் ஆரம்பத்தில் கம்யூனிஸ்ட் வாலிபர் இயக்கத்திலும் பின்பு கம்யூனிஸ்ட் கட்சியிலும் இணைந்து ஒரு பொதுவுடமைப் போராளியாகிக் கொண்டவர். 1966ம் ஆண்டு ஒக்ரோபர் 21ன் சாதிய தீண்டமைக்கு எதிரான எழுச்சி ஊர்வலத்தில் கலந்து கொண்ட முன்னணி இளைஞர்களில் ஒருவராக இருந்தார். பின்பு கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் முன்னெடுத்த புரட்சிகரப் போராட்டங்களில் சங்கானையிலும் ஏனைய இடங்களிலும் முன்னணியில் நின்றார். அவர் ஒரு உறுதி மிக்க போராளியாக இருந்த காரணத்தினால் பல மாதங்கள் ஏனைய தோழர்களுடன் சந்தேகத்தின் பேரில் விளக்கமறியலிலும் இருந்தார். அத்துடன் போராட்டங்களில் பங்கு பற்றி பல்வேறு கஷ்டங்களையும் அனுபவிக்க வேண்டி ஏற்பட்டது. இருப்பினும் சாதிய தீண்டமையை முறியடிப்பதில் அன்று உறுதியாகவும் துணிவாகவும் போராடிய தோழர்களில் தோழர் தருமு முக்கிய பங்காற்றியமையை இவ் வேளை நினைவு கூர்கின்றோம்.

தோழர் தருமு சங்கானைக் கிராமத்திற்கும் அயற்கிராம மக்களுக்கும் அன்றைய சூழலில் ஆற்றி வந்த சுயநலமற்ற சேவை உயர்வாக மதிக்கப்படவேண்டியதாகும்.அவரது மறைவு நிச்சாமம் கிராமத்திற்கும் அயற் கிராமங்களின் மக்களுக்கும் குடும்பத்தினருக்கும் துயரம் தரும் நிகழ்வாகும். தோழர் தருமுவின் மறைவுக்கு புதிய- ஜனநாயக கட்சி மத்தியகுழு தனது ஆழ்ந்த அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

# கண்டதும் கேட்டதும்

-சாந்தன்-

## இனம் என்ன? சனம் என்ன?

யாழ் போதனா வைத்தியசாலையின் புற்று நோயாளர் வார்ட் நிர ம்பி வழிகிறது. முப்பது பேருக்கு மட்டுமே கட்டில் வசதி இருக்க 150 நோயாளர்கள் வரை நிலத்தில் படுத்திருந்தே சிகிச்சை பெறுகின்றனர். மலசல கூட வசதி கூட அதே வார்டில் இல்லை. இவை வேதனைக்குரிய புற்று நோயாளர்களை மேலும் கொடுமைப்படுத்துவதாகும். அதேவேளை புலம் பெயர்ந்தோர் தத்தமது ஊர்களில் போட்டி போட்டுத் தமது பெயர் புகழுக்காக கோவில்கள் கோபுரங்கள் சுற்றிவர மதில்கள் வர்ணப்பூச்சுகள் என்றவாறு லட்சம் கோடிக் கணக்கில் செலவிட்டு வருகிறார்கள். இந்தப் புண்ணியவான்களின் கண்களுக்கு மருத்துவ மனைகளில் நம்மவர்கள் படும் வேதனைகள் துன்பங்கள் கண்களில் காதுகளில் எட்ட வில்லையே. அவர்களும் மனிதர்கள் என்று பார்க்க மறுத்தாலும் தமிழர்கள் என்றாவது இப் புலம் பெயர்ந்த பணம் படைத்தோர் பார்ப்பதில்லையே. பணத்திற்கு முன்னால் இனம் என்ன சனம் என்ன?

## சொகுசு வாகனத்தை யாரும் மறுக்கவில்லை

தற்போதைய பா.உ க்கு ரூபா 35 லட்சம் பெறுமதியான சொகுசு வாகனங்கள் தீர்வை இன்றி வழங்கப்படுகிறது. இதற்கான கடனை பிரதான வங்கிகள் மிகக் குறைந்த வட்டியில் வழங்குகின்றன. தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜே.வி.பி உறுப்பினர்கள் எவ்வகையிலும இதனை நிராகரிக்கவில்லை. இது பா.உ.க்கு கிடைக்கும் வழமையான வரப்பிரசாதந்தான். அண்மையில் அகால மரணமடைந்த கிழக்கின் தமிழ் பா.உ வின் மனைவி கேட்டுக் கொண்டமைக்கு ஏற்ப அவருக்கும் இச்சலுகை கிடைக்க ஜனாதிபதி அனுமதி வழங்கியுள்ளார். பாராளுனஂற சொகுசு சலுகை அனுபவிப்பதில் எக்காரணம் கொண்டு யாரும் பின் நிற்பதில்லை.

## ரொபியும் கடதாசியும்

அன்று நுவரேலியா மாவட்ட உள்ளுராட்சி சபைத் தேர்தல் வேட்புமனு இறுதி நாள். முன் வரிசையில் முக்கிய கட்சிகளின் தலைவர்கள். புதிய ஜனநாயக கட்சியின் வலப்பனை பிரதேச சபை முதன்மை வேட்பாளரும் மலையகப் பிரதேசச் செயலாளருமான தோழர் பன்னீர் முன்வரிசையில். அவரது பக்கத்தில் யூ என். பி யின் பாராளுமன்ற பெண் உறுப்பினர் தனக்கு கிடைத்தது ஒரு ரொபி தான் என்றும் அதனைத் தானே சாப்பிடுவதாகக் கூறி சிரித்தபடியே ஒரு பகிடிபோன்று ரொபி சுற்றப்பட்ட வர்ணக் கடதாசியை புதிய ஜனநாயக கட்சி முதன்மை வேட்பாளரின் கைக்குள் திணித்தார். அப்பொழுது அவர் இதனை எனது கைக்குள் திணிக்க வேண்டாம். ரொபி உங்களுக்கு அதனைச் சுற்றிய கடதாசி எனக்கா? எனக் கேட்டு, இப்படித்தான் மலையக மக்களை நீங்களும் உங்களது முன்னையவர்களும் ஏமாற்றி வந்தீர்கள். ஆனால் இனிமேலும் அது நடக்காது என அவரது மூஞ்சிக்கு நேரே கூறிக் கொண்டார். அம்மணியின் முகம் இருண்டு கொண்டது.

## பேரினவாதமும் மேலக முன்னணியும்

மாகாணசபை மாநகரசபை பிரதேச சபைத் தேர்தல் வந்ததும் மேல் மாகாணத் தமிழர்களின் தன்மானம் பற்றியும் பேரினவாத கட்சிகளுக்கு எதிராக வீறாப்புப் பேசி ஏணிக்கு இடுங்கள் வாக்குகள் என முழங்குவார் மனோவானவர். பின் பாராளுமன்றத் தேர்தல் வந்ததும் பச்சைக் கொடிபிடித்து யானைக்குப் போட்டு என்னைத் தெரிவு செய்யுங்கள் என்பார். மேலும் வேடிக்கை என்வென்றால் இதே ஏணியை மலையகத்திற்கு தூக்கிச் சென்று ஏற்கனவே வெற்றிலைக்கு வக்காலத்து வாங்கி பதவிகள் பெற்ற சதாகம்பனியுடன் கூட்டுச் சேர்ந்து நிற்கிறார்கள். மேலகத்தில் பணம் தாராளமாகத்தான் விளையாட்டைக் காட்டுவதால் ஊடகக் காரகர்களுக்கும் நல்ல கொண்டாட்டமாம். அதனால் செய்திகளும் தாராளம்.

## இ.போ.ச வேலைக்கு 50 ஆயிரம்

வடபுலத்தில் இ.போ.ச வில் வெற்றிட ஆட்சேர்ப்பு இடம் பெறுகிறது. சாரதி நடத்துனர் மற்றும் பதவிகளுக்கு சிபார்சுகள் பல மட்டங்களில் நடைபெறுகின்றன. அதற்கான கொடுக்கல் வாங்கல்களில் சிலர் ஈடுபடுவதாகவும் அறிய முடிகிறது. இதில் முன்னாள் யாழ் மாவட்ட பா.உ இந்நாள் கொழும்பு மாவட்டப் பா.உ ஆகவும் உள்ளவர் ரூபா ஐம்பதினாயிரம் விலைபேசி வேலை பெற்றுக் கொடுப்பதாக புறக்கோட்டை வர்த்தக வட்டாரத்தில் பேசிக் கொள்ளப்படுகிறது.

## அதிபரை கடிந்த கனேசர்

கொழும்பில் உள்ள பாடசாலை ஒன்றின் அதிபர் மேல் மாகாணசபை முதலமைச்சரை நேரில் சந்தித்து தமது பாடசாலையின் நிலைபற்றி எடுத்துக் கூறி அபிவிருத்திக்காக கணிசமான தொகையைக் கேட்டுக் கொண்டார். முதலமைச்சரும் அதனை ஏற்று நிதி ஒதுக்கீடு செய்தார். இதனை அறிந்த மேலக முன்னணியின் நாயகன் அந்த அதிபரைச் சினந்து கடிந்து கொண்டாராம். ஏன் என் மூலமாக முதலமைச்சரைச் சந்திக்கவில்லை என்பதே சினத்துக்குக் காரணம். அப்படி அவர் மூலம் சென்றிருந்தால் ஏணியில் ஏற இன்னும் ஆட்களைச் சேர்த்திருக்கலாம் அல்லவா?

## வாசுவும் வாக்காளரும்

கொழும்பில் ஒரு முக்கிய இடத்தில் தேர்தல் கூட்டம் அதன் ஆரம்பத்திற்கு முன்பு கூட்டம் கூட்டமாக நின்ற பார்வையாளர்கள் மத்தியில் தேர்தல் விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஒருவர் கூறினா "என்றாலும் வாசு இப்படி மகிந்தவோடு சென்று வெற்றிலையில் கேட்டிருக்கக் கூடாது. அவருக்குக் மேயர் ஆசை வந்து விட்டது". அதனை வேறுசிலர் ஆமோதித்து "அது சரிதான்" என்றனர். மற்றொருவர் கேட்டார் "அது சரி நீங்கள் யாராவது இது வரை எந்த ஒரு இடது சாரிக்காவது வாக்களித்தது உண்டா? வாசு கொழும்பில் முன்பு கேட்டபோது அல்லது ஜனாதிபதித் தேர்தலில் கேட்ட போது யாருக்கு புள்ளடி போட்டீர்கள். போராடுவதற்கு எதிர்ப்பு குரல் கொடுப்பதற்கு ஏதாவது சிபார்சு பொலீஸ் பிரச்சினைக்கு இடதுசாரிகள் தேவை. ஆனால் தேர்தல் வந்தால் மட்டும் யானைக்கும் யூஎன்.பி க்கும் போட்டுக் கொள்வது. இது தான் தலைநகரின் தமிழர் குணமும் நிலையும் என்று சூடாகக் கொடுத்தார். மறுபேச்சு எழுவே இல்லை.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# மலையகத் தலைமைகளும் உள்ளூராட்சி சபைத் தேர்தலும்

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் இ.தொ.கா, ம.ம.மு என்பனவற்றுக்கு சரிவு ஏற்பட்டுள்ளது என்பது உண்மை. அக் கட்சிகள் இரண்டும் தொடர்ந்து ஐ.தே.கட்சியுடன் இணைந்திருந்தன. குறிப்பாக கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அவை ஐ.தே.கட்சி வேட்பாளரணில் விக்கிரமசிங்ஹவை ஆதரித்தன. அத்தேர்தலில் மஹிந்த ராஜபக்ச வென்றதனால் அவற்றின் நிலைமை தர்மசங்கடமாகியது. இ.தொ.கா விலிருந்து ஏற்கனவே பிரிந்து சென்று தனியாக இயங்கி வந்த சதாசிவம் மஹிந்த ராஜபக்சவை ஆதரித்தார். ம.ம.மு யிலிருந்து கொண்டே மாகாணசபை உறுப்பினர்களான அருள்சாமியும் திகாம்பரமும் மஹிந்தவை ஆதரித்தனர். அருள்சாமிக்கு மத்திய மாகாண கல்வியமைச்சு கிடைத்தது. அவர்களும் அய்யாத்துரையும் (தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவராக இருந்து பின்னர் ம.ம.மு யில் இணைந்து பின்பு பிரிந்து கொண்டவர்) இணைந்து தொழிற் சங்கத்தை அமைத்தனர்.

இ.தொ.கா விலிருக்கும் சில எம்.பிக்களும் அரசுடன் இணைந்து கொள்ள இரகசிய நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்தனர். இதனால் இ.தொ.கா. தலைவர் ஆறுமுகத்திற்கும், ம.ம.மு தலைவர் சந்திரசேகரத்திற்கும் சொந்தக் கட்சிக்குள் பாரிய எதிர்ப்புகள் தோன்றின. இதனை சமாளிக்க அவர்கள் இருவரும் ஜனாதிபதி மஹிந்தவின் அரசாங்கத்தில் இணைந்து கொண்டு அமைச்சர் பதவிகளை பெற்றுக்கொள்ள முயற்சித்தனர். அதற்கு மஹிந்த இணக்கம் தெரிவிக்காது இழுத்தடித்து வந்தார். இ.தொ.கா தலைவர் ஆறுமுகன் ஜனாதிபதி ராஜபக்சவிற்கு அழுத்தம் கொடுப்பதற்காக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு ஆதரவு வழங்குவதாக வன்னி சென்று தெரிவித்தார். ஏற்கனவே ம.ம.மு தலைவர் சந்திரசேகரம் வன்னிக்கு அடிக்கடி சென்று வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இதனை அவதானித்த இந்திய தூதுவர் நிரூபமா ராவ் ஜனாதிபதி ராஜபக்ஷவுடன் பேச்சுவார்த்தை நடாத்தி இ.தொ.கா வை ஜனாதிபதியின் அரசாங்கத்துடன் இணைத்துக் கொள்ள செயல்பட்டார்.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டது. இ.தொ.கா, ம.ம.மு தலைமைகள் ஜனாதிபதி மஹிந்தவுடன் பேச்சுவார்த்தை நடாத்தி பெரும்பாலான இடங்களில் அரசாங்கத்துடன் (ஐ.ம.சு.மு) இணைந்து போட்டியிடுவதென தெரிவித்தனர்.

இதனால் ஐ.ம.சு. முன்னணி பட்டியல்களில் போதிய இடங்கள் கிடைக்காது என்பதால் சதாசிவம், அருள்சாமி போன்றோர். (ஏற்கனவே ஜனாதிபதியுடன் நெருக்கமானவர்கள் கூட்டணி அமைத்து போட்டியிட தீர்மானித்தனர். சதாசிவம், அருள்சாமி, மனோகணேசன் தலைமையிலான அமைப்புகள் ஜனநாயக மக்கள் கூட்டணி அமைக்கப்பட்டுள்ளதாக அறிவித்தனர். அதன் தேர்தல் சின்னமாக சதாசிவத்தின் மீன் சின்னத்தையே ஏற்க இருந்தனர். அருள்சாமி மனோ கணேசனின் ஏணி சின்னத்தையே ஏற்க வேண்டுமென்றார். சதாசிவம் தனியாக மீன் சின்னத்தில் வேட்பாளர்களை நிறுத்தினார். அருள்சாமி ஜனநாயக மக்கள் கூட்டணி என்று கூறிக்கொண்டு ஏணிச்சின்னத்தில் வேட்பாளர்களை நிறுத்தினார். ஏணி சின்னத்தில் போட்டியிட்ட ம.ம.முயின் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்களில் அதி சுமானோர் வெற்றி பெற்றுள்ளனர்.

இவர்களின் வெற்றியையும், மீன் சின்னத்தில் போட்டியிட்டு வென்றவர்களின் வெற்றியையும். மலையகத்தில் மாற்று அரசியல் வெற்றி பெற்றுள்ளதாகவும், மலையகத்தில் பன்முக அரசியல் பண்பாடு வளர்ந்துள்ளதாகவும் கூறுவதற்கு ஆதாரமாகக் கொள்கின்றனர்.

மலையக மக்களைத் தொடர்ந்தும் அடிமைகளாக வைத்திருக்க விரும்பும் இ.தொ.கா, ம.ம.மு தலைமைகளிலிருந்து பணம் பதவி பங்குகள் உரியவாறு கிடைக்காத காரணத்தால் பிரிந்து வந்துள்ளவர்களே ஏணி சின்னத்திலும் மீன் சின்னத்திலும் போட்டியிட்டு வென்றவர்களே தவிர புதிய அரசியல் கொள்கை நடைமுறை கொண்டவர்கள் அல்லர்.

எனவே இந்த தேர்தலில் இ.தொ.கா, ம.ம.மு என்பவற்றுக்கு ஏற்பட்டிருக்கும் சரிவும் அதிலிருந்து பிரிந்து சென்றவர்களில் சிலருக்கு கிடைத்திருக்கும் வெற்றியும் மலையகத்தில் அரசியல் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக கூறுவதற்கு சான்றுகளாகக் கொள்ள முடியாது.

பேரினவாத முதலாளித்துவ வாதிகளுடன் கூட்டுசேர்ந்து அவர்களின் கால்களை பகிரங்கமாக வெளிச்சத்தில் நக்குபவர்களுக்கும், இரகசியமாக இருட்டில் நக்குபவர்களுக்கும் அடிப்படையில் வித்தியாசம் எதையும் காண முடியுமா? அதுதான் மலையகத் தலைமைகளும் அவற்றிலிருந்து பிரிந்தவர்களும் பேரினவாதிகளிடம் முதலாளித்துவ வாதிகளிடமும் மலையக மக்களை அடிமைகளாக்கி மொத்த வியாபாரம் செய்வதையே அரசியலாக கொண்டுள்ளனர் என்பதே உண்மை நிலையாகும்.

ஆனால் பேரினவாதத்திடமும் முதலாளித்துவத்திடமும் சரணடையாத சுதந்திரமான அரசியல் பாதையே மலையக மக்களின் உண்மையான அரசியல் பாதையாக இருக்க முடியும். இது கடினமான பாதை என்றாலும் சரியான பாதையேயாகும்.

அத்தகைய ஒரு அரசியல் பாதையிலேயே புதிய- ஜனநாயக கட்சி தோழர்கள் கடந்த 27 வருடங்களாக பயணித்து வருகின்றனர். அவர்களின் புரட்சிகர வெகுஜனப் போராட்டப் பாதை தொடரும் என்பதற்கான அடிப்படையை வலப்பனைப் பிரதேச சபைக்கு கிடைத்த வெற்றியும் நுவரேலியா பிரதேச சபைக்கு கிடைத்த வாக்குகளின் அங்கீகாரமும் வழங்கியுள்ளது.

## சாமி சிலை கொடுத்து வாக்குச் சேர்த்தனர்

பந்துகள் வலைகள், கிரிக்கட் துடுப்பு மட்டைகள், ஒலிபெருக்கி கருவிகள் போன்றவற்றை மாகாணசபைகள் பிரதேச சபைகளிலிருந்து எடுத்துவந்து விநியோகித்து வாக்கு கேட்பதை மலையக வேட்பாளர்கள் வழமையாக கொண்டிருந்தனர். நடந்து முடிந்த உள்ளூராட்சி சபை தேர்தலின் போது ஒரு மாகாணசபை உறுப்பினர் தோட்டக் கோயில்களுக்கு சுவாமி சிலைகளை வழங்கியுள்ளார். அவரது சொந்தப் பணத்தில் வழங்குவதாகவும் தெரிவித்துள்ளார்.

35 தோட்டக் கோயில்களுக்கு வழங்கப்பட்ட அச் சுவாமி சிலைகளினால் தோட்டத் தொழிலாளர்களுக்கு லட்சக்கணக்கான ரூபாய்களை தேடிச் செலவழிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். ஏனெனில் கோயிலில் புதிதாக சிலைகளை வைப்பதற்கு முன்பு கோயில்களில் திருத்த வேலைகள் வர்ணப் பூச்சு வேலைகள் செய்து கும்பாபிசேகம் செய்வது வழமை. அத்துடன் கும்பாபிசேகம் செய்த தினத்திலிருந்து 40 நாட்களுக்கு தொடர்ச்சியாக பூஜை செய்ய வேண்டியதும் வழமை. இதற்கான செலவுகளை செய்ய தொழிலாளர்கள் பெரும் சிரமப்படுகின்றனர். இது தொழிலாளர்களை மேலும் சிரமத்திற்கும், கடனுக்கும் உள்ளாக்கும் நடவடிக்கை ஆகும்.

வாக்குகளை பெறும் நோக்கில் ஒரு மாகாணசபை உறுப்பினர் சாமிசிலை கொடுத்ததன் காரணமாக தொழிலாளர்களே கஷ்டப்படுகின்றனர்.

அச்சிலைகளையும் அவரது சொந்த செலவில் கொடுக்கவில்லை. மத்திய மாகாணத்தின் முன்னாள் கல்வி கலாசார அமைச்சர் இராதாகிருஷ்ணன் அவரது அமைச்சிற்கூடாக தோட்டக் கோயில்களுக்கு வழங்குவதற்கென இந்தியாவிலிருந்து அச்சிலைகளை கொண்டுவர ஏற்பாடாகியிருந்தன. அவரும் வாக்குகளை பெற்றுக்கொள்ளும் நோக்குடனேயே அவ்வாறு செயற்பட்டுள்ளார்.

அச்சிலைகளை ம.ம.மு விலிருந்து பிரிந்து சென்று அருள்சாமியுடன் இயங்கும் மாகாணசபை உறுப்பினரான திகாம்பரம் என்பவர் தோட்டங்களுக்கு கொண்டு சென்றுள்ளார்.

இது ஒரு புதுவிதமான ஏமாற்றுவித்தை. மக்களுடைய மத நம்பிக்கையை கூட விட்டு வைக்காமல் சுவாமி சிலைகளை கொடுத்து ஓட்டு கேட்கும் கேவலமான ஏமாற்று அரசியலாகும்.

அதனால் மக்கள் படும் சிரமங்கள் ஒரு புறமிருக்க, எங்களுக்கு சிலை கொடுத்தார் என்று பெருமைப்படும் அப்பாவித்தனம் தோட்டத் தொழிலாளர்களிடம் தொடர்கிறது. அதனையே வாக்குகளாகவும் மாற்றிக் கொண்டனர். எத்தனை காலம் தான் ஏமாற்றுவார் இந்த மலையகத்தை. எவ்வளவு காலத்திற்கு இவ்வாறு ஏமாறுவார் அரசியல் விழிப்புணர்வு ஏற்படும் வரை இது போன்ற ஏமாற்று க்களுக்கு மக்கள் பலியாகவே வேண்டும்.

## பிரிமா ஆலைத் தொழிலாளர்கள் வேலை நீக்கம்

சீதுவை பிரிமா கோதுமை மா ஆலையின் ஊழியர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். சம்பள உயர்வு கேட்டதற்காகவே வேலைநீக்க செய்யப்பட்டுள்ளனர். ஆலை இழுத்து மூடப்பட்டுள்ளது. சம்பள உயர்வை வற்புறுத்தியும், வேலைநீக்கம் செய்யப்பட்டவர்களை மீண்டும் வேலைக்கமர்த்தும்படியும் கோரிக்கை விடுத்து சீதுவையிலுள்ள பிரிமா ஆலைக்கு முன்னால் தொழிலாளர்கள் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

அன்று தனியார் கம்பெனிகளில் வேலைவாய்ப்பு சம்பளஉயர்வு என்பவற்றுக்கு பிரச்சினையே இருக்காது என்று பிரசாரம் செய்தனர். இன்று தனியார் கம்பெனிகளில் நடைபெறும் அக்கிரமங்களையும், அட்டூழியங்களையும் தொழிலாளர்களால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

கோதுமை மா அரைத்தல், விநியோகம் என்பன அரசாங்கக் கட்டுப்பாட்டில் இருந்த போது இந்தளவிற்கு தொழிலாளர் விரோத நிலைப்பாடு தலை விரித்தாடவில்லையென்றே தொழிலாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். தனியார் மயம் என்பது எவ்வளவு கொடுமையானது என்பதற்கும் அதனை உறுதியாக எதிர்த்துப் போராட வேண்டும் என்பதற்கும் பிரிமாத் தொழிலாளர்களின் போராட்டம் சிறந்த உதாரணமாகும்.

## ஓட்டுக்காக சுடு தண்ணி போத்தல்

ஒரு தொழிற்சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு உள்ளூராட்சி சபை தேர்தல் காலத்தில் சுடு தண்ணீர் போத்தல்கள் அன்பளிப்பாக கொடுக்கப்பட்டுள்ளன. வாக்குகளை பெற்றுக் கொள்ளும் நோக்கிலேயே அவை கொடுக்கப்பட்டுள்ளன. சாராயம், சோறுப்பார்சல்களுக்கு மேலதிகமாக மேற்படி அன்பளிப்புகளும் கொடுக்கப்பட்டுள்ளன. நல்ல தலைவர்களும் நல்ல வாக்காளர்களும் என்று எண்ணத்தோன்றுகிறது. இவற்றையெல்லாம் செய்துவிட்டு இ.தொ.கா, ம.ம.மு என்பனவற்றுக்கு பதிலாக மக்கள் தங்களுக்கு வாக்களித்துள்ளதாகக் கூறுகின்றனர் இந்த வாக்குப் பொறுக்கிகள்.

## குறைந்த வயதில் வேலைக்கு அனுப்பப்படும் மலையகச் சிறார்களின் அவலம்

மலையகத்தில் இருந்து நகர்ப்புறங்களை நோக்கி இளைஞர்களும், யுவதிகளும், சிறார்களும் வேலைக்குச் செல்கின்றனர். பொருளாதாரச் சுமை, வீட்டாரின் நிர்ப்பந்தம், கல்வி மீதான நம்பிக்கையீனம், கலாசார கவர்ச்சி காரணமாகவும் பெருமளவானவர்கள் இவ்வாறு செல்கிறனர். இதில் யுவதிகளும், சிறார்களுமே பெரிதான பாதிப்புகளை எதிர்கொள்கின்றனர்.

சிறுவர்களை பொறுத்தவரை அவர்களின் சம்மதமின்றியே (14 வயதிற்கு குறைந்தவர்கள்) வேலைக்கு அனுப்பப்படுகின்றனர். பொருளாதார நெருக்கடி, வீட்டாரின் பிற்போக்குத்தனமான தெளிவீனம், இடைத்தரகர்களின் தொந்தரவு என்பன இவர்களை வேலைக்கு அனுப்புவதில் பெரும் பங்கு வகிக்கின்றன. பங்களாக்களுக்கும், கடைகளுக்கும் வேலை அனுப்பப்படும் வயது குறைந்த சிறார்கள் தமது சுதந்திரம், உரிமை என்பவை மறுக்கப்பட்ட நிலையிலேயே வாழ்கின்றனர். வேலைக்கு ஆள்சேர்க்கும் தரகர்கள் மலையகத்தின் பகுதிகளில் பாதைகளில் நின்று ஆசை வார்த்தைகளைக் கூறி தமது வியாபாரத்தை செய்கின்றனர். இந்த சந்தர்ப்பத்தில் வெலி ஓயாவைச் சேர்ந்த சிறுவன் கொழும்புக் கொச்சிக்கடையில் ஒரு வீட்டில் வேலைக்கு அமர்த்தப்பட்டு பின் கொல்லப்பட்டமையை நினைவிற் கொள்வது பொருந்தும். வீட்டு வேலைகளில் சேர்க்கப்படும் ஆண் பெண் சிறார்கள் கடுமையான வேலை வாங்கலுக்கும் உரிய சம்பளம் இன்மைக்கும் ஆளாகின்றனர். அத்துடன் பலவகைச் சித்திரவதைகளுக்கும் ஆளாக்கப்படுகின்றனர். கல்விபெறவேண்டிய வயதில் இச்சிறார்கள் வேலைக்கு அனுப்பப்படுகின்ற அவலம் நீடிக்கிறது. மேலும் மலையகத்திலிருந்து யுவதிகள் பெருமளவில் ஆடைத்தொழிற்சாலைக்கும், ஏனைய தொழில் நிறுவனங்களுக்கும், வீடுகளுக்கும் ஊழியர்களாகச் செல்கின்றனர். உ/தரம் வரை படித்த யுவதிகளை கம்பனிகளுக்கு வேலைக்குக் கூட்டிச் செல்வதாக கூறி ஏமாற்றி வீடுகளில் பணிப்பெண்களாக வேலைக்கமர்த்தப்பட்ட சம்பவங்களும் நடந்திருக்கின்றன. படித்தவர்களுக்கே இப்படி என்றால், ஏனையவர்களின் நிலை என்னவாக இருக்கும் எனச் சிந்திப்பது தகும். இதே போல்தான் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் யுவதிகளும் பெரும் துன்பங்களின் மத்தியில் தொழில் புரிகின்றனர். கடுமையான வேலை, குறைந்த சம்பளம், ஓய்வின்மை, பாலியல் இம்சைகள் போன்றவற்றால் நிரம்பவே துன்புறுகிறார்கள். சிலர் கலாசார சீரழிவுகளில் சிக்கி சீரழிந்தும் போகிறார்கள்.

பெண்கள் வேலை செய்யக்கூடாது என்ற ஆணாதிக்க கண்ணோட்டத்தில் நாம் இவ்விடயத்தை நோக்கவில்லை. இவ்வளவு சீரழிவின் மத்தியில் தொழில்புரிய வேண்டுமா? ஏனெனில் சட்டங்களும் அதன் பாதுகாவலர்களும் மலையக சிறார்கள், இளைஞர், யுவதிகளின் விடயங்களில் இனவர்க்க நோக்கில் உரிய நடவடிக்கைகள் எதுவும் எடுப்பதில்லை என்பது கவனத்திற்குரியதாகும்.

இதற்குப் பிரதியீடாக பெண்களுக்கு சுயதொழில் பயிற்சி, கைத்தொழில் பயிற்சி, தொழில்நுட்ப கல்வி என்பவற்றை அறிமுகப்படுத்துவதனூடாக அவர்களை விழிப்படையச் செய்து தமது சுய ஆளுமைகளை விருத்தி செய்து கொள்ள உதவலாம். இதன் மூலம் இவர்கள் ஏமாறுவதில் இருந்து தவிர்க்கலாம். இந்த இடத்தில் ஒன்று குறிப்பிட வேண்டும். இவர்களின் தொழில் அறிவுகளை வளர்த்துக் கொள்ளுமுகமாக தோட்டங்களுக்கு வழங்கப்பட்ட கருவிகளை பதுக்கிய அரசியல் குரூரத்தனமும் சேர்ந்து கொண்டு இந்த நடவடிக்கைகளுக்கு தடையாக இருக்கிறது. அடுத்து சிறார்களை வேலைக்கமர்த்துவது முற்றிலும் தடுக்கப்பட வேண்டும். இதில் தரகர்களும் பெற்றோர்களும் கண்காணிக்கப்பட வேண்டும். பெற்றோர்களுக்கு உரிய அறிவுரை வழங்கப்பட்ட வேண்டும்.

ஏழை மக்களுக்கு பணத்தாசை காட்டி அவர்களின் பிள்ளைகளை நகர்புறங்களில் வேலைக்கமர்த்தி தவிக்க வைக்கும் நடவடிக்கைக்கெதிரான தெளிவுகளை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்ல வேண்டும். தமது சுயலாபத்தை மட்டும் நோக்காக கொண்ட மலையக அரசியல் கூத்தாடிகள் இவ்விடயத்தில் கவனமெடுக்க மாட்டார்கள்.

சமூக அக்கறையோடும் அரசியல் விழிப்புணர்வோடும் செயற்படும் சக்திகள் இந்த அநீதிக்கு எதிராகச் திட்டமிட்டே செயல்பட வேண்டும்.

-சுந்தரி-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி

පුදිය පූමි Puthiya Poomi

சுற்று13 சித்திரை 2006 பக்கம்12 விலை 15/– சுழற்சி 90

எஸ்.47,3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே:011-2435117,தொலை நகல்:011-2473757
E-mail : puthiyapoomi@hotmail.com

## எதிர்ப்பு அரசியல் நடவடிக்கையாக தேர்தல்

தேர்தல்கள் என்பதன் மூலம் முதலாளித்துவ அரச யந்திரத்தை இயக்குவதற்கான பிரதிநிதிகளை தெரிந்து கொள்வதற்காகவும் மக்களுக்கு ஜனநாயகம் இருக்கிறது என்று காட்டுவதற்காகவும் நடத்தப்படுகின்ற பித்தலாட்டங்கள் என்பதில் மாக்சிஸ்ட்டு லெனினிஸ்ட்டுகளுக்கு வேறு அபிப்பிராயம் இருக்க முடியாது. சில நிலைமைகளில் மாக்சிஸ்ட்டு லெனினிஸ்ட்டுகள் அதனை முற்றாக நிராகரித்து சமூகமாற்றத்திற்கான மாற்று நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர். சில நிலைமைகளில் அவற்றைப் பயன்படுத்தி பிரசாரங்களை செய்வதற்கும் மக்களை அணிதிரட்டுவதற்கும் வரையறைக்குட்பட்ட நிலைமைகளில் தேர்தல்களில் பங்கு கொள்கின்றனர்.

சில நிலைமைகளில் மாக்சிஸ்ட்டு லெனினிஸ்ட்டுகள் சில நேரங்களில் சில தேர்தல்களை பகிஷ்கரித்தும் சில நிலைமைகளில் வரையறைக்குட்பட்ட நிலைமையில் பங்கெடுத்தும் தேர்தல் தொடர்பான இரண்டு விதமான அணுகுமுறைகளையும் கால சூழல் நிலைமைகளுக்கேற்ப முன்னெடுத்து வருகின்றனர்.

சமூக மாற்றத்திற்கு தேர்தலின் மூலம் அதிகாரங்களை கைப்பற்றலாம் அல்லது கைப்பற்ற வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ள முடியாது. இது தேர்தல்களை நடத்திக் கொண்டு மக்களுக்கு ஜனநாயகம் இருப்பதாகவும் மக்கள் ஆட்சியில் பங்கெடுக்கிறனர் என்றும் காட்டிக்கொண்டு மக்களை சுரண்டிக் கொடுக்கும் முதலாளித்துவ ஆளும் வர்க்கங்களுக்கு துணைபோவதும் அவ்வர்க்கங்களுடன் இரண்டறக் கலப்பதுமாகும்

முதலாளித்துவ அரச யந்திரத்தை தகர்க்காமல் அதற்கு மாற்றான சுரண்டலை ஒழித்து சமூக சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கான அரசியல் யந்திரத்தை ஏற்படுத்த முடியாது. முதலாளித்துவ அரச யந்திரத்தை முதலாளித்துவத்துடன் சமரசம் செய்து கொண்டோ சமாதான வழியிலோ மாற்றமுடியாது என்பதில் தெளிவிருக்குமானால் தேர்தல்களில் பங்கெடுத்து சமூகமாற்றத்திற்கான அரச அதிகாரத்தை வென்றெடுக்க முடியாது என்ற நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படாது.

"இடதுசாரிகள்" என்றும் "கம்யூனிஸ்ட்டுகள்" என்று தங்களைத் தாங்களே அழைத்துக் கொள்பவர்கள் தந்திரோபாயமாகவே தேர்தல்களில் பங்கெடுப்பதாகக் கூறிக்கொண்டு முதலாளித்துவ அரச முறைமையுடன் இரண்டற கலந்துவிடுகின்றனர். சமூகமாற்றம், வர்க்கப்புரட்சி போன்றவற்றை கைகழுவிக் கொண்டுவிட்டு அதற்கான நியாயங்களையும் தேடிக்கொள்வார்கள். இலங்கையில் ஜனாதிபதி தேர்தல் பாராளுமன்றத் தேர்தல், மாகாணசபை தேர்தல், உள்ளுராட்சி சபை தேர்தல், பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பு என பல தேர்தல்கள் நடைமுறையில் இருக்கின்றன. இவைமாறிமாறி நடைபெற்றுக்கொண்டே இருக்கும்.

கடந்த மாதம் 30 ஆம் திகதி உள்ளுராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெற்றன. அம்பாறை, திருகோணமலை ஆகியன தவிர்ந்த வடக்கு கிழக்கு மாவட்டங்களில் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டன. அங்கு தேர்தல்கள் நடத்த அமைதியான சூழல் இல்லை என்றே ஒத்திவைக்கப்பட்டுள்ளன. திருகோணமலையும் அம்பாறையும் வடக்கு கிழக்கு மாகாணத்தில்தான் அமைந்திருக்கின்றன என்பதும் அங்கும் அமைதியான சூழல் இல்லை என்பதும் உண்மை. அம்மாவட்டங்களை தமிழ் மக்களின் பிரதேசங்களாக ஏற்காத பேரினவாத நிலைப்பாடே அங்கு தேர்தல் நடத்தப்படுவதற்கு காரணம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

மாக்சிஸ்ட்டு லெனினிஸ்ட்டுகளான புதிய- ஜனநாயக கட்சியினர் கடந்த பாராளுமன்ற தேர்தலை நிராகரித்தனர். அதற்கு ஒருகாரணமாக பாரளுமன்ற தேர்தல் அடிக்கடி நடத்தப்படுவது எனக் குற்றஞ்சாட்டியிருந்தனர். ஜனாதிபதி தேர்தலையும் நிராகரித்தனர். ஜனாதிபதியாக யார் வந்தாலும் மாற்றங்களை ஏற்படுத்த முடியாது என்றும் ஜனாதிபதி முறைக்கு எதிர்ப்பு காட்ட வேண்டும் என்று கூறியும் ஜனாதிபதி தேர்தலை நிராகரித்தனர். அதாவது அந்த இரண்டு தேர்தல்களில் வாக்குச் சீட்டுக்களை செல்லுபடியற்றதாக்கி வாக்களிக்கும்படி பிரசாரம் செய்தனர் இதன் மூலம் அரசியலமைப்பு சர்ச்சையை ஏற்படுத்தலாம் என்று பிரசாரம் செய்தனர். அத்தேர்தல்களில் பங்கெடுப்பதன் மூலமன்றி நிராகரிப்பதன் மூலம் மக்கள் சக்தியை கட்டிவளர்க்க முடியும் என்ற ரீதியில் செயற்பட்டனர். உள்ளுராட்சி சபை தேர்தல்களில் வடக்கு கிழக்கில் நிலவும் அமைதியீனம், ஜனநாயக விரோத சூழல் காரணமாக அங்கு போட்டியிடுவதில்லை என்றும் தீர்மானித்தனர். மலையகத்தில் நுவரேலியா, வலப்பனை ஆகிய பிரதேச சபைகளில் புதிய- ஜனநாயக கட்சியினர் சுயேட்சையாக போட்டியிடுகின்றனர். மலையகத்தின் பிற்போக்குத் தலைமைகளை அம்பலப்படுத்தவும் மக்களின் அதிகாரத்தை கட்டியெழுப்புவதற்குமான களமாக உள்ளுராட்சி சபை தேர்தல்கரளை பயன்படுத்தவும் அங்கு போட்டியிடுவதாக தெரிவித்துள்ளனர்.

தேர்தல்களில் போட்டியிடுவது என்பது பிரசார நோக்கமும் மக்களை இந்த அமைப்பிற்கு எதிராக அணிதிரட்டுவதும் நோக்கமாக கொண்டதாகும். அதில் வெற்றிபெற்றாலும் இந்த அமைப்பிற்கு எதிரான போராட்ட அரசியலை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதே நோக்கமாக இருக்க முடியும்.

எனவே தேர்தல்கள் பற்றி மாக்சிஸ்ட்டு லெனினிஸ்டுகளுக்கு மாறான அபிப்பிராயம் இருக்க முடியாது. அதன் மூலம் தொழிலாளர் வர்க்க ஆட்சியை ஏற்படுத்த முடியாது. வர்க்க இன சாதிய பால் அடிப்படையிலான ஏற்றத்தாழ்வுகளையும் ஒடுக்குமுறைகளையும் இல்லாதொழிக்க முடியாது. அவற்றுக்கும் மேலால் பல்வேறு நிலைப் போராட்டங்களின் ஊடாக உச்ச நிலைப் போராட்ட வடிவத்தின் ஊடாகவே புதிய சமூக அமைப்பைத் தோற்றுவிக்க முடியாது.

ஆசிரியர் குழு

## பேச்சுவார்த்தையின் போக்கும் சமாதானத்தின் எதிர்காலமும்

புதிய-ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ பதவிக்கு வந்ததும் தேசிய இனப்பிரச்சினையை எவ்வாறு அணுகப்போகிறார் என்ற எதிர்பார்ப்பு பரவலாகக் காணப்பட்டது. குறிப்பாக அவரது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தீவிர பேரினவாத சக்திகளான ஜே.வி.பி- ஹெல உறுமய என்பனவற்றின் கோரிக்கைகள் உள்வாங்கப்பட்டிருந்தன. ஒற்றையாட்சியின் கீழ் கௌரவமான சமாதானம் என்று கூறப்பட்டதன் மூலம் யுத்தமாக்கப்பட்ட தேசிய இனப்பிரச்சினை மேலும் சிக்கலாக்கப்படக் கூடிய அபாயத்திற்கு உள்ளாகியது.

ஆனால் பதவிக்கு வந்த பின்பு மகிந்த ராஜபக்ஷவினால் பல விடயங்களில் படியிறங்க வேண்டி ஏற்பட்டது. எதிர்பார்க்கப்பட்ட இந்திய ஆதரவு நேரடியாகவும் முழுமையாகவும் கிடைக்காத நிலையில் அமெரிக்க மேற்குலக சக்திகளின் முன்னால் பணிந்து போக வேண்டியதாயிற்று. தனது தேர்தல் காலச் சகாக்களின் விருப்பங்களையும் மீறி நோர்வேயின் அனுசரணையை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை உருவானது. ஏற்கனவே பிரதமராகப் பதவி வகித்த போது நேரடியாகவே முரண்பட்டுக் கொண்ட எரிக் சொல்ஹேய்முடன் அதே அலரிமாளிகையில் ஜனா திபதி ஆலோசனை நடத்தவும் பேச் சுவார்த்தைக்கு இடம் திகதி பற்றிக் கலந்து பேசவும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இருப்பினும் பேச்சுவார்த்தை பற்றிய தெளிவான நிலைப்பாடும் சமாதானம் சம்மந்தமான தூர நோக்கும் ஜனாதிபதியிடம் இல்லை என்பது வெளிப்பட்டு நிற்கிறது. அதன் காரணமாகவே பேச்சுவார்த்தை மேசைக்கு அரசாங்கம் செல்வதற்கு மூன்று மாதகாலம் தேவைப்பட்டது. புரிந்துணர்வு யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்ட நான்காவது ஆண்டு நிறைவு நாளில் ஜெனிவாவில் இடம் பெற்ற புதிய ஜனாதிபதியின் கீழான முதலாவது பேச்சு வார்த்தை எதிர்பார்த்தளவிற்கு வெற்றி பெறவில்லை. அரசாங்கத்தரப்பினர் ஒருமுகப்பட்ட தெளிவான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை. அதேவேளை புலிகள் இயக்கம் தமது இருப்புக்குப் பாதகமானதும் மக்கள் மீதான தாக்குதல்களுக்குக் காரணமானதுமான துணைப்படைகள் பற்றியே அழுத்தி நின்றது. அத்துடன் அதிஉயர் ராணுவப் பாதுகாப்பு வலயம் சம்மந்தமாகவும் விளக்கங்களை முன்வைத்தது. இரண்டு நாள் நடந்த பேச்சுவார்த்தை பலவீனத்திற்கும் செலவீனத்திற்கும் அதேவேளை சர்வதேசமயப்படுத்தலுக்கும் உள்ளாகியதே தவிர உருப்படியாக எதனையும் சாதிக்கவில்லை. இறுதியாக வெளியிடப்பட்ட கூட்டறிக்கை கூட இரு தரப்பினரதும் உள்மன விருப்பங்களுடன் வெளியிடப்பட்ட ஒன்றல்ல என்பதை பின் வந்த முரண்பட்ட கருத்துக்களும் நடைமுறைகளும் எடுத்துக் காட்டின. அதேவேளை இப்பேச்சுவார்தையை ஒரு கிறிக்கட் போட்டி வர்ணனை போன்று ஊடகங்கள் தத்தம் நிலைக்கேற்ப வர்ணித்தும் கொண்டன. இவ்வாறான ஊடகங்கள் வழமை போன்று தமது வருவாயைப் பெருக்கவும் அதே வேளை இன முரண்பாட்டை மேலும் விரிசலாக்கி இனவாதத்தை வளர்க்கவும் பயன்படுத்திக் கொண்டன.

மகிந்த சிந்தனை என்று அரச சார்பு ஊடகங்கள் ஊதிப் பெருப்பித்துக் காட்டும் ஜனாதிபதியின் சொல்லிலும் செயலிலும் பேச்சுவார்த்தை சமாதானம் தீர்வு என்பன குறைந்த பட்ச அடிப்படையில் தானும் திட்டமாகவோ வரைவாகவோ இல்லை என் பது காணக் கூடியதேயாகும். ஒரு புறம் தீவிர பேரினவாத சக்திகளும் ராணுவ ஆலோசனைகளும் இறுக்கமாகவே உள்ளன. மறுபுறம் அமெரிக்க மேற்குலக யப்பானிய சக்திகளின் அழுத்தம் நாளாந்தம் வளர்ந்து வருகின்றன. அதேவேளை இந்தியாவும் சும்மா இருக்கவில்லை. அவர்கள் எதிர்வரும் மே மாதத்தில் நடைபெற உள்ள தமிழகத்தின் மாநிலத் தேர்தலுக்குப் பின் தமது சுயரூபம் எத்தகையது என்பதைக் காட்டிக் கொள்வார்கள். அதுவரை இந்தியாவின் கரங்கள் மறைமுகமான வழிகளில் வழமைபோன்று செயற்படவே செய்யும். குறிப்பாகக் கிழக்கின் சம்பவங்களுக்கும் இந்தியாவிற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என எவரும் சத்தியம் செய்யமாட்டார்கள். ஜனாதிபதியும் அவருடன் கூட்டுச்

**வெகுஜனன்**

சேர்ந்துள்ள கட்சிகள் சக்திகள் யாவும் பெருமளவிற்கு இந்திய நலன்களின் ஆதர வாளர்களும் பயன்பாடுகளைப் பெற் றவர்களுமாவர். இந் நிலையில் அமெரிக்காவால் நகர்த்தப்படும் பேச்சுவார்த்தைக் காய்களில் முழுமையாகச் சிக்கிக் கொள்ளத்தயங்கியும் அதே வேளை முற்று முழுதாக அமெரிக்கத் தலையீட்டைப் புறக்கணிக்க முடியாமலும் ஒரு திண்டாட்ட நிலையிலேயே ஜனாதிபதி மகிந்த இருந்து வருகின்றார். அவர் யுத்தத்திற்குச் செல்லாமலும் சமாதானத்தை ஏற்படுத்தாமலும் காலத்தை இழுத்துச் செல்லும் போக்கில் பேச்சுவார்த்தையை நகர்த்திச் செல்லவே முற்படுகிறார் என்பது புலனாகின்றது. அதே வேளை ராணுவம் முழுமையான யுத்தத்திற்கான சகல நிலைத் தயாரிப்புகளையும் செய்து வருகின்றது. மேலும் பேச்சுவார்த்தைக்கு எதிராக ஜே.வி.பி- ஹெல உறுமய கட்சிகள் கடும் கண்டனங்களையும் எதிர்ப்பையும் தெரிவித்து வருகின்றன. அத்துடன் ராணுவ பொலீஸ் உயர் அதிகாரிகள் வெளியிடும் கருத்துக்கள் பேச்சுவார்த்தைக்கு குந்தகம் விளைவிப்பனவாகவும் யுத்ததிற்கான சமிக்கையாகவும் காணப்படுகின்றன. ஏற்கனவே இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் இணங்கப்பட்ட விடயங்களை முன்னெடுப்பதில் அரசாங்கம் உரிய கவனம் செலுத்தவில்லை. குறிப்பாகத் துணைப்படைகள் விடயத்தில் அரசாங்கம் இக்கட்டான நிலையில் மாட்டி நிற்கின்றது. அமெரிக்காவின் உயர் பீடத்தைச் சேர்ந்தவர்களே துணைப்படைகள் பற்றிச் சுட்டிக் காட்டியிருப்பதையிட்டு அரசாங்கத் தரப்பு விசனமடைந்துள்ளது. முன்னாள் உயர் ராணுவ பொலீஸ் அதிகாரிகள் மூலமாக துணைப்படைகளிடமிருந்து ஆயுதங்களைக் களைவது பற்றிய கருத்துக்களை வெளிவரச் செய்திருக்கிறது.

மேலும் சில அரச சார்பற்ற நிறுவனங்கள் பேச்சுவார்த்தை பற்றி கட்டுரைகள் அறிக்கைகள் நேர் காணல்கள் வெளியிட்டும் வருகின்றன. மேற்போக்காகப் பார்க்குமிடத்து அவை கூறும் கருத்துக்கள் சமாதானத்தை வற்புறுத்துவது போன்றே அமைந்திருக்கும். ஆனால் சாராம்சத்தில் அவ் அரச சார்பற்ற நிறுவனங்கள் எங்கிருந்து பணத்தையும் அதன் கூடவே வழிகாட்டல்களையும் பெறுகின்றனவோ அவற்றுக்கு அளவாகவே அவை பேச்சுவார்த்தை சமாதானம் பற்றிப் பேசிக் கொள்கின்றன. தீர்வு பற்றிக் கூட நீட்டி முழக்கிக் கொள்கின்றன. அவர்களைப் பொறுத்தவரை பேச்சு வார்த்தை சமாதானம் போன்றவை கிராக்கியுள்ள விற்பனைப் பண்டங்களேயாகும். அரச சார்பற்ற நிறுவனங்களது காட்டில் நல்ல மழை பெய்து வருகிறது. இன்று பேச்சுவார்த்தை சமாதானம் என்பதும் அவற்றுக்கு அடிப்படைப் பிரச்சினையாகக் காணப்படும தேசிய இனப்பிரச்சினையும் சர்வதேச ஏகாதிபத்திய பிராந்திய மேலாதிக்க சக்திகளின் நிகழ்ச்சி நிரலாகி விட்டமையை அரசியல் விபரமறிந்த எவரும் மறுக்கமாட்டார்கள். அதன் காரணமாகவே அமெரிக்க தூதுவர், இந்தியத் தூதுவர், யப்பானிய விஷேடத் தூதுவர் உட்பட வதிவிடப் பிரதிநிதிகள் என்போர் யாவரும் பேச்சுவார்த்தை- சமாதானம் என்பனவற்றில் அதீத அக்கறை காட்டி நிற்கின்றனர். இப்ப பிரச்சினை ஊடாகத் தத்தமது நலன்கள் தேவைகளை எவ்வாறு பூர்த்தி செய்து கொள்வது என்பதிலேயே அவர்கள் கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறார்களே தவிர இந் நாடு மக்கள் எதிர்காலம் பற்றிய மக்கள் சார்பு நிலைப்பாட்டின் அக்கறை காரணமாக அல்ல என்பது புரிந்து கொள்ளப்படவேண்டியதாகும்.

தற்போதைய பேச்சுவார்த்தையிலும் சமாதானத்திற்கான அக்கறையிலும் ஒடுக்கப்படும் தமிழ்த் தேசிய இனத்தின் சார்பாகப் புலிகள் இயக்கத்திற்கு பொறுப்பும் தூரநோக்கும் இருக்க வேண்டியதை எவரும் நிராகரிக்க முடியாது. அதேவேளை நாளாந்தம் நண்பர்களையும் ஆதரவு சக்திகளையும் இழந்து தனிமைப்பட்டுப போகும் போக்கின் அரசியல் ஆபத்தையும் அவர்கள் உணர்ந்து செயல்படல் வேண்டும். அத்துடன் பேச்சுவார்த்தையில் விட்டுக் கொடுப்பு புரிந்துணர்வு என்பது தமிழ்த் தேசிய இனத்தின் அடிப்படை உரிமைகள் நிலைப்பாடுகளை பேரினவாத சக்திகளுக்கு தாரைவார்ப்பதாகவும்

> **யுத்தத்திற்கு செல்லாமலும் சமாதானத்தை ஏற்படுத்தாமலும் காலத்தை இழுத்துச் சென்று தனது ஆட்சி அதிகாரத்தை நிலை நிறுத்தவே முயன்று வருகிறார்.**

அமைந்து விடக் கூடாது.

பேச்சுவார்த்தையில் பாரிய பொறுப்பு அரசாங்கத்தரப்பையே சார்ந்தது. புலிகள் இயக்கத்தைப் பலவீனப்படுத்தல் அம்பலப்படுத்தல் இறுதியில் அழித்தல் என்ற பேரினவாத உள்நோக்கப் நிலைப்பாட்டுடன் பேச்சுவார்த்தையில் அரசாங்கத் தரப்பு பங்கு கொள்வதாயின் அது முற்றிலும் பயனற்ற முயற்சியாகும். அத்தகைய நிலைப்பாடு மீண்டும் ஒரு கொடிய யுத்தத்திற்கே வழிவகுக்கும். அதனால் நாட்டிற்கும் முழு மக்களுக்கும் எதுவும் கிடைக்கப் போவதில்லை. பதிலுக்கு மக்களுக்கு அழிவையும் அதே நேரம் அந்நிய சக்திகளின் நேரடி ராணுவ அரசியல் தலையீடுகளுக்குமே வழிவகுக்கும். எனவே ஜனாதிபதியானவர் மிகுந்த தூரநோக்குச் சிந்தனையுடன் மகிந்த சிந்தனை என்பதனை ஒரு புறத்தில் வைத்து விட்டு ஆக்க பூர்வமான பேச்சு வார்த்தைக்கு அரசாங்கத் தரப்பைத் தயார்படுத்த வேண்டும். அத்துடன் கடந்த பேச்சுவார்த்தையில் இணங்கப்பட்டவற்றை நடைமுறைப்படுத்துவது பற்றிய நம்பிக்கையை வெளிப்படுத்த வேண்டும். அவ்வாறே புலிகள் இயக்கமும் தமது பொறுப்பை உரியவாறு முன்னெடுக்க வேண்டும். அல்லாது விடின் பேச்சுவார்த்தை என்பது அர்த்தமற்றதாகிவிடும். சமாதானத்தின் எதிர்காலம் பாழாகிக் கொள்ளும். சமாதானத்தையும் இயல்பு வாழ்வையும் எதிர் பார்த்து நிற்கும் வடக்கு கிழக்கு மக்களினதும் ஏனைய மக்களதும் தலைகளில் மண் விழுவதாகவே அமைந்துவிடும்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்




# மகிந்த சிந்தனையும் மக்கள் பிரச்சினைகளும்

**ஆ.பூபதி**

நாளாந்தம் காலை முதல் நடுநிசி வரை அரசாங்கத்தின் ஒலி ஒளி அச்சு ஊடகங்கள் அனைத்தும் மகிந்த் சிந்தனை பற்றிக் குறிப்பிடத் தவறுவதில்லை. அரசாங்கத்தால் அமைச்சர்கள் அதிகாரிகள் என்போரால் முன்னெடுக்கப்படுவதாகக் காட்டப்படும் ஒவ்வொன்றும் மகிந்த சிந்தனையின் அடிப்படையிலேயே இடம் பெறுகின்றன என்றே கூறப்படுகின்றது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பதவியேற்று நான்கு மாதங்கள் முடிவடைந்து விட்டன. தேர்தல் விஞ்ஞாபனமாக முன்வைக்கப்பட்ட மகிந்த சிந்தனை என்பது பின்பு ஜனாதிபதியின் கொள்ளைப் பிரகடனமாகவும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

ஆனால் அந்த மகிந்த சிந்தனை என்பதன் ஊடாக கடந்த நான்கு மாதங்களில் நாடும் மக்களும் எவற்றை சாதகமானவைகளாகப் பெற்றுக் கொண்டனர் என்பதே சராசரியாக எழுப்பப்படும் கேள்வியாகும். ஜனாதிபதி அடிக்கடி பொதுமக்கள



மத்தியில் போகிறார். எல்லோ யாருடனும் சகசமாகப் பேசுகிறார். முதியவர்களை அணைக்கிறார். சிறார்களை முத்தமிடுகிறார். தொழிலாளர்களைக் கண்டு பேசுகிறார். பிரச்சினைகளைத் தீர்ப்பதாகக் கூறுகிறார். விவசாயிகளைக் கண்டு கைவிடமாட்டேன் என்கிறார். அரசாங்க அதிகாரிகளை அடிக்கடி கூட்டி ஆலோசனைகள் கேட்டு ஆணைகளும் பிறப்பிக்கின்றார். பௌத்த உயர பீடாதிகளைக் கண்டு வணங்கி ஆசி பெற்று பிரித் நூல் கட்டிக் கொள்கிறார். சைவக் குருமாரிடம் திருநீறும் பொட்டும் பெறுகிறார். நான்கு மதத் தலைவர்களைத் தம்முடன் அடிக்கடி நிற்க வைத்தும் கொள்கிறார். தனக்கு இன மத சாதி பேதம் இல்லை என்று அடிக்கடி உரைக்கவும் செய்கிறார். யுத்தத்திற்கு செல்லப் போவதில்லை என்றும் இரத்த ஆறு ஓட அனுமதிக்கப்போவதில்லை என்றும் கௌரவமான சமாதானத்திற்கு வியர்வை சிந்தப் போவதாகவும் சூளுரைக்கிறார். வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்தி மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தப் போவதாகவும் வாக்குறுதியளித்து வருகின்றார். உரிய சம்பள உயர்வு வழங்கப்படும் என்றும் பிரச்சினைகளைப் பேசித்தீர்க்க வாருங்கள் என்றும் அழைப்பு விடுக்கின்றார். அரசாங்க ஊழியர்களில் பெரும்பாலோர்11, 600 ரூபாவும் அதற்கு மேலும் பெறுகிறார்கள். ஆனால் அதற்குரிய வேலை செய்கிறார்களா என்று சினக்கவும் செய்கிறார்.

இவற்றுடன் அரசாங்கப் பக்கத்திற்கு பாய்ந்து செல்லும் எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சர் பதவி, பிரதி அமைச்சர் பதவிகள் தாராளமாக வழங்கி வருகிறார். அடுத்த அமைச்சரவை மாற்றத்துடன் அதன் எண்ணிக்கை நூறாகிவிடக் கூடும். அத்துடன் ஆலோசகர்கள் என்ற பதவி வியாபித்துச் செல்கிறது. அரசாங்கப் பக்கம் செல்லும் எவருமே வெறுங் கையுடன் திரும்பாத அளவுக்கு பல்நிலைப் பதவிகள் கிடைக்கின்றன. பதவிகள் என்பன வெறும் கதிரைகள் அல்ல. கொழுத்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் இருப்பிட வாகனவசதிகள் மேலதிக சலுகைகள் வேறும் பல கிடைக்கின்றன. இவற்றைப் பார்த்துக் கொண்டிருக்கும். யூஎன்.பி க்காரர்களால் சும்மா இருக்க முடியுமா? கிளிநொச்சி சென்று திடசங்கற்பம் எடுத்து வந்த தலைவர்களே வெற்றிலை கொடுத்து அமைச்சர்களாகிக் கொள்வதற்கு மகிந்த சிந்தனை முன்பாக மண்டியிட்டு நிற்கின்றனர். நீட்டி முழங்கிய ர.ஃவூ ஹக்கீம் அமைச்சுப் பதவிக்கு ஆலாய் பறந்து பெற்றுக் கொள்ள இருக்கிறார். அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திரம் போன்று மகிந்த சிந்தனையின் மூலமாக பதவிகள் பல நிலைகளிலும் அள்ளி அள்ளி வழங்கப்படுகின்றன. இன்னும் பல பதவி வழங்கும் அதிசயங்கள் மகிந்த சிந்தனையின் கீழ் இடம் பெறலாம்.

ஆனால் இத்தனைக்கும் மத்தியில் ஏகப் பெரும்பான்மையான உழைக்கும் மக்களுக்கும் பேரினவாதத்தால் ஒடுக்கப்பட்டு வரும் தேசிய இனங்களுக்கும் எதுவுமே கிடைப்பதாக இல்லை. ஜனாதிபதியின் பேச்சுக்களும் காட்சி கொடுத்தல்களும் வெறும் ஏமாற்றுக்களாகவே காணப்படுகின்றன. ஏதோ ஆட்சிக் காலத்தைக் கடத்திச் சென்றால் போதும் என்ற உள்ளார்ந்த நிலையில் ஜனாதிபதி செயற்பட முற்படுகிறாரா என்ற கேள்வி இயல்பாகவே எழுகின்றது. அது மட்டுமன்றி அடுத்த பதவிக்காலத்தையும் மனதில் வைத்தே விஷயங்கள் நகர்த்தப்படுவதையும் அவதானிக்க முடிகிறது.


## சாரதிகள் மாறினார்களே தவிர பயணமும் பாதையும் ஒரே திசையில்

ஏனெனில் மகிந்த சிந்தனை என்பதைக் காட்டி எல்லோரையும் சிரித்து வரவேற்று யாவற்றுக்கும் தலையசைத்துக் கொண்டு அவரால் எவ்வாறு உரிய தீர்மானம் எடுக்க முடியும். பேரினவாத யுத்தத் தீயை மூட்டிக் கொள்ள நிற்கும் ஜே.வி.பி. ஹெல உறுமய சக்திகளையும் ராணுவ உயர் பீடத்தையும் மீறி எவ்வாறு கௌரவமான சமாதானத்தை மகிந்த சிந்தனையால் கொண்டு வர இயலும். யுத்தம் வேண்டாம் இரத்த ஆறு ஓட இடமளிக்க மாட்டேன் என்று கூறுவதால் மட்டும் சமாதானத்தைக் கொண்டு வந்து விடமுடியாது. சமாதானத்திற்காக வியர்வை சிந்தி உழைக்க வேண்டுமானால் அதற்கு உறுதியான தீர்மானமும் நடைமுறைப்படுத்தும் துணிவும் வேண்டும். பேரினவாத வெறியர்களை அக்கம் பக்கமாக இருத்தி வைத்துக் கொண்டு சமதானத்திற்கான தீர்மானம் எடுக்க முடியாது. அந்த லட்சணத்தை நடந்து முடிந்த ஜெனிவாப் பேச்சுவார்த்தையில் காணமுடிந்தது. அவ்வாறு தான் என்றால் அடுத்த கட்டப் பேச்சுவார்த்தை என்பது அமர்த்தமற்ற ஒன்றேயாகும். இவ்வாறே நாட்டின் பொருளாதாரத்திலும் மக்களது அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளிலும் மகிந்த சிந்தனையால் உருப்படியாக எதனையும் செய்ய இயலவில்லை. அன்றாட அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் நாளாந்தம் உயர்ந்து செல்கின்றன. அரிசி ரூபா நாற்பதுக்கு மேல் ஐம்பது ரூபா வரை சென்றுள்ளது. சீனி அறுபது ரூபா, மா முப்பத்திரண்டு ரூபா, தேங்காய் ஒன்று இருபது ரூபா, ஒரு பிடி கீரை கூட இருபது முப்பது ரூபா விற்கிறது. ஐந்தாயிரம் முதல் பத்தாயிரம் வரை சம்பளம் பெறுவோரால் எவ்வாறு வாழ்க்கைச் செலவைத் தாங்கிக் கொள்ள இயலும். குறைந்தது பதினையாயிரம் ரூபா சம்பளம் பெறுவோரால் கூட வாழ்க்கைச் சுமையைச் சமாளிக்க முடியாத நிலையே காணப்படுகிறது. அரசாங்க ஊழியரின் சம்பளம் பற்றிப்பேசும் மகிந்த சிந்தனையால் பல லட்சம் தனியார் துறை ஊழியர்களின் சம்பள உய்வு பற்றி வாய் திறக்க முடியவில்லை. அது பற்றித் திறந்தால் அந்நிய உள்நாட்டு முதலாளிகள் கோபம் கொள்வார்கள் அல்லவா?

தாராளமயம் தனியார் மயத்தை ஏற்று அந்திய முதலீட்டுக்கு செங்கம்பள வரவேற்பு நடாத்தி வருவோரால் வாழ்க்கைச் செலவைக் குறைக்க முடியுமா? உலக வங்கி சர்வதேச நாணய நிதியத்திடம் கைகட்டி வாய்பொத்தி நின்று கடன் பெற்று அவர்களது வழிகாட்டலில் அபிவிருத்தி எனக்காட்ட முற்படும் மகிந்த சிந்தனையால் நமது நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியுமா? நாட்டு வளங்களைப் பல் தேசியக் கம்பனிகள் கொள்ளையிட்டுச் செல்வதற்கு அனுமதித்து விட்டு நமது வளங்களை அந்நிய மூலதனத்தின் உதவியோடு அபிவிருத்தி செய்வோம். என்று மார்தட்டுவது சுத்த ஏமாற்றுத்தனம் அல்லவா? அந்நிய இறக்குமதிகளுக்கு தாராள அனுமதியளித்து விட்டு உள்ளுர் உற்பத்தி பற்றித் திட்டமிடுவதாகப் பேசுவது நயவஞ்சகம் நிறைந்த பேச்சல்லவா?

அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் சரணடைந்து கொண்டு ஆமாம் சாமி போடும் நிலையால் இறைமை சுதந்திரம் சுயாதிபத்தியம் இழக்கப்படுவதைத் தடுத்து நிறுத்த முடியுமா? மேற்கூறிய எவற்றுக்குமே மகிந்த சிந்தனையில் புதிய வழிவகைகள் காட்டப்படவில்லை. அவ்வாறாயின் அதனை நாளாந்தம் உச்சரிப்பது ஏன்? மக்களை ஏமாற்றும் ஒரு வகைப் பிரச்சார உத்தியே அன்றி வேறில்லை.

1977ல் பதவிக்கு வந்த ஜே. ஆர். எந்த ஏகாதிபத்திய வாகனத்தில் தனது பயணத்தை எத்தகைய பாதையில் தொடங்கினாரோ அதே திசையில் தான் பயணம் இன்று வரை தொடர்கிறது. சாரதி ஆசனத்தில் ஆட்கள் மாறி இருந்து வந்திருக்கிறார்களே தவிர வாகனம் பயணப் பாதை யாவும் தொடர்ந்து ஒரே திசையில் தான் சென்று கொண்டிருக்கின்றன. இதில் மாற்றம் வரும் என்றோ பிரச்சினைகள் தீர்க்



கப்படும் என்றோ மக்களின் துன்ப துயரங்கள் மாற்றமடையும் என்றோ யாராவது எதிர்பார்த்தால் அத்தகையோர் அரசியல் அறிவிலிகளாகவே இருப்பர். முதலாளித்துவ பாராளுமன்ற ஏமாற்றை அறியாத மூடர்களாகவே இருப்பார்கள். அல்லது அறிந்தும் ஏமாற்றும் வஞ்சகர்களாகவே இருப்பர்.

சரியான கொள்கையும் நடைமுறைகளும் கொண்ட பரந்துபட்ட மக்கள் போராட்ட எழுச்சி ஒன்று தோன்றாத வரை முதலாளித்துவ பாராளுமன்ற ஆட்சியும் அதன் உச்சாணியாக இருந்து வரும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையும் அதற்கான அரசியலமைப்பும் நாட்டிற்கோ மக்களுக்கோ உருப்படியான எதனையும் வழங்கப் போவதில்லை. ஆளும் வர்க்க சக்திகளான பாராளுமன்றத் தலைமைகளும் அவர்களது எசமானர்களான ஏகாதிபத்திய மேலாதிக்க சக்திகளும் அவர் இன ரீதியில் மக்களை மென்மேலும் பிரித்தும் சுரண்டியும் ஒடுக்கவுமே செய்வார்கள். இதனை ஒடுக்கப்படும் அனைத்து மக்களும் உணர்வது அவசியமாகும்.

# இந்திய ஆட்சியாளர்களின் துரோகம்

## அணுசக்தி என்ற பெயரால்

## அரசியல்- இராணுவ அடிமைத்தனம்!

மறுகாலனியாக்கக் கொள்கையின் விளைவாக இந்தியப் பொருளாதாரமும் எல்லா உற்பத்தி மற்றும் விநியோகத் துறைகளும் பன்னாட்டு நிறுவனங்களின் கோரப் பிடிக்குள் சிக்கி வருவதை நாமறிவோம். இந்தப் பொருளாதார அடிமைத்தனத்தை விஞ்சும் அளவில் அரசியல் மற்றும் இராணுவ அடிமைத்தனத்திற்கான சங்கிலிகள் நம் மீது பூட்டப்படுகின்றன. தனது, குறைந்தபட்ச செயல்திட்டத்தில், பாரதிய ஜனதாவைப் போலவே தன்னை ஒரு அமெரிக்க எதிர்ப்பாளனாகச் சித்தரித்துக் கொண்டது ஐக்கிய முற்போக்கு கூட்டணி.

ஆனால், பதவியில் அமர்ந்த மறுகணமே தன் நோக்கத்தைத் தெளிவாக வெளியிட்டார் மன்மோகன். "அமெரிக்கா ஒரு வல்லரசு என்ற உண்மையை நாம் ஒத்துக்கொண்டு தான் ஆகவேண்டும்.... உலகப் பொருளாதாரம் மற்றும் அரசியலில் அமெரிக்கா மிக முக்கிய பாத்திரம் வகிக்கிறது.... எனவே, இருக்கின்ற சர்வதேச அமைப்புகளை நமது ஆதாயத்திற்கேற்ப நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்" என்றார். பிரதமர் நாற்காலியில் அமர்ந்திருக்கும் இந்த அமெரிக்க அடிவருடியின் அடுத்தடுத்த நடவடிக்கைகள், நமது நாட்டை மீளவே முடியாத அடிமைப் படுகுழிக்குள் தள்ளி வருகின்றன.

ஜூன் 18. 2005 அன்று புஷ்ஷும் மன்மோகனும் அமெரிக்காவிலிருந்து வெளியிட்ட கூட்டறிக்கை, அதைத் தொடர்ந்து ஜூன் 28- ஆம் தேதியன்று பிரணாப் முகர்ஜியும் ரம்ஸ்ஃபீல்டும் இணைந்து வெளியிட்ட இந்திய அமெரிக்க இராணுவ ஒப்பந்தம், அதனைத் தொடர்ந்து சர்வதேச அணுசக்தி ஏஜென்சியில் அமெரிக்காவின் ஆணைக்கிணங்க ஈரானுக்கு எதிராக மூன்று முறை இந்தியா அளித்திருக்கும் வாக்கு, இதே காலகட்டத்தில் முடக்கப்பட்டிருக்கின்ற ஈரான்- இந்தியா எண்ணெய் எரிவாயுக் குழாய் திட்டம், தற்போது புஷ் வருகையை ஒட்டி திணிக்கப்படக் காத்திருக்கும் இந்திய- அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம் ஆகிய இவையனைத்தும் அமெரிக்க சிலுவையில் நிரந்தரமாக இந்தியாவை அறைந்து விடுவதற்கான ஆணிகள். இவை தனித்தனி ஆணிகள் என்றும் ஒன்றுடன் ஒன்று தொடர்பில்லாதவை என்றும் மன்மோகன் சிங் தொடர்ந்து புளுகி வந்தபோதிலும், உண்மை வெகு வேகமாக அம்பலமாகி வருகிறது.

இந்தியாவின் அதிகரித்து வரும் எண்ணெய் மற்றும் எரிவாயுத் தேவைகளை நிறைவு செய்வது, உலகச் சந்தையின் விலையேற்றங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதன் மூலம் அந்நியச் செலாவணி இழப்பை தவிர்ப்பது. கப்பல் மூலம் எண்ணெய் எரிவாயு தருவிக்கும் செலவை இல்லாமல் செய்வது. ஈரானிலிருந்து பாகிஸ்தான் வழியாக எண்ணெய்க் குழாய் அமைப்பதன் மூலம் இந்தியா- பாகிஸ்தானிடையே சமாதானம் நிலவுவதற்கான பொருளாதார அவசியத்தை உருவாக்குவது - என்ற நோக்கங்களை முன்வைத்து ஈரான்- இந்தியா எரிவாயுக் குழாய் ஒப்பந்தம் சென்ற ஆண்டில் உருவாக்கப்பட்டது. மூன்று நாடுகளுக்கிடையிலான பேச்சுவார்த்தை முடிந்து ஒப்பந்தம் கையெழுத்தாகும் நிலையில் இருந்தது.

இரு நாடுகளுக்கிடையே மட்டுமன்றி, எண்ணெய்- எரிவாயு வளமிக்க ஈரான் மற்றும் மத்திய ஆசிய நாடுகளிலிருந்து தென்கிழக்காசிய நாடுகள் உள்ளிட்ட எல்லா ஆசிய நாடுகளையும் குழாய் மூலம் இணைப்பதற்கான திட்டமும் உருவாக்கப்பட்டிருந்தது. ஆசியப் பகுதிகளில் அமெரிக்க மேலாதிக்கத்தை தடுக்கும் நோக்கில் ரசியா மற்றும் சீனாவால் உருவாக்கப்பட்ட ஷாங்காய் கூட்டமைப்பின் அமர்வுகளில் இந்தியா- ஈரான்- பாகிஸ்தான் ஆகிய நாடுகளும் கலந்து கொண்டிருந்தன.

இந்த ஒப்பந்தத்தை தகர்ப்பதற்காகவே மார்ச் 2005- இல் இந்தியாவிற்கு "விஜயம்" செய்த

தொடர்ச்சி 7 பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# பேச்சுவார்த்தை: முதலாம் கட்டமும் இரண்டாம் கண்டமும்.



## வெறும் பேச்சு வேதனைகளைத் தீர்க்குமா?

மிகுந்த தயக்கங்களுடன் வீண் சர்சைகளுடன் அயல் வற்புறுத்தலின் பேரில் பெப்ரவரியில் ஜெனீவாவில் பேச்சுவார்த்தைகள் நடத்த உடன்பாடு காணப்பட்டது. எனினும் பேச்சுவார்த்தைகள் நடந்தன என்று சொல்லக் கூடிய விதமாக அங்கே எதுவுமே சாதிக்கப்படவில்லை.

அரசாங்கத் தரப்பில் பேச்சுவார்த்தைகட்குப் போனவர்களை விட உல்லாசப் பயணிகளாக உடன் சென்றோரே அதிகம் பேர். இறுதி நேரத்தில் சனாதிபதியின் சகோதரரும் அங்கே அனுப்பப்பட்டிருக்கிறார். சனாதிபதி கொழும்பிலிருந்தபடியே பேச்சுவார்த்தைகளை நெறிப்படுத்தினார் என்று சொல்லப்படுகிறது. அவரை நெறிப்படுத்த அவருக்கு இரு புறமும் ஜே.வி.பி. பிரமுகர்களான விமல் வீரவன்ஸவும் சோமவன்ச அமரசிங்ஹவும் இருந்ததாகவும் சொல்லப்படுகிறது. எல்லாம் முடிந்த பிறகு ஜே.வி.பி. தனக்குப் பேச்சுவார்த்தையின் முடிவில் வெளியான கூட்டறிக்கையுடன் உடன்பாடில்லை என்று கூறியுள்ளது. ஜாதிக ஹெல உறுமயவும் அவ்வாறே தெரிவித்துள்ளது. இதில் வியப்பதற்கு ஒன்றுமில்லை. விடுதலைப் புலிகளின் ஆயுதங்களைப் பறித்தெடுப்பதைவிட அவர்களுடன் பேசுவதற்கு எதுவுமே இல்லை என்பது தான் இந்த இரு கட்சிகளதும் நிலைப்பாடு. எனவே அவர்களையும் மகிழ்வித்துக் கொண்டு அமைதிக்கான பேச்சுக்களை ஜனாதிபதி முன்னெடுப்பது இயலாத காரியம்.

கூட்டறிக்கைக்குப் பின் விடுதலைப் புலிகள் தங்களுக்கே வெற்றி என்றும் அரசாங்கம் தனக்கே வெற்றி என்றும் சொல்லிக் கொள்வது தமது ஆதரவாளர்களை மகிழ்விக்க மட்டுமே உதவும். உள்ளுர இரு தரப்பினரும் மகிழவோ பெருமைப்படவோ பெரிதாக எதுவும் இல்லை. பேச்சுவார்த்தைகள் முறிவடையாமல். தடுக்கப்படுவதிற்குக் கூட இரு தரப்பினரும் ஆற்றிய பங்கு போதாதது. ஏனெனில் நோர்வேயின் குறுக்கீட்டின் பேரிலேயே பேச்சுவார்த்தைகள் குழம்பாமல் காப்பாற்றப்பட்டன.

முதலாவது, பேச்சுவார்த்தையின் போது நிகழ்ச்சி நிரலை மாற்றுகிற நோக்கத்துடனேயே அரசாங்கம் செயற்பட்டதும் இதில் வெற்றி பெறாததும் மட்டுமன்றி அரசாங்கத் தரப்பில் பங்கு பற்றிய பலரது அரசியல் நிலைப்பாடும் நம்பிக்கை தருவதாக அமையவில்லை. போர் நிறுத்த உடன்படிக்கை சட்டப்படி செல்லாது என்ற வாதம் முன்வைக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறான விடயங்களில் அரசாங்கத் தரப்பினரிடையில் உள்ள முரண்பாடுகள் மிகவும் கவலை தருவன. அரசாங்கத்துக்கு மட்டுமல்லாமல் சகல பேரினவாதக் கட்சிகளுக்கும் தேசிய இனப்பிரச்சனை பற்றியோ போர் பற்றியோ நிலையான அமைதி பற்றியோ நீண்டகாலத் தீர்வு பற்றியோ ஒரு திட்டவட்டமான நிலைப்பாடும் இல்லை என்பதைக் கடந்த இருபது ஆண்டுகளாக மீண்டும் மீண்டும் கண்டுள்ளோம். இவ்வாறான விடயங்களில் தனது இருபத்திமூன்றாம் ஆண்டில் உள்ள போர்ச் சூழல் இவர்கட்கு எதையுமே கற்பிக்கவில்லை என்றால் எதுவுமே எதையும் கற்பிக்கும் என நாம் நம்புவதற்கில்லை.

இலங்கை பாரிய பொருளாதார நெருக்கடியின் நடுவே உள்ளது. அதன் தீர்வு, நாட்டை மேலும் கடனாளியாக்கி உலகமயமாதலுக்கு இரையாக்குவதல்ல. ஆனால் உடனடியான நெருக்கடியிலிருந்து மீளுகிற வழிகளை மட்டுமே ஒவ்வொரு அரசாங்கமும் நாடி வந்துள்ளது. எதைச் செய்தால் அந்நிய மூலதனமும் கடன் "உதவியும்" கிடைக்கும் என்ற கணிப்பின் பேரிலேயே ஒவ்வொரு கொள்கையும் தீர்மானிக்கப்படுகிறது. அதே அடிப்படையிலேயே போர் நிறுத்தமும் தேசிய இனப்பிரச்சனையின் தீர்வும் அணுகப்படுகின்றன. இந்த நிலை மாறாமல் எந்தவிதமான புதிய அணுகுமுறையையும் நாம் எதிர்பார்க்க இயலாது.

விடுதலைப்புலிகள் நடுவே இன்னமும் அரசியலை முக்கியப்படுத்திப் போராட்டத்தின் அரசியல் பரிமாணத்தை வலுப்படுத்தும் அக்கறை போதாது. ஆயுதப் போராட்டத்தின் தேவையும் ஆயுத வலிமையைப் பேணும் தேவையும் போருக்கு ஆயத்தமாகவே இருப்பதன் தேவையும் பற்றி குற்றங் கூற வேண்டியதில்லை. ஆனால் அரசியல் திசை பற்றிய தெளிவு இல்லாமல் போராட்டம் வெகுதூரம் முன்னேற இயலாது. இடைநிறுத்தப்பட்டுள்ள இன்றைய போரைச் சிங்கள- தமிழ் மோதலாக மட்டும் குறுக்கி நோக்கும் வரை அதனுள் மறைவாயிருந்து இயங்கி வழிநடத்துகிற வர்க்க நலன்களையும் அந்நிய மேலாதிக்க நலன்களையும் தவறவிடுவது மிகவும் ஆபத்தானது.

இலங்கையின் தேசிய இனங்களிடையில் பரஸ்பர நம்பிக்கையீனம் உள்ளது. ஆனால் போர் மூலம் ஒரு இனத்தை மற்றது அழிப்பது அல்லது அடிமைப்படுத்துவதுதான் தீர்வு என்று எந்தச் சமூகத்தினரும் நம்பவில்லை. முக்கியமாக உழைக்கும் மக்களைக் கொண்ட பெரும்பான்மையினர் நம்பவில்லை. இனங்களிடையிலான நல்லுறவுக்கு ஆப்பு வைக்கிற முறையில் செயற்படுகின்றவர்கள்

**மோகன்**

யார் என்பதை அடையாளம் காணல் வேண்டும். அவர்களைத் தனிமைப்படுத்துவதுதான் விடுதலைக்குப் போராடுவோர் முன்னாலுள்ள முக்கியமான போராட்டம்.

இந்த நாடு பிரிவினைக்குட்படுவது எந்த தேசிய இனத்திற்கும் நல்லதல்ல. ஆனால் ஒற்றுமை என்பது ஒரு சமூகம் மற்றச் ச்மூகங்கள் மீது தொடர்ச்சியாக ஆதிக்கஞ் செலுத்துவதை வசதிப்படுத்துகிற ஒரு அமைப்பின் கீழ் இயலாது. எனவே தான் ஒற்றையாட்சி என்ற அமைப்பின் கீழ் தீர்வு இயலாதது. சமஷ்டி அமைப்பு என்பது கூட மேலாதிக்கத்திற்கெதிரான உத்தரவாதமல்ல. சுயநிர்ணயம் என்பது ஏற்பட்டால் ஒழிய எந்தவிதமான அதிகாரப்பரவலாக்கமும் பயன்படாது. இந்த அரசியல் உண்மையை முதலில் தெளிவாக மக்களிடம் முன்வைக்க வேண்டும். நமது பிரதான அரசியற்

தொடர்ச்சி 9ம் பக்கம்...

## அமெரிக்க அடியாட்களாக மாறும் இந்திய ஆளும் வர்க்கம்

*இந்திய ஆட்சி*

6ம் பக்க தொடர்ச்சி...

அமெரிக்க வெளியுறவுத் துறைச் செயலர் கொண்டலிசா ரைஸ், தங்களால் ரவுடி அரசாகக் கருதப்படும் ஈரானுடன் இந்தியா இவ்வொப்பந்தத்தில் கையெழுத்திட்டால் பொருளாதாரத் தடையை எதிர்நோக்க வேண்டிவரும் என்று வெளிப்படையாக எச்சரித்தார். தன்னுடைய எரிசக்தித் தேவைகளுக்கு, கரியமில வாயுவை வெளியிட்டு சுற்றுச் சூழலை மாசாக்காத அணுசக்தியைப் பயன்படுத்துவது நல்லதென்றும் அதற்கு அமெரிக்கா உதவத்தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார். மேலும் இந்தியாவை உலக வல்லரசாக்குவது என்று அமெரிக்கா திட்டமிட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கபடமும் திமிரும் நிறைந்த இந்தப் பேச்சை அரசு உடனே கண்டித்திருக்க வேண்டும். மாறாக, பிரதமர் சிங் அடிமைத்தனமாக அமெரிக்காவிலிருந்து இதை வழிமொழிந்தார். ஈரானிலிருந்து எரிவாயு கொண்டு வருவது பாதுகாப்பற்றது என்றும். அதற்கு எந்த வங்கியும் கடன் கொடுக்காது என்றும் அறிவித்ததுடன் இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்ற முயற்சி எடுத்த மணிசங்கர் அய்யரை பதவியிலிருந்தும் தூக்கினார் மன்மோகன்.

சுற்றுச்சூழல் குறித்த அமெரிக்காவின் அக்கறைக்கு விளக்கம் தேவையில்லை. சில ஆண்டுகளுக்கு முன்னர்தான். எரிவாயு இறக்குமதி செய்து அதிலிருந்து மின்சாரம்- தயாரிப்பதாகக் கூறிய அமெரிக்க என்ரான் நிறுவனத்திற்கு இந்திய அரசு அனுமதி அளித்தது. பிறகு என்ரான் திவாலான பின் அந்த நிறுவனம் வாங்கிய கடன் 3300 கோடி ரூபாயை நம் வரிப்பணத்திலிருந்து கட்டியிருக்கிறது மன்மோகன் அரசு. இன்று அதே அமெரிக்கா எரிவாயுவை விட அணுசக்தி சிறந்தது என்று சொன்னவுடனே 'ஆமாம்' என்று தலையாட்டுவதுடன் அணுசக்தி என்ற பெயரால் அடுத்த அடிமைத்தனத்திற்கு நாட்டை தயார்படுத்துகிறது.

அணுசக்தித் துறையைப் பொறுத்த வரை. அதன் சிவில் பயன்பாட்டுக்கும் (மின்சாரம் போன்றவை) இராணுவப் பயன்பாட்டுக்கும் இடையில் வேறுபாடு இருந்தாலும், இவற்றின் அடிப்படையாக அமையும் ஆய்வுகளில் வேறுபாடு இல்லை. மேலும் அணு வெடிப்பு சோதனை நடத்தியுள்ள இந்தியா அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் (NPT) கையெழுத்திடவும் மறுத்து வரும் நாடுமாகும். இதன் காரணமாக, அவ்வப்போது பொருளாதாரத் தடைகள் விதிப்பதுடன் அணுசக்தி தயாரிப்புக்குத் தேவையான செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை இந்தியாவுக்கு வழங்க அணு ஆயுத வல்லரசுகள் மறுத்தும் வருகின்றன.

இந்தியாவில் யுரேனியம் கிடைப்பதில்லை என்றாலும், அணுசக்தி தயாரிக்கப் பயன்படும் தோரியம் என்ற தாதுப்பொருள் ஏராளமாக (உலக இருப்பில் 75%) உள்ளது. துவக்க முதலே இந்தியாவின் அணு சக்தி ஆய்வுகள் தோரியத்தை மையமாக வைத்து செய்யப்படுவதால். இந்த ஆய்வில் முன்னிலை வகிக்கிறோம் என்றும் இறுதிக்கட்ட ஆய்வில் உள்ள நாம் வெகு விரைவில் இத்துறையில் உலகின் முதல் நாடாகிவிடுவோம் என்றும் கூறுகிறார் பாபா அணு ஆராய்ச்சி மையத்தின் முன்னாள் இயக்குனர் ஏ. என். பிரசாத். இதன் மூலம் ஆண்டுக்கு 5,30,000 மெகாவாட் மின்சாரத்தை அடுத்த 300 ஆண்டுகளுக்கு உற்பத்தி செய்ய முடியும் என்றும் அவர் கூறுகிறார்.

மன்மோகன் சிங் ஆட்சி அமெரிக்காவில் கையெழுத்திட்டிருக்கும் இந்திய அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம். தோரியத்திலிருந்து அணுசக்தி தயாரிக்கும் இந்த சுயசார்பான ஆய்வை ஒழித்துக் கட்டி, யுரேனியத்தை, அதாவது அமெரிக்க இறக்குமதியை சார்ந்திருக்கும் நிலையை இந்தியா மீது திணிக்கிறது. அணுமின்சார உற்பத்தி தோற்றுவிக்கும் அணுக் கழிவிலிருந்துதான் அணு ஆயுதம்



தயாரிக்கப்படுவதால் இந்த அணுக் கழிவுகள் அனைத்தையும் தன்னிடம் ஒப்படைத்துவிட வேண்டுமென சிவில் உற்பத்திக்குத் தரப்படும் யுரேனியம் ஆயுத உற்பத்திக்கு பயன் படுத்தப்படாமல் இருக்கிறதா என்று கண்காணிக்கும் அதிகாரமும் இந்திய அணு ஆய்வுகளை சோதனையிடும் அதிகாரமும் தனக்கு வேண்டுமென்கிறது.

இந்த ஒப்பந்தம் ஒரு அடிமைச் சாசனம் என்று எதிர்க்கும் இந்திய அணு விஞ்ஞானிகள் அனைவரும் அணுசக்தித் துறையில் அமெரிக்கா முன்னிலை வகிக்கவில்லை என்றும் தற்போதைய நமது மொத்த மின் சக்தி தேவையில் 3% மட்டுமே அணு சக்தியிலிருந்து கிடைப்பது என்பதால் இந்த ஒப்பந்தமே அர்த்தமற்றது என்றும் குமுறுகிறார்கள்.

ஆனால், இவையெதையும் மன்மோகன் அரசு பொருட்படுத்தவில்லை. அணுசக்தி ஆய்வில் முன்னேறிய நாடு என்ற 'பிரம்மரிஷி' பட்டத்தை அமெரிக்கா இந்தியாவுக்கு வழங்க விருப்பதாகவும், ஐ.நா.வின் பாதுகாப்பு கவுன்சிலில் இடம் பிடிக்க இது உதவுமென்றும், அதாவது ரைஸ் கூறியது போல இந்தியாவை அமெரிக்கா வல்லரசாக்குமென்றும், அதற்காக இத்தகைய தியாகங்களைச் செய்யலாமென்றும் நியாயப்படுத்துகிறது. ஆனால் இந்தியாவை 'அணு ஆய்வில் முன்னேறிய நாடு' என்று தாங்கள் கருதவில்லையென்றும், அணு ஆய்வில் ஈடுபட்டுவரும் நாடு என்று மட்டுமே கருதுவதாகவும் கூறி குட்டை உடைத்துவிட்டார் அமெரிக்க வெளியுறவுத்துறை இணைச் செயலர் நிக்கலஸ் பேர்ன்ஸ்.

இருந்தபோதிலும், புஷ் வருகையையொட்டி இந்திய அமெரிக்க அணு சக்தி கூட்டு என்ற பெயரிலான அந்த அடிமை ஒப்பந்தத்தை நிறைவேற்றத் துடிக்கிறது மன்மோகன் அரசு. ஏனெனில் இதற்கான அடிப்படை இந்திய அமெரிக்க இராணுவ ஒப்பந்தத்தில் இருக்கிறது. ஆசியப் பகுதியில் சீனாவுக்கு எதிரான அமெரிக்க அடியாளாக இந்தியாவை மாற்றும் ஜூலை 2005 ஒப்பந்தம் இந்த அணுசக்தி அடிமைத்தனத்தை முன் நிபந்தனையாகக் கொண்டது. இந்தியாவில் சீனத்தை குறிவைத்து "பாட்ரியட்" ஏவுகணைகளை நிறுவுவது. பனிமலைகள் முதல் பாலைவனம் வரை அனைத்து வாய்ப்புகளையும் கொண்ட இந்தியாவில் தனது ஆக்கிரமிப்புப் போருக்கான பயிற்சிகளை அமெரிக்க இராணுவம் மேற்கொள்வது, அமெரிக்காவின் எதிர்கால ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் காலாட்படையாக இந்திய இராணுவம் பங்கு பெறுவது 32, 000 கோடி ரூபாய்க்கு அமெரிக்காவிடமிருந்து ஆயுதக் கொள்முதல், அமெரிக்க- இந்திய கடற்படைகள் இணைந்து இந்து மாகடல் பிராந்தியத்தில் ரோந்து சுற்றுவது என்பன போன்ற பல அம்சங்களை உள்ளடக்கியது அவ்வொப்பந்தம்.

வல்லரசு என்ற பெயரில் அமெரிக்க அடியாளாக நியமனம் பெறத்துடிக்கும் இந்திய ஆளும் வர்க்கத்தின் இந்தக் கனவுதான் ஈரானுக்கு எதிரான அநீதியான தீர்மானத்தில் இந்தியாவை கையெழுத்திட வைத்திருக்கிறது. உலக நாடுகளும் மக்களும் கண்டு வெறுக்கும் இஸ்ரேலைப் போன்ற- ஆனால் அதைவிடத் தரம் தாழ்ந்த- அடியாளாக நம் நாடு மாற்றப்படுகிறது. மறுகாலனியாக்கம் தோற்றுவிக்கும் பொருளாதார அடிமைத்தனத்தினும் கொடிய இந்த அடியாள்தனத்திலிருந்து நாட்டை விடுவிக்க வேண்டுமானால் மக்கள் துரோக மன்மோகன் சிங் அரசு உடன் தூக்கியெறியப்படவேண்டும். அமெரிக்க மேலாதிக்கத்திற்கும் மறுகாலனியாதிக்கத்திற்கும் எதிரான போராட்டங்கள் தீவிரப்படுத்தப்பட வேண்டும்.

-ரஹீம்-

நன்றி.

புதிய ஜனநாயகம் மார்ச் 2006

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# திராவிட இயக்க கட்சிகள் யாருக்காக ஆட்சி நடாத்தின!

திராவிட இயக்கம் என்பது உண்மையில் காங்கிரஸ் கட்சியின் ஆதிக்கத்தில் இருந்து வந்த பார்ப்பனியத்துக்கு எதிராக ஈ.வெ.ரா. கையாண்ட ஒரு தந்திரோபாயம் என்பதை இன்றைய 'பெரியாரிய' சிந்தனையாளர்கள் ஏற்கிறார்கள். தென்னிந்தியாவின் கணிசமான பகுதி சென்னை மாநிலமாக இருந்த போது, ஆரிய– திராவிட என்ற கருத்து மேட்டுக்குடிப் பிராமணர்களைத் தனிமைப்படுத்த உதவியாயிருந்தது. திராவிடம் என்ற தேசிய அடையாளமும் திராவிட நாடு என்ற கோரிக்கையும் நடைமுறைச் சாத்தியமற்றவை என்பதை ஈ. வெ. ரா இந்திய விடுதலைக்கு முன்னமே உணர்த்திருந்தார் என்றே கூற வேண்டும். அவரிடமிருந்து அண்ணாத்துரை தலைமையில் பிரிந்தவர்கள் திராவிட நாடு கோரிக்கை பற்றி வற்புறுத்திப் பேசிய போது "திராவிட நாடாவது, வெங்காயமாவது!" என்று அவர் அதை நிராகரித்துப் பேசினார். ஆனாலும் 1960 களின் தொடக்கத்திற் கூட "வடக்கு வாழ்கிறது, தெற்குத் தேய்கிறது" "திராவிட நாடு திராவிடருக்கே" என்கிற கோஷங்கள் எழுந்தன் "ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்?" என்ற தலைப்பில் முரசொலிமாறன் எழுதிய நூல் 1960க்குச் சற்று முன்னர் வெளியானது. தமிழ் நாட்டில் தமிழ்த் தேசியம் இருந்து வந்துள்ளது. ம.பொ.சியின் தமிழரசுக் கழகமும் பின்பு சி.பா ஆதித்தனாரின் "நாம் தமிழர்" இயக்கமும் வலியஅரசியல் சக்திகளாக அமையாவிட்டாலும் திராவிடம் என்ற அடையாளத்திற்கு மறுப்பாக தமிழ் என்ற அடையாளத்தை வற்புறுத்தியவையே.

திராவிடர் கழகத்திலிருந்து தி.மு.க பிரிந்ததன் மெய்யான



காரணம் ஈ.வெ.ரா - மணியம்மையார் திருமணமல்ல. பாராளுமன்ற, சட்ட மன்ற தேர்தல் மூலம் தமிழர் அரசியல் அதிகாரத்தைப் பிடிக்கிற ஆவல் அண்ணாத்துரைக்கும் அவரது ஆதரவாளர்கட்கும் இருந்தது. தேர்தல் அரசியல் விளைவாக ஏற்படக் கூடிய சமரசங்கள் பற்றி ஈ.வெ.ரா. அறிந்தே இருந்தார். அவர் திராவிடர் கழகத்தைச் சுயமரியாதை இயக்கத்தின் தொடர்ச்சியாகவும் வெகுசன அரசியல்சார்ந்த எதிர்ப்பியக்கமாகவும் சமூகச்சீர்திருத்தச் சக்தியாகவுமே முன்னெ டுக்க விரும்பினார். இதுவே தி.க.விலிருந்து தி.மு.க. உடையவும் நீண்டகாலமாகவும் இரு கழகங்களும் கடுமையான பகைமை பாராட்டவும் காரணமாயிற்று.

தி.மு.க எவ்வளவு தீவிரமாகத் திராவிட அரசியல் பிரசாரம் செய்த போதும் திராவிடநாடு நடைமுறைச் சாத்தியமற்றது என்பதை அதன் தலைவர்கள் உள்ளூர அறிந்தே இருந்தனர் என்பது திராவிட நாட்டுப் பிரிவினைக் கொள்கையை எவ்வளவு இலகுவாக, 1962ம் ஆண்டு நேரு பிரிவினைத் தடைச்சட்டத்தைப் புகுத்திய கையோடு, தி.மு.க. கைவிட்டது என்பதிலிருந்து அறியலாம். தி.மு.க. தலைமை பிரிவினைக் கொள்கையைக் கைவிட எதிர்பார்த்த தருணம், சீனாவுடனான இந்திய எல்லைப் போரைக் காரணங்காட்டி நேரு கொண்டு வந்த பிரிவினைத் தடைச்சட்டத்தின் மூலம் கைக்கெட்டியது. அதன் பின்னர். தி.மு.க. காங்கிரஸை மிஞ்சிய இந்தியத் தேசப்பற்றாளர்களைக் கொண்ட கட்சியாகி விட்டது. மத்திய அரசுடன் முரண்படும் போது தமிழ்த் தேசியவாத அரசியலை வற்புறுத்துவதும் சுமுகமான உறவு உள்ள போது தளர்த்துவதும் தி.மு.க வின் வழமையாகிவிட்டது.

தி.மு.கவிலிருந்து 1960 அளவில் ஈ.வெ.கி. சம்பத் பிரிந்து போன போது அவர் இந்திய ஒருமைப்பாட்டை ஏற்றுத் தமிழ் நாட்டிற்கு அதிகளவிலான உரிமைகளை வற்புறுத்தினார். சோவியத் யூனியனின் சுயாட்சி முறை போன்ற ஒன்று இந்தியாவினுள் தமிழகத்திற்குப் பயன்படும் என்ற நிலைப்பாடு காரணமாகப் பிரிந்த அவரைத் துரோகி என ஓரங்கட்டுவது அண்ணாத்துரை தலைமைக்கு எளிதாகவே இருந்தது. எனினும் அந்தப் பிளவுக்குப் பின்பு தி.மு.க என்றுமே அடிப்படையில் பிளவுபட்டதில்லை. பிளவுகட்குப் பின்பு கொள்கைகள் புதிதாக வகுக்கப்பட்டனவேயொழிய அவற்றை முன்னிறுத்தி அரசியல் விவாதங்கள் நடந்ததில்லை.

தலைமைப் பதவிக்கான போட்டி தனிமனிதர்களைச் சார்ந்த சிறு குழுக்களிடையிலான உட்பூசல்கள், சாதி அரசியல் போன்றவையே பிளவுகளின் ஆதாரமாகி நின்றன. தமிழக மாநில அரசியல் அதிகாரத்தைச் சுவைக்கத் தொடங்கிய தி.மு.க. தலைவர்கள் பல வேறு மட்டங்களிலும் ஊழல்களில் ஈடுபட்டனர். இது தி.மு.கவுக்கு மட்டுமுரிய ஒரு குற்றமல்ல. சகல பாராளுமன்ற, சட்டசபை அரசியற் கட்சிகளிலும் இது இயல்பாகவே தோன்றி வளர்ந்தது.

மத்திய அரசிற்கெதிராக தி.மு.க, தொடக்கத்தில் அ.இ.அ.தி.மு.க என அறியப்பட்ட அ.தி.மு.க, இன்னும் ம.தி.மு.க உட்படப் பலவேறு சூழ்நிலைகளில் உருவாக்கப்பட்ட கட்சிகள் அனைத்துமே பதவிச் சண்டை காரணமாகத் தோன்றியவை தாம். இங்கே யார் சரி யார் பிழை என்பதை விட முக்கியமானது பிளவுகட்குக் காரணமாக அமைந்தது கொள்கை அல்ல என்பது தான். திராவிட இயக்கத்தினுள் தமிழ்த் தேசியவாதத்தின் தாக்கம் முக்கியமானதாகவே இருந்தாலும் நடைமுறை அரசியல் தேவைகள் அவற்றை விட முக்கியமானவையாக இருந்தன.

1970களில் தி.மு.க, அ.தி.மு.க. தலைவர்களின் ஊழல்கள் பற்றிய விசாரணைக்குழு அறிக்கைகள் மூலம் இந்திரா காந்தியால் அக்கட்சிகளின் எதிர்ப்பை மட்டுப்படுத்த முடிந்தது. அப்போது கருணாநிதி முன்வைத்த "உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம்" என்ற சுலோகம்

## இரண்டுகோடீஸ்வரத் தலைமைகள் தொடர்கின்றன.

### தமிழகத்தில்

## 'நடந்ததை மறந்து விடுகிற' அரசியல்

—நரசிம்மா—

திராவிடக் கட்சிகள் அனைத்தினதும் சூத்திரமாகி அதன் நடமுறை "பதவிக்குக் கை கொடுப்போம், பறித்திடின் குரல் கொடுப்போம்" என்ற விதமாக மாறியது. காங்கிரஸ் பிடிவாதமாகவே தனிக்கட்சி அரசாங்கம் என்ற நிலைப்பாட்டை மேற்கொண்டதால் அங்கே பதவிக்கு வாய்ப்பில்லை. ஆனால் 1989ம் ஆண்டு ராஜீவ் காந்தி ஆட்சியை கம்யூனிஸ்ற்றுக்களின் ஆதரவுடன் வி.பி.சிங் தலைமையிலான கூட்டணி விழுத்திய போது, தி.மு.க அதில் பங்காளியாக இருந்தது. முரசொலி மாறன் மத்திய அரசில் அமைச்சரானார்.

அதன் பின்பு மத்திய அரசில் அமைச்சர் பதவிகளைக் குறிவைத்தே தமிழகத்தின் பிரதான திராவிடக் கட்சிகளும் சாதிய அரசியலில் மூழ்கியுள்ள பாட்டாளி மக்கள் கட்சியும் தமது கூட்டணிகளைத் திட்டமிட்டுள்ளன.

எந்தப் பார்ப்பனியத்தையும் சாதியத்தையும் இந்து மதவாதத்தையும் எதிர்த்துத் திராவிட இயக்கம் உருவானதோ அந்தச் சிந்தனைகளை மையமாகக் கொண்ட பாரதிய ஜனதா கட்சியில் முதலில் ஜெயலலிதா பங்காளியானார். அப்போது ஜெயலிதாவின் பார்ப்பன சாதி அடையாளத்தின் அடிப்படையில் அவரது சந்தர்ப்பவாதம் விளக்கப்பட்டது. அடுத்து தி.மு.கவும் ம.தி.மு.கவும் பாரதிய ஜனதாவுடன் கூட்டரசாங்கம் அமைத்த பின்பு தமிழகத்தில் பா.ஜ.கவுக்கு எதிரான கருத்துத் தளம் ஆட்டங் கண்டது. திராவிட இயக்கங்களது ஒத்துழைப்புடன் பா.ஜ.க. தன்னைத் தமிழகத்தின் அரசியலில் ஒரு முக்கியமான சக்தியாக நிலை நிறுத்த முடிந்துள்ளது.

பா.ம.க.தலைவர் ராமதாசும் ம.தி.மு.க தலைவர் வை.கோ. என்கிற கோபாலசாமியும் ஈழத்தமிழரின் விடுதலைப் போராட்டத்தில் விடுதலைப் புலிகட்கு ஆதரவான முறையில் பேசுவதை வைத்து, அவர்களைப் பற்றி, குறிப்பாக வை.கோ வைப் பற்றி, இலங்கைத் தமிழரிடையே ஒரு மயக்கம் உள்ளது. அது தமிழ்ச் செய்தி ஏடுகளால் ஊக்குவிக்கப்பட்டு வருகிறது. ஆனால் இந்திய மேலாதிக்க நலன்கட்கு எதிராக வை.கோ. தன் சுட்டுவிரலையும் அசைக்க மாட்டார் என்பதை பாரதிய ஜனதாக் கட்சியுடனான கூட்டணியில் அவர் உறுப்பினராக இருந்த போது கண்டிருக்கிறோம்.

விடுதலைப் புலிகள் மீதான தடை பா.ஜ.க தலைமையிலான தேசிய சனநாயக முன்னணி ஆட்சியின் கீழ்த் தொடர்ந்தது. அதைக் கண்டிக்க விடுதலைப்புலிகளின் நண்பர்கள் என்று சொல்லப்பட்ட ஜோஜ் ஃபேணான்டெஸ், வை.கோ. ஆகியவர்கள் துணியவில்லை. 2000 மே மாதம் விடுதலைப் புலிகள் யாழ் குடாநாடு முழுவதையும் கைப்பற்றினால் இந்திய அரசாங்கம் குறுக்கிடக் கூடும் என்ற நிலை இருந்தது. அதைக் கண்டித்து எந்த விதமான எதிர்ப்பு நடவடிக்கையிலும் கருணாநிதியோ வை.கோ.வோ இறங்கவில்லை. தமிழகத்தில் உள்ள ஈழத் தமிழர் அனுதாப உணர்வைப் பயன்படுத்தித் தமது ஆதரவுத் தளத்தை விரிவுபடுத்தியதற்கு அப்பால் தி.மு.க.வோ வை.கோ.வோ விடுதலைப் புலிகட்காக மத்திய அரசைப் பகைக்க ஆயத்தமாக இல்லை. தமிழகத்தின் மக்களுடைய கடும் எதிர்ப்பைக் கருதியே எந்த இலங்கை அரசாங்கத்திற்கும் வெளிவெளியாகத் தமது ஆதரவைத் தெரிவிக்க அவர்கள் தயங்குகின்றனர். இக் காரணத்தாலேயே ஜெயலலிதா கூட இம் முறை தனது விடுதலைப் புலி எதிர்ப்பை அடக்கி வாசித்துள்ளார். இலங்கையின் தேசிய இனப் பிரச்சனை பற்றிய பேச்சுவார்த்தைகள் பற்றிய இந்திய ஆட்சியாளர்களது நிலைப்பாடு வெளிவெளியாக ஆதரவு மறைமுகமாக குழிபறிப்பு என்ற தளத்திலே தான் நிற்கிறது.

இது வரையிலான தி.மு.க – ம.தி.மு. க நட்புறவின் ஒரு காரணம் அ.தி.மு. கவுடனான முரண்பாடு. மற்றது மத்திய அரசில் மந்திரிப் பதவி– எனினும் தி.மு.கவின் வாரிசு அரசியல் காரணமாக ஓரங்கட்டப்பட்டுக் கட்சியின்னின்று பிரிந்த கோபாலசாமியின் ம.தி.மு.க ஒரு வலிய கட்சியாக வளருவதை கருணாநிதி குடும்பம் ஏற்காது. அதுவே இம்முறை கோபாலசாமி அ.தி.மு.கவுடன் கூட்டுச் சேர்ந்த நியாயம். மற்றப்படி இக் கட்சிகள் யாவும் தமிழக முதலாளிய நலன்களை அடையாளப்படுத்துகின்றன. அந்த நலன்கள் இந்தியா என்ற வல்லரசின் வலிமையைப் பெருமளவும் நம்பியுள்ளன. எனவே யார் ஆட்சிக்கு வந்தாலும் ஈழத்தமிழரின் நிலையில் மாற்றத்துக்கு இடமில்லை.

கருணாநிதியையோ ஜெயலலிதாவையோ பற்றி ஈழத்தமிழர்கள் எதிர்பார்ப்பதற்கு எதுவுமில்லை. ஆனால் கோபாலசாமி பற்றிய நம்பிக்கைகள் இங்கு உருவாக்கப்பட்டுள்ளன. அவருடைய உரைகளும் நேர்காணல்களும் அவர் ஈழத்தமிழர்கட்காக மத்திய அரசிலும் மாநில அரசிலும் குரல் கொடுப்பார் என்ற நம்பிக்கை உள்ளது. அவர் பொடா சட்டத்தின் கீழ் ஜெயலலிதா அரசாங்கத்தின் ஆணைப்படி விடுதலைப் புலிகட்கு ஆதரவாகப் பேசியதற்காகச் சிறையில் அடைக்கப்பட்டபோது, அவரது கட்சி மத்திய அரசில் பங்காளியாயிருந்தது. ஆனால் அவரை



விடுவிக்க பா.ஜ.கட்சியோ அரசாங்கமோ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. சட்ட நடவடிக்கை மூலம் நீண்டகாலச் சிறை வாசத்தின் பின்னாலே வெளியே வந்த கோபாலசாமியால் தன்னையே காப்பாற்றிக் கொள்ள இயலாது என்றால் ஈழத் தமிழர்கட்குப் பாதுகாப்பாக அவரால் என்ன செய்ய முடியும் என்று நாம் யோசித்துப் பார்ப்பது நல்லது.

நிச்சயமாக கோபாலசாமி வாய்ப்பேச்சளவிலாவது ஈழத் தமிழர்கட்கும் அவர்களது விடுதலைக்கும் ஆதரவாகத் தெரிபவர். திருமாவளவனும் ராமதாசும் அப்படித்தான். ஆனால் அவர்கள் மூலம் ஈழத்தமிழருக்கு என்ன கிட்டும் என்பதைப் பற்றி நாம் தெளிவாக இருக்கவேண்டும். உண்மையில் அவர்கள் எதிர்க்கட்சியில் உள்ளபோது செய்யக்கூடியதை விடக் குறைவாகவே ஆளும் தரப்பில் இருக்கும் போது ஈழத்தமிழர்கட்காகச் செய்வார்கள் என எதிர்பார்க்கலாம். ஏனெனில் ஆளுங் கட்சியில் உள்ள போது அங்கே கவனித்துக் கொள்ள வேண்டிய அலுவல்கட்கு அவர்களுடைய புலி ஆதரவுப் பேச்சுக்கள் அதிகம் உதவமாட்டாது. அதை விட இந்திய மேலாதிக்கத்தின் திட்டங்கள் கட்சி அரசியல் கடந்த ஒரு தளத்தில் செயற்படுத்தப்படுகின்றன. தமிழகத்தின் எந்த பாராளுமன்ற அரசியற் கட்சியும் (அதற்கெதிராக நிற்க வேண்டியவர்களான சி.பி.ஐ, – சி.பி.எம் உட்பட) அந்த மேலாதிக்க நலன்களை எதிர்க்கக் கூடியவர்களல்ல.

தி.மு.க, அ.தி.மு.க, ம.தி.மு.க, என்பன இந்தியப் பெருமுதலாளித்துவத்தின் முழுமையான பங்களிகளாக உருமாறி வருகின்றன. அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனங்களை வரவேற்கின்றன. அவர்களிடம் தமிழ் நாட்டு மக்களோ ஈழத்தமிழர்களோ எதை எதிர்பார்க்க முடியும்.

---

### கைலாசபதியின் பரந்த

11ம் பக்க தொடர்ச்சி...

தனது மதிப்பீட்டை மாற்றியிருந்தால் அது ஒரு பெரிய மனமாற்றமே.

மதுசூதனனுக்கும் பொன்னையனுக்கும் உள்ள பொதுவான தேவை ஒன்றே. "கைலாசபதியை வெறுங் குறுங்குழுவாத அரசியலுக்குள் அடைக்கக் கூடாது" என்று மதுசூதனன் சொல்வதைப் பொன்னையன் வேறு சொற்களில் சொல்கிறார். கைலாசபதிக்கு இ.மு.எ.ச. அடையாளம் போடலாம். ஆனால் அவருக்கு தேசிய கலை இலக்கியப் பேரவை தாயகம் சஞ்சிகை என்பனவற்றுடன் இருந்து வந்த நெருக்கத் தையும் மாக்ஸிய லெனினியவாதிகளுடன் இருந்த ஆழமான அரசியல் உறவையும் பற்றிப் பேசக் கூடாது.

யாரும் இங்கே கைலாசபதிக்குப் பூரண உரிமை கொண்டாடவில்லை. ஆனால் கைலாசபதியின் கொள்கைகளும், நிலைப்பாடும், செயற்பாடும் அவருக்கு வழங்கிய தெளிவான அடையாளத்தைப் பூசி மெழுகி அவரைச் "குறுங்குழுவாதத்திலிருந்து" மீட்கிறவர்களது நோக்கம், கைலாசபதியின் அரசியல் அடையாளத்தை மறுப்பதற்கே ஒழிய வேறல்ல.

இரண்டு ஆண்டுகள் முன்பு தோழர் கார்த்திகேசனுக்கு நினைவு மலர் வெளியிட்டு அவரைக் கேவலப்படுத்தியவர்களில் ஒருவரே பொன்னையன். அவர் கைபட்டு எவரதும் அடையாளம் மறைய பொன்னையன் பஸ்மாசுரனும் இல்லை, மற்றவர்கள் முட்டாள்களுமில்லை. தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் பேர்க் குழப்பம் ஏற்பட வேண்டுமென்றே மலையக கலை இலக்கியப் பேரவை, முற்போக்கு கலை இலக்கியப் பேரவை என்றெல்லாம் மாறு வேடங்கள் போடுகிற பேர்வழிகளால் சுயமான நிலைப்பாட்டுடன் எதுவும் பெரிதாகச் செய்ய இயலாது. என்றாலும் நச்சுப் பூண்டுகள் முளைவிடும் போது காட்டாமலும் களையாமலும் இருக்க இயலாது.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# அமெரிக்க- இந்திய- யப்பானிய அரசியல் ராணுவக் கூட்டு உலக மேலாதிக்கத்திற்கே!

அமெரிக்க இந்தியக் கூட்டு வெற்றி பெற்று வருகின்றமை இந்திய மக்களின் நலன்களுக்காக அல்ல. பொருளாதார ராணுவ ரீதியில் வளர்ச்சி பெற்று வரும் சீனாவை சுற்றி வளைக்கும் அமெரிக்க மூலோபாயத்திட்டத்தின் அடிப்படையிலேயேயாகும். இதனாலலேயே பல ராணுவக் கூட்டு ஒப்பந்தங்களை அமெரிக்கா இந்தியாவுடன் செய்து வருகிறது. சமாதானப் பயன்பாட்டுக்காக அணு சக்தியெனப்பட்ட உடன்படிக்கையை அமெரிக்காவும் இந்தியாவும் கைச்சாத்திட்டபின் அமெரிக்கா இந்தியாவுக்கு அதிநவீன போர்விமானங்களை வழங்குவதற்கு உடன்பட்டுள்ளது. இந்தியாவின் பலவகைப்பட்ட சண்டை விமானங்களின் தேவைகளைக் கவனத்தில் எடுத்து அவ்வாறான விமானங்களை வழங்க அமெரிக்கா கடப்பாடுள்ளதாக பென்டகன் தெரிவித்துள்ளது. F16, F18 ரக விமானங்களை வழங்க விருப்பந் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்கப்படைக்குச் சேர்ந்து கொள்ளும் புதிய விமானங்கள் தொடர்பான தொழில்நுட்ப தகவல் பரிமாற்றங்கள் வழங்குவதற்கும் கூட்டு உற்பத்திக்கும் ஏற்பாடுகள் செய்யப்படும்.

இந்தியா அடுத்த 15 வருடங்களில் 126 பல்வகைச் செயற்பாடுள்ள யுத்த விமானங்களை பெற்றுக் கொள்ள திட்டமிட்டுள்ளது. ரஷ்யாவும், பிரான்சும் இந்தியாவிற்கு விமானங்களை இதுவரை வழங்கி வந்தன. ஆனால் இந்தியா பலதரப்பட்ட சண்டை விமானங்களை வாங்கத் திட்டமிட்டுள்ளது. அவற்றில் F16, F18 ரக அமெரிக்க விமானங்களும் அடங்கும்.

சென்ற வருடம் வாஷிங்டனில் கைச்சாத்தான அமெரிக்க- இந்திய இராணுவ உடன்பாட்டின்படி ஆயுத விற்பனை, கூட்டு இராணுவத்தளபாட உற்பத்தி, ஒத்துழைப்பு, ஏவுகணைப் பாதுகாப்பு என்பன அடங்குகின்றன. அமெரிக்க- இந்தியக் கூட்டு எதிர்காலத்தில் யப்பானையும் இணைத்துக் கொள்ளும் என எதிர்பார்க்கலாம். அமெரிக்க ஆசியுடன் இந்தியா அயல் நாட்டு விவகாரங்களில் தலையிட்டு பொலீஸ்காரன் வேலையை முனைப்புடன் செய்யப்போகிறது. இந்தக் கூட்டு இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கலாம். இங்கே ஒரு வினோதமான சர்வதேச அணுகு முறை காணப்படுகிறது. இந்தியாவை நம்ப முடியாத தமிழ்த்தரப்பினர் அமெரிக்க ஆதரவு ஊடாக இந்திய நண்பராகின்றனர். அவ்வாறே அமெரிக்காவை எதிர்ப்பதாகக் கூறும் சிங்களத்தரப்பினர் இந்திய ஆதரவின் மூலமாக அமெரிக்க நண்பராகின்றனர்.

இந்தியா இப்போது அமெரிக்க சார்பு நிலை எடுத்துள்ளதால் உள்நாட்டிலும் இப்பிராந்தியத்திலும் விடுதலை இயக்கங்களைக் கட்டுப்படுத்தும் வேலையில் வேகமாக ஈடுபட்டுள்ளது. அதன் முதல் நடவடிக்கையாக நேபாள எல்லையில் இந்திய இராணுவத்தை அதிகரித்துள்ள அதே வேளையில் நேபாள அரசுக்கு ஆயுதங்களை வழங்கியும் வருகின்றது. இலங்கை அரசாங்கத்துடன் மிக நெருக்கமாகவும் இந்தியா செயற்படுகிறது. பயங்கரவாதம் தீவிரவாதம் என்பவற்றை ஒடுக்கும் போர்வையில் அமெரிக்க இந்தியக் கூட்டு எல்லா விடுதலை இயக்கங்களுக்கும் பாரிய அச்சுறுத்தலேயாகும்.

எனவே எந்த ஒரு விடுதலை இயக்கமும் தனது நண்பன் யார்? எதிரி யார்? என்பதை சரியாகக் கணிப்பீடு செய்வதிலேயே அதன் வெற்றியும் எதிர்காலமும் தங்கியுள்ளது. அமெரிக்கா இந்தியா நண்பர்களா? எதிரிகளா? என்பதைத் தீர்மானிப்பது விடுதலை இயக்கங்களுக்கே உரிய பொறுப்பாகும்.

-சீறி-

# தலவாக்கெல்லை நகர சபையை கைப்பற்றியது யார்?

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபை தேர்தலில் தலவாக்கெல்லை நகரசபையை சதாசிவம் தலைமையிலான இலங்கை ஜனநாயக ஐக்கிய முன்னணி கைப்பற்றியுள்ளதாக ஊடகங்கள் விளம்பரப்படுத்தி வருகின்றன. சில தமிழ் ஊடகங்கள் அச்சபையை தமிழர்கள் கைப்பற்றியுள்ளனர் என்றும் அது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததென்றும் பெருமை அடித்துக் கொண்டன.

சதாசிவம் தலைமையிலான இ.ஐ.ஐ.முயின் மீன் சின்னத்திற்கு தலவாக்கெல்லை நகரசபையில் வாக்குகள் அதிகமாக கிடைத்துள்ளன. அதிலிருந்து 5பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அதில் 3 சிங்களவரும் 2 தமிழரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஆனால் அவர்களின் பெயர்கள் வேட்புமனுவில் இல்லை. அவர்களின் பெயர்கள் தேர்தலுக்கு பிறகு தேர்தல் ஆணையாளருக்கு கொடுக்கப்பட்டுள்ளன. அவர்களின் பெயர்கள் நிராகரிக்கப்பட்ட ஐ.ம.சு முன்னணியின் வேட்பு மனுவில் இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

ஐ.ம.சு. முன்னணியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டவுடன் ஜனாதிபதி மஹிந்தவின் தலையீட்டால் இ.ஜ.ஐ முன்னணியின் பட்டியல் ஐ.ம.சு. முன்னணிக்காக வாங்கப்பட்டு விட்டது. அதாவது ஐ.ம.சு.முன்னணி (இ.தொ.கா, ம.ம.மு உட்பட) தமது ஆதரவாளர்களை மீன் சின்னத்திற்கு வாக்களிக்கும்படி பிரசாரம் செய்தனர். அந்த அடிப்படையில் இ.ஜ.ஐ முன்னணியின் வேட்புமனுவில் இடம்பெற்றவர்கள் இராஜினாமச் செய்தனர். அவர்களுக்கு பதிலாக ஐ.ம.சு முன்னணியின் நிராகரிப்பட்டிருந்த வேட்பு மனுவிலிருந்து 5பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். அதிலிருந்து சிங்களவரொருவர் தலவாக்கெல்லை நகர சபை தலைவராக நியமிக்கப்படுவார். அதனால் தலவாக்கெல்லை நகர சபையை ஐ.ம.சு முன்னணி கைப்பற்றியது என்பதே உண்மை.


இந்த மாதிரியான பட்டியல் மாற்றும் விடயம் தேர்தல் சட்டத்திற்கு முரணானதாகும். இதற்கு எதிராக தலவாக்கெல்லை நகரசபைக்குள் வசிக்கும் வாக்காளர்கள் அல்லது ஒரு வாக்காளர் விரும்பினால் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துப் பார்க்கலாம்.

அதாவது நிராகரிக்கப்பட்ட பட்டியலில் இருந்தவர்கள் வெற்றி பெற்ற பட்டியலினூடாக எவ்வாறு பதவிக்காக நியமிக்கப்படலாம். அத்துடன் இந் நடவடிக்கை வாக்காளர்களை ஏமாற்றும் நடவடிக்கையுமாகும்.இந்த ஏமாற்றும் நடவடிக்கைக்காக பல லட்சக் கணக்கான ரூபாய்கள் சன்மானமாக கொடுக்கப்பட்டுள்ள தாகவும் பேசப்படுகிறது.

இ.தொ.காவும் ம.ம.முவும் அரசுடன் இணைந்து கொண்டன என்பதற்காகவே சதாசிவம் தனிப்பட்டியல் போட்டார். அரசாங்கம் கூறியவுடன் அப்பட்டியலை அரசிற்கு கொடுத்து ம.ம. மு, இ.தொ.கா உறுப்பினர்கள் பதவிகளை பெற வழி செய்துள்ளார். இது தான் மலையகத்தலைவர்கள் எனப்படுவோரின் ஏமாற்றுப் பித்தலாட்டங்களாகும்.

இதைப் புரிந்து கொள்ளாமலோ அல்லது புரிந்து கொண்டும் புரிந்து கொள்ளாதைப் போல் சிலதமிழ் ஊடகங்கள் தலவாக்கெல்லையில் தமிழ்த் தேசியம் கொடியேற்றிவிட்டதாக கொக்கரிக்கின்றன. எல்லா ஏமாற்றுக்கள் பம்மாத்துக்கள் மோசடிகளுக்கும் தமிழ்த் தேசியம் நல்ல மூலாம் பூச்சேயாகும்.

# முதலாளித்துவ விரிவாக்கம் பற்றி 158 வருடங்களுக்கு முன்பு கம்யூனிஸ்ட் அறிக்கை



"முதலாளித்துவ வர்க்கத்தின் உற்பத்திப் பொருள்களுக்குத் தொடர்ந்து மேலும் மேலும் விரிவடைந்து செல்லும் சந்தை அவசியமாகும். இந்த அவசியம் முதலாளித்துவ வர்க்கத்தைப் புவிப்பரப்பு முழுதும் செல்லும்படி விரட்டுகிறது. அது எல்லா இடங்களுக்கும் சென்று ஒட்டிக் கொள்ள வேண்டியதாகிறது. எல்லா இடங்களிலும் குடியேற வேண்டியதாகிறது. எல்லா இடங்களிலும் தொடர்புகள் நிறுவிக் கொள்ள வேண்டியதாகிறது.

அனைத்து உலகச் சந்தையைப் பயன்படுத்திச் செயல்படுவதன் மூலம் முதலாளித்துவ வர்க்கம் ஒவ்வொரு நாட்டிலும் உற்பத்தியையும் நுகர்வையும் அனைத்துலகத் தன்மை பெறச் செய்திருக்கிறது. பிற்போக்கர்கள் கடுங் கோபங் கொள்ளும்படி அது தொழில்களது காலுக்கு அடியிலிருந்து அவற்றின் தேசிய அடிநிலத்தை அகற்றியுள்ளது. நெடுங் காலமாய் நாட்டிலே இருந்துள்ள தொழில்கள் யாவும் அழிக்கப்பட்டு விட்டன. அல்லது நாள் தோறும் அழிக்கப்பட்டு வருகின்றன. புதிய தொழில்களால் அவை அப்புறப் படுத்தப்படுகின்றன. இந்தப் புதிய தொழில்களைத் தோன்றச் செய்வது நாகரிக நாடுகள் யாவற்றுக்கும் ஜீவ மரணப் பிரச்சினையாகிவிடுகிறது. முன்பிருந்தவற்றைப் போல் இந்தப் புதிய தொழில்கள் உள்நாட்டு மூலப் பொருள்களை மட்டும் உபயோகிப்பவை அல்ல, தொலைதூரப் பிரதேசங்களிலிருந்து தருவிக்கப்படும் மூலப் பொருள்களை உபயோகிப்பவை. இவற்றின் உற்பத்திப் பொருள்கள் தாய்நாட்டில் மட்டுமன்றி, உலகெங்கும் எடுத்துச் செல்லப்பட்டு எல்லாப் பகுதிகளிலும் நுகரப்படுகிறவை. தாய்நாட்டு உற்பத்திப் பொருள்களால் பூர்த்தி செய்யப்பட்ட பழைய தேவைகளுக்குப் பதில், தொலைதூர நாடுகள், மண்டலங்களது உற்பத்திப் பொருள்களால் பூர்த்தி செய்யப்படும் புதிய தேவைகள் எழுகின்றன. வட்டாரங்கள், நாடுகள் இவற்றின் பழைய ஒதுக்க நிலைக்கும் தன்னிறைவுக்கும் பதில், எல்லாத் திசைகளிலுமான நெருங்கிய தொடர்பும் உலக அளவில் நாடுகளுக்கிடையிலான சார்புடைமையும் ஏற்படுகின்றன. பொருள் உற்பத்தியில் எப்படியோ அப்படியேதான் அறிவுத் துறை உற்பத்தியிலும். தனித் தனி நாடுகளுடைய அறிவுத் துறைப் படைப்புகள் எல்லா நாடுகளுக்குமான பொதுச் சொத்தாகின்றன. தேசிய ஒருதலைப்பட்ச பார்வையும் குறுகிய மனப்பாங்கும் மேலும் மேலும் இயலாதனவாகின்றன. நாட்டளவிலும் மண்டல அளவிலுமான எத்தனையோ பல இலக்கியங்களிலிருந்து ஓர் அனைத்துலக இலக்கியம் உருவாகின்றது.

உற்பத்திக் கருவிகள் அனைத்தின் அதிவேக அபிவிருத்தியின் மூலமும், போக்குவரத்துச் சாதனங்களின் பிரமாதமான மேம்பாட்டின் மூலமும் முதலாளித்துவ வர்க்கம் எல்லாத் தேசங்களையும், மிகவும் அநாகரிகக் கட்டத்தில் இருக்கும் தேசங்களையும் கூட, நாகரிக வட்டத்துக்குள் இழுக்கிறது. தன்னுடைய பண்டங்களின் மலிவான விலைகளை அது சக்தி வாய்ந்த பீரங்கிளாய்க் கொண்டு, சீன மதிலை ஒத்த எல்லாத் தடைமதில்களையும் தகர்த்திடுகிறது, அநாகரிகக் கட்டத்தில் இருப்போருக்கு அந்நியர்பால் உள்ள முரட்டுப் பிடிவாத வெறுப்பைப் பணிய வைக்கிறது. ஏற்காவிடில் அழியவே நேருமென்ற நிர்ப்பந்தத்தின் மூலம் அது எல்லாத் தேசங்களையும் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையை ஏற்கச் செய்கிறது, நாகரிகம் என்பதாய்த் தான் கூறிக் கொள்வதைத் தழுவும்படி, அதாவது முதலாளித்துவமயமாகும்படி எல்லாத் தேசங்களையும் பலவந்தம் செய்கிறது. சுருங்கக் கூறுமிடத்து, அப்படியே தன்னை உரித்து வைத்தாற் போன்றதோர் உலகைப் படைத்திடுகிறது அது.

முதலாளித்துவ வர்க்கம் நாட்டுப்புறத்தை நகரங்களது ஆட்சிக்குக் கீழ்ப்படச் செய்துள்ளது, மாபெரும் நகரங்களை அது உதித்தெழ வைத்திருக்கிறது, கிராம மக்கள் தொகையுடன் ஒப்பிடுகையில் நகர மக்கள் தொகையை வெகுவாய் அதிகரிக்கச் செய்திருக்கிறது. அவ்விதம் மக்களில் ஒரு கணிசப் பகுதியோரை கிராம வாழ்க்கையின் மடமையிலிருந்து மீட்டிருக்கிறது. எப்படி அது நாட்டுப்புறத்தை நகரங்களைச் சார்ந்திருக்கச் செய்துள்ளதோ, அதே போல அநாகரிக நிலையும் குறை நாகரிக நிலையிலுமுள்ள நாடுகளை நாகரிக நாடுகளையும், விவசாயிகளது நாடுகளை முதலாளிகளது நாடுகளையும், கிழக்கு நாடுகளை மேற்கு நாடுகளையும் சார்ந்திருத்தச் செய்துள்ளது." (கார்ல்மாக்ஸ் ஏங்கல்ஸ் பெயரில் 1848ல் வெளியிடப்பட்ட கம்யூனிஸ்ட் அறிக்கையில் இருந்து எடுக்கப்பட்ட பகுதியாகும்)

## பேச்சுக்கள்........

7ம் பக்கம் தொடர்ச்சி.......

கட்சிகள் எதுவும் அதற்கான பணிகளைச் செய்வதாகத் தெரியவில்லை. நாம் இப்போது காணுவது என்ன வென்றால் அமைதிப் பேச்சு வார்த்தைகளை ஒரு சில்லரை அரசியல் விளையாட்டாக்கி அதன் மூலம் நாட்டு மக்களையும் நாட்டின் மீது ஆதிக்கஞ் செலுத்துகிற நோக்கில் "உதவிக் கரம்" நீட்டுகிற ஏகாதிபத்திய நாடுகளையும் ஏமாற்றுகிற காரியங்களே. முடிவில் ஏமாறப் போவது யார் என்பது தெரியவர நீண்ட காலம் எடுக்காது.

துணைப்படைகளை ஊட்டி வளர்த்தது அரசாங்கம். இதில் கட்சி வேறுபாடு கிடையாது. முஸ்லீம் துணைப்படைகள் இல்லையென்று ஹக்கீம் சொல்லுவதால் விடுதலைப் புலிகட்கு எதிராக முஸலீம்கள் அணிதிரட்டப்படவில்லை என்றாகிவிட முடியாது. விடுதலைப் புலிகட்கு எதிராகத் துணைப்படைகளை உருவாக்குவதும் அவற்றை வளர்ப்பதும் அரசாங்கங்களின் மூலோபாயங்களுள் ஒன்று. அந்தப் பணியில் அமெரிக்காவும் அதை விட முக்கியமான இந்தியாவும் உதவியாயுள்ளன. எனவே அரசாங்கம் ஜெனீவாவில் எந்த விதமான உடன்பாட்டுக்கு வந்தாலும் ஆயுதக் குழுக்களையோ துணைப் படைகளையோ கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கத்திற்குத் தயக்கம் இருக்கும். அயற் குறுக்கீட்டாளர்கள் நிச்சயமாக ஆயுதக்குழுக்களை ஊக்குவிப்பர். இவற்றையெல்லாம் விடமுக்கியமாக அரசாங்கத்தால் தனது படைகளை எவ்வளவு தூரம் கட்டுப்படுத்த முயலும் என்ற கேள்வி மிக முக்கியமானதாகும்.

அமைதிப் பேச்சுவார்த்தைகளின் அடுத்த சுற்று நடக்குமோ என்கிற சந்தேகம் எழுகிற விதமாக வடக்கு-கிழக்கில் உள்ள நிலவரங்கள் தொடர்ந்தும் சீர்குலைந்து வருகின்றன. அதையும் மீறி அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடந்தாலும் ஆளை ஆள் குற்றஞ்சாட்டுவதை விட எதுவும் உருப்படியாக நடக்கும் என்ற நம்பிக்கைக்கு இடமில்லை. எனவே அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தை கட்டம் அல்ல கண்டமாகவே அமையப் போகிறது என்றே கொள்ள வேண்டியுள்ளது.

அமெரிக்கா இலங்கை மீது தனது மேலாதிக்கத்தை நிலைநிறுத்த வேண்டித் தான் விரும்புகிற விதமான ஒரு தீர்வைத் திணிக்க அவசரப்படுகிறது. அந்த நெருக்குவாரங் காரணமாக இருதரப்பினரும் அமைதியைக் குலைப்பதற்குத் தாங்கள் பொறுப்பல்ல என்ற கருத்தை உருவாக்கி உறுதிப்படுத்துவதில் முனைப்பாக உள்ளனர். ஆனால் நியாயமான ஒரு தீர்வை எட்டுவதற்கு ஏற்ற சூழ்நிலை இன்னும் உருவாகவில்லை. அதற்கான மனப்பக்குவம் இருந்திருக்குமானால் சுனாமியால் அல்லற்பட்டு இன்னமும் அவதியுறுகிறவர்களுக்காக எவ்வளவோ செய்யப்பட்டிருக்கும். இடம் பெயர்ந்த மக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும். போரால் பாதிக்கப்பட்ட மக்களின் அவல நிலையைப் பற்றிய அக்கறை இல்லாமல் அமைதி பற்றிப் பேசுவது பம்மாத்தானது. முதலில் மக்கள் நிம்மதியாக வாழக் கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்குவது பற்றி அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் சிந்திக்க வேண்டும். அதைச் செய்ய ஜெனீவாவுக்குப் போகவேண்டியதில்லை. அதைச் செய்ய முடியுமாயின் மற்ற விடயங்களைச் சாதிக்கும் வாய்ப்புக்கள் இந்த மண்ணிலேயே இயலுமாகும்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# ஈரான் அணுசக்தியும் அமெரிக்கச் சக்தியும்

ஈரானின் மீதான அமெரிக்க ஆதிக்கத்திற்கு ஐம்பது வருடத்திற்கு முன்னமே அத்திவாரமிடப்பட்டது. ஈரானின் ஆட்சித் தலைவர் மொஸாடெக் படுகொலையின் பின்பு அமெரிக்க- பிரித்தானிய முயற்சி மூலம் ஈரானில் முடியாட்சியொன்று நிறுவப்பட்டது. அதைப் போன்ற பயங்கரமான சர்வதிகாரக் கொடுங்கோன்மை ஆசியாவில் வேறெதுவும் இல்லை எனுமளவுக்கு அந்த ஆட்சி சகல எதிர்ப்பாளர்களையும் கடுங் கண்காணிப்பு, ஆட்கடத்தல், சித்திரவதை, கொலை என்பன மூலம் கட்டுப்படுத்தியது. அந்த ஆட்சி கொமெய்னி தலைமையிலான இஸ்லாமியப் புரட்சியால் 1978ல் தூக்கி எறியப்படும் வரை ஈரான் அமெரிக்காவின் நெருங்கிய கூட்டாளியாகவே இருந்தது.

ஈரானின் இஸ்லாமிய மதவாத ஆட்சியின் தவறுகள் காரணமாக கணிசமானளவில் மக்கள் அதை வெறுத்தாலும் அந்த ஆட்சியை கவிழ்க்க ஈராக்- ஈரான் போரின் போது சதாமுக்கு ஆதரவு உட்பட அமெரிக்கா எடுத்து வந்த நடவடிக்கைகள் முடிவில் இஸ்லாமிய மதவாதிகளின் கையையே வலுப்படுத்தின. ஈரானின் பொருளாதாரம் அமெரிக்காவின் நெருக்குவாரங்களால் ஒரு புறமும் ஈரானிய ஆட்சியின் பழைமைவாதப் போக்கால் இன்னொரு புறமும் பல சிக்கல்களை எதிர்நோக்கினாலும் ஈரான் ஆசியாவின் வலுவான ஒரு நாடாக வளர்ந்துள்ளது. மத்திய கிழக்கில் அமெரிக்க ஆதிக்கத்திற்குத் தடையாகவும் சீனாவைச் சுற்றி வளைத்துத் தனிமைப் படுத்தும் முயற்சிக்குத் தடையாகவும் உள்ள முக்கியமான ஒரு நாடு ஈரான். ஈரானில் ஒரு அமெரிக்கச் சார்பு ஆட்சியை நிறுவும் முயற்சி தோல்வி கண்ட பின்பே ஈரான் பற்றிய கடும் போக்கை அமெரிக்கா மேற்கொண்டது. ஈரானுக்கு எதிரான கடும் போக்கு புதிய முஸ்லீம் மதவாதச் சனாதிபதி அஃமெடி நெஜாடின் தெரிவின் பின்பு தீவிரமாகியுள்ளது.

ஈரான் தனது அணுசக்தியை விருத்தி செய்யவும் அணு உலைகளில் பயன்பட்ட யூரேனியத்தைச் செறிவுபடுத்தி மீண்டும் பயன்படுத்த ஆய்வுகளை நடத்தவும் கூடாது என அமெரிக்கா கடும் எதிர்ப்பைத் தெரிவித்தது. இந்த எதிர்ப்புக்கு இஸ்ரேலும் ஒரு முக்கியமான தூண்டு சக்தியாக இருந்தது. அமெரிக்க நெருக்குவாரத்தின் அடிப்படையில், சர்வதேச அணு சக்தி அதிகாரசபையில் அணுசக்தி தொடர்பான ஈரானின் செயற்பாடுகள் பற்றிய கண்டனத்தீர்மானம் ஒன்று சென்ற நவெம்பர் மாதம் நிவைவேற்றப்பட்டது. இந்தியாவும் அமெரிக்காவுடனான. தனது புதிய நெருக்கத்தின் விளைவாக அதை ஆதரித்தது. வெனசுவேலா, கியூபா, சிரியா என்பன அதை எதிர்த்து வாக்களித்தன. ரஷ்சாய, சீனா உட்பட்ட சில நாடுகள் வாக்களிக்கவில்லை.

ஈரான் அணு ஆயுதத் தயாரிப்புக்கு ஆயத்தப்படுத்துகிறது என்பதே அமெரிக்காவினதும் இஸ்ரேலினதும் குற்றச் சாட்டாகும். ஈரானை ஐ.நா. பாதுகாப்புச் சபை மூலம் விசாரணைக்குட்படுத்தி அதன் அணுசக்தித் திடடங்கட்கு முற்றுப்புள்ளி வைப்பது அல்லது ஈரானை பலவாறான வணிகத்



தடைகட்குட்படுத்திப் பலவீனப்படுத்துவது தான் அமெரிக்க- இஸ்ரேலிய நோக்கமாகும். தமது பொருளாதார நலன்கட்காக ஈரானுடன் வணிக உறவைப் பேண வேண்டிய நிலையிலுள்ள ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ஒருபுறம் அமெரிக்காவுடன் சேர்ந்து ஈரான் மீது நெருக்குவாரங்களைப் பிரயோகிக்கின்றன. மறுபுறம் ஈரானுடன் சமரசத்துக்கான வழிகளைத் தேடுகின்றன. ஈரானின் அணு சக்தி விருத்திக்கு உதவிசெய்து வந்த ரஷ்யாவும் சமரச முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. சீனா இப்பிரச்சனை பாதுகாப்புச் சபைக்குப் போவதை விரும்பவில்லை.

இந்தியாவில் ஆளுங்கட்சிக்குள்ளிருந்தும் நாட்டின் முற்போக்கு, இடதுசாரி வட்டாரங்களிலிருந்தும் எழுந்துள்ள கடும் எதிர்ப்பின் காரணமாக, இந்திய நிலைப்பாடு இம்முறை ஈரானுக்கு எதிரானதாக அமையாது என்ற எதிர்பார்ப்பு உருவாகியுள்ளது.

எவ்வாறாயினும், ஈரான் அமெரிக்க- இஸ்ரேலிய நெருக்குவாரங்கட்குப் பணியப் போவதில்லை என்பதில் உறுதியாகவுள்ளது. ஏனெனில் ஈரான் அமெரிக்காவுக்கு பணிந்து போனால் அமெரிக்கா அதை மேலும் அடக்கியாளவே முற்படும் என்பது உறுதி. இப்போது ஈரானுடனான போரொன்றுக்கு அமெரிக்கா ஆயத்தமாக உள்ளதா இல்லையா என்பது நிச்சயமற்றது. எனினும் ஈரானைத் தனிமைப்படுத்துகிற முயற்சிகளில் அமெரிக்கா தீவிரமாகியுள்ளது. இலங்கைக்கும் ஈரானுக்குமிடையில் அண்மையில் ஏற்பட்ட வணிக உடன்பாட்டை அடுத்து இலங்கையின் தேசிய இனப்பிரச்சனையில் அமெரிக்கக் குறுக்கீடு வலுப்பட்டுள்ளதையும் அமெரிக்கத் தூதர் விடுதலைப் புலிகட்கெதிராக விடுத்த கடுமையான கண்டன அறிக்கையையும் நோக்க வேண்டியுள்ளது.

ஈரானின் அணுசக்தி விருத்தி முயற்சிகளைத் தடுக்க எந்த உலக நாட்டுக்கும் உரிமையில்லை. ஈரான் அணு ஆயுத உற்பத்தித் திட்டமிடுகிறது என்று குற்றச்சாட்டுகிற இஸ்ரேல் இன்று நானூறு அணு குண்டுகளைத் தன்வசம் வைத்திருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அது பற்றி எதுவுமே செய்யாத அமெரிக்காவுக்கு ஈரானைக் கண்டிக்க என்ன உரிமை உள்ளது. அணு ஆயுதக் கட்டுப்பாடு பற்றிய உலகளாவிய உடன்பாடு ஏற்படு முன்பு அமெரிக்கா, சோவியத் ஒன்றியம், பிரிட்டன், சீனா, பிரான்ஸ் ஆகிய நாடுகளிடம் அணு ஆயுதங்கள் இருந்தன. இந்தியாவும் பாக்கிஸ்தானும் இரகசியமாகவே அணு ஆயுத உற்பத்தியில் இறங்கின. அமெரிக்காவின் மிரட்டலின் பின்னணியிலேயே வட கொரியா தற்காப்பிற்காக அணு ஆயுதத் தயாரிப்பில் இறங்கியது. வெள்ளை நிற வெறி ஆட்சியின் கீழ் தென்னாபிரிக்கா அணு ஆயுத உற்பத்திக்குத் திட்டமிட்டிருந்தது. அமெரிக்கா ஏன் இன்று ஈரானை இலக்கு வைக்கிறது? முதலில் இஸ்ரேலின் அணு ஆயுதங்களைக் களையாமல் மத்திய கிழக்கில் எந்த நாட்டின் மீதும் ஆயுதக் கட்டுப்பாடு பற்றிப் பேசுவது யோக்கியமில்லை.

அணு ஆயுதக் குற்றச்சாட்டு ஈரானைத் தனிமைப்படுத்தித் தாக்கி அழிப்பதற்கான நீண்டகால அமெரிக்கத் திட்டத்தின் ஒரு பகுதியே ஆகும். ஈரானிய ஆட்சி பற்றிய எந்த விதமான கருத்துக்களும் கண்டனங்களும் நமக்கு இருந்தாலும், அமெரிக்கா ஈரானுக்கு எதிராக மேற்கொள்ளுகிற சூழ்ச்சிகட்கு எதிராக உறுதியான நிலைப்பாட்டை எடுக்கும் பொறுப்பு தன் சுதந்திரத்தை மதிக்கும் ஒவ்வொரு மூன்றாமுலக நாட்டுக்கும் மக்களுக்கும் உண்டு. உலக அமைதியைப் பேண விரும்புகிற அனைவரும் முதலில் அமெரிக்காவையும். அதன் எடுபிடிகளையும் தமது ஆயுதங்களைக் குறைத்து ஆக்கிரமிப்பை நிறுத்துமாறு வற்புறுத்த வேண்டும்.

# உலக அரங்கின் நாட்குறிப்பு




### மனிதாபிமான ஆக்கிரமிப்புகள்

அமெரிக்காவின் எண்ணெய்க்கான அடுத்த பலி சூடான் போல தெரிகிறது. அங்கு நடைபெறும் "குறிப்பாக டவ்பார் (darfur)" கொலைகளுக்கு தீர்வாக ஐ.நா வின் உதவியுடன் மனிதாபிமான அடிப்படையில் அமைதி காக்கும் படைகளை அனுப்ப அமெரிக்கா தயாராகி வருகிறது. ஐ.நா வின் அமெரிக்க பிரதிநிதி ஜோன் போல்ட்டன் "சூடானின் நிலை கவலையளிக்கிறது, மனிதாபிமான உதவிகளை விரைவாக மேற்கொண்டாலே மக்களை காப்பாற்ற முடியும்" என்கிறார். ஆனால் தங்களது கட்டுப்பாட்டில் உள்ள ஆப்கானிஸ்தான் மக்களையோ ஈராக்கிய மக்களையோ இவர்களால் காப்பாற்ற முடியவில்லையே! ஏன்?

### மாயமாய் மறைந்த அறிக்கை

அண்மையில் அமெரிக்கா தனது வருடாந்த மனித உரிமைகள் அறிக்கையை வெளியிட்டது. அதில் சீனாவின் மனித உரிமை மீறல்கள் குறித்தே அதிகம் பேசப்பட்டிருந்தது. மேலைத்தேய ஊடகங்கள் இதை இன்னும் பெருப்பித்தன. சீனாவோ உடனடியாக பதிலளிக்கவில்லை. இதையும் வாய்ப்பாக்கி பல செய்தித் தொகுப்புகளை வெளியிட்டன அமெரிக்க ஊடகங்கள். ஒரு நாள் கழித்து சீனா ஒரு மனித உரிமைகள் அறிக்கையை வெளியிட்டது. அதில் அமெரிக்காவில் அரங்கேறும் மனித உரிமை மீறல்கள் பற்றி புள்ளிவிபரங்களுடன் குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பின்னர் அமெரிக்கா வெளியிட்ட அறிக்கை பற்றிய செய்திகளோ செய்தித் தொகுப்புகளோ ஒலிப்பரப்பப்படவே இல்லை.

### அதே பாதையில் மீண்டும்

ஈராக் முற்றுகைக்கு முன்னதாக அமெரிக்கா சதாமின் எதிரிகளை விலை கொடுத்து வாங்கியது. பாலைவனத்தில் அமெரிக்க டாலர்கள் அடுக்கிய திறந்த லொறியில் டாலர்கள் மேல் உறங்கும் அமெரிக்க படை வீரனின் புகைப்படம் மிகப் பிரபலம். அதே வழியில் கொண்டலிச ரைஸ் அமெரிக்க காங்கிரசிடம் ஈரானில் 'ஜனநாயகத்தை நிலைநாட்ட' 75 பில்லியன் அமெரிக்க டாலர்களை கேட்டுள்ளார். சென்ற முறைபோல விலை பேசும் படலம் தொடங்கியுள்ளது. எதிர்க்கட்சிகளான மக்கள் முஜாஹிதீன் (PMOI) ஈரானிய தேசியக் கவுன்சில் (NCRI) ஆகியன அமெரிக்காவுடன் ஒத்து வருவதாய் இல்லை. இப்போதைக்கு விலை போக தயாராகவிருப்பவர் பழைய அரசரான ஷாவின் (அமெரிக்க ஆதரவாளர்) மகனான ரெஷா பகல்லவி மட்டுமே, ஈரான், ஈராக் அல்ல.

### மரணமா படுகொலையா

யுத்தக் குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டிருந்த முன்னை நாள் யுகொஸ்லாவிய ஜனாதிபதி ஸ்லொபொடான் மிலோசவிச் இறந்த செய்தி ஊடகங்களில் முதலில் அறிவிக்கப்பட்டது. நேரம் செல்ல மிலோசவிச்சின் வழக்கறிஞர் மிலோசவிச் நஞ்சூட்டப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார். அதைத் தொடர்ந்து சில ஊடகங்கள் மிலோசவிச் சிறையில் இறந்து கிடந்ததாக செய்தி வெளியிட்டன. உயர் இரத்த அழுத்தத்தினாலேயே இவர் இறந்ததாக சொல்கிறது ஐ.நா. ஆனால் அவருக்கு வழங்கப்பட வேண்டி பரிந்துரைக்கப்பட்ட மருத்துவ உதவிகள் நீதிமன்றால் மறுக்கப்பட்டன என்பதையும் இவ்விடத்தில் சொல்ல வேண்டும். இதுவரை அவர் மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் எதுவும் நிரூபிக்கப்படவில்லை என்பதும் முக்கியமானது. மிலோசவிச் குற்றம் புரியவில்லை என்று யாரும் வாதிடத் தேவை இல்லை. ஆனால் அவரை நிறுத்திய நீதிமன்றத்தில் அமெரிக்க ஜனாதிபதியையோ, பிரிட்டிஷ் பிரதமரையோ நிறுத்துவார்களா?

### மகாத்மா புஷ்

இந்திய விஜயத்தின் போது 21ம் நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளை வன்முறையில் தோய்த்த, தலைவன், 20ம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியை அகிம்சையினால் நிரப்பிய தலைவனுக்கு மலர் வளையம் வைத்தான். இப்படம் அனேகமாக பத்திரிகைகளின் முன்பக்கத்தைப் பிடித்தாலும் பயங்கரவாதி அகிம்சாவாதியாக முடியுமா, வேடம் மட்டுமே போடலாம். இவ்விடத்தில் பேர்சியன் ஜெனரல் கார்ல் வொன் குளோஸ்விட்டஸ்டின் வரிகள் ஞாபகம் வருகின்றன. "வெற்றியாளர்கள் எப்போதும் சமாதானத்தின் காதலர்கள்" (A conqueror is always a lover of peace)

### இந்த மூன்று ஆண்டுகள்

மார்ச் 20ம் திகதியுடன் ஈராக் மீதான முற்றுகை அமெரிக்காவால் தொடக்கப்பட்டு 3 ஆண்டுகள் முடிவடைந்து விட்டன. இழப்புகளோ எண்ணிலடங்கா. இதற்கிடையில் ஈராக்கில் உள்நாட்டு யுத்தம் ஏற்பட்டால் ஈராக்கிய பாதுகாப்பு படைகள் அதை பார்த்துக் கொள்ளும் என்று ரம்ஸ்பீல்ட் காங்கிரசுக்கு பதிலளித்தார். உண்மை என்னவெனில் ஈராக்கிய பாதுகாப்பு படைகள் என்ற ஒன்றே கிடையாது. ஷியா பிரிவினர் தனியாகவும் சுன்னி பிரிவினர் தனியாகவும் குர்திஸ்ஸியர் தனியாகவுமே பாதுகாப்பு படைகளை வைத்துள்ளனர். உள்நாட்டு யுத்தம் ஏற்பட்டால்...
அந்தரத்தில் அம்போவென விட்டுவிட்டு ஓடுவதுதானே அமெரிக்க ஸ்டைல்.

### நாலு எழுத்துச் சொல்

இஸ்ரேலில் தேர்தல்கள் நெருங்குகின்றன. எல்லோரும் அந்த நாலெழுத்துச் சொல்லை மறந்தே போய்விட்டார்கள். தேர்தல் வாக்குறுதி எதுவும் அது குறித்து இல்லை. விரக்தியில் ஒரு செயற்பாட்டாளர் சொன்னார் "டுத்பேஸ்ட் விற்பது போல அரசியல்வாதிகளும் ஊடகங்களில் விற்பனையாகின்றனர். ஒரே ஒரு வித்தியாசம் டுத்பேஸ்ட் பேசாது" எல்லோரும் மறந்தஅந்தச்சொல் 'சமாதானம்' (இது கிப்று மொழியில் நாலு எழுத்துகளை உடைய சொல்)

# பலஸ்தீனியர்களுக்கு உள்ள ஒரே வழி தொடர்ந்து போராடுவது தான் ஹமாஸின் பாதையும் பயணமும்

(சென்றமாதத் தொடர்ச்சி.......)

1. மக்கள் புரட்சி மூலம் மக்களால் தெரியப்பட்ட ஈரானிய பிரதமர் மோசெடெக்கை 1953 இல் சதி மூலம் பதவியிலிருந்து விலக்கி மீண்டும் தன்கைப்பொம்மையான ஷா மன்னரை பதவியில் இருத்தியது அமெரிக்கா.
2. மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதமரை பதவியகற்றி எல்லா கட்சிகளையும் தடைசெய்ய ஜோர்டானிய மன்னரை வலியுறுத்தி அதில் வெற்றியும் கண்டது 1957 இல்.
3.இஸ்லாமிய மக்களவை உருவாகும் என்ற நிலையில் 1992 இல் அல்ஜீரியாவில் தேர்தல்களை ரத்து செய்து அவை ஜனநாயகமற்றவை என்று பொம்மை அரசு உருவாக்கப்பட்டது.
4. தங்களுக்கு உதவியளித்த பாஸ்க் கட்சியை பதவியில் அமர்த்தி ஈராக்கில் அழகு பார்த்தது.
5.லெபனான் தேர்தலில் 25 ஆசனங்களை (மொத்தம் 128) வென்ற ஹிஸ்புல்லா அமைப்பை பயங்கரவாத இயக்கம் என காரணம் காட்டி தேர்தல்களை செல்லுபடியற்றதாக்கியது.

பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் என்ற முகமூடியுடன் வலம்வரும் அமெரிக்காவின் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன? இதற்கிடையில் பிரதமர் சில்வியோ பலங்கோனி "மிக மிகக் கேவலமானதும் பிழையானதுமான தேர்தல் முடிவு" பிரான்சிய பிரதமர் டொமிக்கோ டி வில்லப்பன் "இந்த பலஸ்தீன அரசாங்கத்துடன் எவ்விதத்திலும் செயற்படமுடியாது" என்றார்கள். டென்மார்க் பிரதமர் அன்டேஸ் போர்க் ஏஸ்முசஸ் மட்டும் "தேர்தல் முடிவை நாம் மதிக்கப் பழகிக் கொள்ளவேண்டும். அது நமக்கு விருப்பமில்லாத முடிவாக இருந்தாலும் மக்களின் உணர்வை மதிக்க வேண்டும்" என்றார்.

புஷ் தனது பத்திரிகையாளர் சந்திப்பின் முடிவில் ஒரு விடயத்தை பின்வருமாறு சூசகமாகக் சொன்னார். "எனக்கு ஜனநாயகத்தில் அதிகாரம் குறித்து நினைவு வருகிறது. அதை ஹமாஸின் வெற்றி எனக்கு ஞாபகப்படுத்தியிருக்கிறது. "மத்திய கிழக்கின் தொடக்கம்" குறித்து நான் சிந்திக்கிறேன்"

ஹமாஸின் வெற்றியைத் தொடர்ந்து அமெரிக்கப் பத்திரிகைகள் அடிக்கடி எழுப்பிவரும் ஒரு விடயம் மிகவும் முக்கியமானது. 1970ம் ஆண்டு தேர்தலில் இடதுசாரியான சால்வடோர் அலெண்டே வெற்றி பெற்றார். இதைத் தொடர்ந்து அப்போதைய அரசின் வெளியுறவுச் செயலாளர் ஹென்றி கிசிஞ்சர் "சிலி மக்கள் பொறுப்பற்றவர்கள் என் பதற்காக ஜனநாயகம் அழிந்து போவதை அமெரிக்கா பார்த்துக் கொண்டு சும்மா இருக்காது" என்றார். சில காலத்தில் அமெரிக்க சதிப்புரட்சியில் அலெண்டே கொல்லப்பட்டு அமெரிக்கப பொம்மையான ஜெனரல் அகஸ்டோ யினோசேயின் தலைமையில் ஆட்சி அமைக்கப்பட்டது.

பலஸ்தீனத்தில் தேர்தல்கள் நடப்பது என்பது மிகவும் கடினமானது. முற்றுமுழுதான ஆக்கிரமிப்புக்கு உட்பட்டுள்ள ஒரு நிலப்பரப்பில் போட்டியிடும் ஒரு கட்சியினரை ஆக்கிரமிப்பாளர்கள் கைது செய்வதும் சில வேட்பாளர்களை கொலைசெய்வதும் முக்கியமான

தொடர்ச்சி 11ம் பக்கம்

www.tamilarangam.net

நன்றி - நூலகத்திட்டம்



# கைலாசபதியின் பரந்த ஆளுமையைச் சிறுமைப்படுத்தும் முயற்சி!

கைலாசபதி, தளமும் வளமும். கட்டுரைத் தொகுப்பு, கைலாசபதி ஆய்வு வட்டம், 29, 42வது ஒழுங்கை, கொழும்பு-6, ப. 164, ரூ. 250. 00

தொகுப்பாசிரியரின் பேர் குறிப்பிடாமல் வந்துள்ள இந்த நூலின் தொகுப்புரையில் மாக்ஸிய ஆய்வு நெறி முறையை வளர்தெடுத்து சமகாலச் சூழலில் புரட்சிகரமான இயக்கத்தையும். மாற்றத்தையும் மேற்கொள்வதை "முதற்பணியாகக் கொண்டு கைலாசபதியின் சிந்தனை ஆய்வு முறையில் ஆர்வமும் ஈடுபாடும் உடைய" பதினாறு பேரின் கட்டுரைகளைத் தொகுத்து வெளியிட்டுள்ளதாகச் சொல்லப்பட்டுள்ளது. நூலில் வந்துள்ள முருகையனின் சிறிய கட்டுரை அவர் எப்போதோ ஆற்றிய ஒரு நினைவுச் சொற்பொழிவு. வேறோரிரண்டும் மறுபிரசுரங்கள் போன்றே தெரிகின்றன.

ஒட்டு மொத்தமாக நோக்கும் போது, பெருவாரியான கட்டுரைகள் கைலாசபதி இறந்து ஒரு வருடத்திற்குள் ஒரு நினைவு மலரில் வந்திருக்கத் தகுந்தவை. ஏனெனில் அவற்றில் கைலாசபதியுடனான தங்களது பரிச்சயத்தையும் கைலாசபதி பற்றிய தங்களது மனப்பதிவுகளையுமே கட்டுரை ஆசிரியர்கள் விவரித்துள்ளனர். பதிப்புரையிற் கூறப்பட்டுள்ள 'முதற்பணி' பற்றிய சிறிய நகர்வாகவேனும் ஒரு கட்டுரையும் அமையவில்லை. அதேவேளை, கைலாசபதி பற்றிய வன்மம் ஒரு கட்டுரையில் தன்னைப் பச்சையாகவே இனங்காட்டியுள்ளது.

இத் தொகுப்பின் பயனுள்ள இரண்டு கட்டுரைகளைக் குறிப்பிட வேண்டும். முதலாவது நுஃமானுடையது. எஸ்.பொன்னுத்துரை முதல் யேசுராசா வரையிலானவர்கள் கைலாசபதி பற்றிப் பரப்பி வந்த அவதூறுகள் பலவற்றுக்கு நுஃமான் ஆப்பு வைத்துள்ளார். சாதி எதிர்ப்பில் கைலாசபதியின் பற்கு பற்றி அவர் தெளிவாக்கியுள்ள சில உண்மைகள் அவதூறுகளின் நோக்கத்தை நமக்கு அடையாளங் காட்டுகின்றன. கைலாசபதியுடன் முரண்படுகிற சில விடயங்களில் விட்டுக் கொடுக்காமலே கைலாசபதி பற்றி வலிந்து குற்றங்காண்போரை அவர் தோலுரித்துக் காட்டியுள்ளார்.


மற்றக் கட்டுரை சித்திரலேகாவுடையது. சித்திரலேகாவின் கட்டுரையில் கைலாசபதியின் அரசியற் செயற்பாடுகளும் அரசியற்சார்பும், குறிப்பாகத் தேசிய கலை இலக்கியப் பேரவையுடனான தொடர்பும், அடையாளங் காட்டப்பட்டுள்ளன. அத்துடன் பெண்ணுரிமை தொடர்பாகக் கைலாசபதியின் அக்கறையும் பங்களிப்பும் அவரது கட்டுரை வாயிலாகத் தெரியப்படுத்தப்பட்டுள்ளன. லெனின் மதிவானத்தின் கட்டுரை மலையக இலக்கிய வளர்ச்சியில் கைலாசபதியின் பங்களிப்பை விவரித்த போதும், அப்பங்களிப்பின் முக்கியமான ஒரு கருவியாக இருந்து இயங்கிவரும் தேசிய கலை இலக்கியப் பேரவை பற்றிய ஒரு குறிப்புத் தானும் இல்லாமை வியப்பளிக்கிறது.

**-சிவா -**

முகம்மது சமீமின் கட்டுரை வேறொரு நூலுக்குரியது போலவே உள்ளது. இது பழந்தமிழ் இலக்கியங்கள் பற்றிக் கைலாசபதியின் முடிவுகளின் தொகுப்பே ஒழிய அதை மேலும் விருத்தி செய்கிற முயற்சி அல்ல. கட்டுரையாளர் அவ்வாறு பாவனை செய்யவும் இல்லை என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும்.

பிற கட்டுரைகளில் நான் தொடர்ந்து குறிப்பிடவுள்ள மூன்று போக, ஏனையவை ஒரு நினைவு மலருக்கு எழுதப்பட்டவை போலவே உள்ளன. எனினும் கைலாசபதியைப் பயன்படுத்தித் தங்களது வஞ்சக நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு இக் கட்டுரையாளர்கள் முனையவில்லை என்பது குறிப்பிடத்தக்கதது.

நீர்வை பொன்னையன் தனது நீண்ட கட்டுரை மூலம் 1960களின் நடுப்பகுதிக்குப் பின்பு செயலிழந்து திரிபுவாதிகளின் கையிலிருந்த ஒரு பேர்ப்பலகைச் சங்கமாகச் சீரழிந்த இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் கைலாசபதி ஒரு முக்கியமான பங்கை ஆற்றினார் என்ற படிமத்தை உருவாக்க மிகுந்த சிரமப்பட்டுள்ளார். கைலாசபதி இ.மு.எ. சங்கதைப் பிளவுபடுத்த விரும்பவில்லை. எனினும் திரிபுவாதிகள் இ.மு.எ.ச நிருவாகத்தை வசமாக்கிய பின் இ.மு.எ.ச வில் அவரது பங்கு மிக அற்பமானது. இ.மு.எ.ச தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கத்தின் போது மிகவும் கேவலமாக நடந்து கொண்டது. பின்பு சிங்களப்பேரினவாத அரசியல்யாப்பு விடயத்தில் மௌனம் சாதித்தது. இப்படிப்பட்ட பின்னணியிலேயே, இ.மு.எ.ச வைப் புறக்கணித்து 'வசந்தம்' சஞ்சிகை போன்றவை வாயிலாகத் தங்களை அடையாளப்படுத்திய படைப்பாளிகள் தேசிய கலை இலக்கியப் பேரவையாக 1974ல் இணைந்தனர். கைலாசபதி தேசிய கலை இலக்கியப் பேரவையின் முக்கிய ஆலோசகராக இருந்தார். அதை விடவும், செம்பதாகை Red Banner ஆகிய இடது கம்யூனிஸ்ற் கட்சி ஏடுகளில் ஒழுங்காக அரசியற் கட்டுரைகளும் எழுதி வந்தார். அக் கட்டுரைகளிற் சில ஏற்கனவே நூல் வடிவம் பெற்றன.



கைலாசபதி : தளமும் வளமும்

சாவிற் கூடக் கைலாசபதியை இ.மு.எ.ச விடம் ஒப்படைக்கத் துடிக்கிற பொன்னையன் கண்ணுக்கு முற்குறிப்பிட்ட எதுவுமே தெரியவில்லை என்றால், கோளாறு அவரது கண்களில் இல்லை மனதில் உள்ளது. அது போக இ.மு.எ.ச அரசாங்கத்திற்கு வால் பிடித்து சுய ஈடேற்றம் பெறும் நோக்கில் நடத்திய தேசிய ஒருமைப்பாட்டு மாநாட்டுக்குப் பொன்னையன் அப்போது உறுப்பினராக இருந்த கட்சி கூட ஆதரவு தெரிவிக்கவில்லை. ஆனாலும் அவர் அதிலே முன்னின்று உழைத்திருக்கிறார். அது அவரது தெரிவு. ஆனால், பேச அழைத்ததன் பேரில் அங்கு போய்ப் பேசிய கைலாசபதியை அதன் சூத்திரதாரிகளில் ஒருவராக்குவதற்கு அவருக்கு உரிமை இல்லை. கைலாசபதி அங்கு பேசப் போனதற்கு மறுக்க இயலாத ஒரு சில சந்தர்ப்ப சூழ்நிலைகள் காரணமாயிருந்தன என்பது என் எண்ணம். ஆனால் கைலாசபதி இ.மு.எ.ச. வின் நாடகத்தில் பங்குபற்ற அங்கே போகவில்லை என்பது உறுதி. அந்த மாநாட்டில் பேசிய சிறிமா பண்டாரநாயக்க முதல் கெனமன், குமாரசூரியர் ஆகிய அமைச்சர்களும் பேரினவாத அரசியலின் அடிவருடிகளும் தமிழரின் குறுகிய இனவாதம் பற்றிப் பேசினார்களே ஒழியப் பௌத்த சிங்கள பேரினவாதம் பற்றி மூச்சே விடவில்லை. இந்தக் கேவலமான கேலிக்கூத்தைக் கண்டித்துத் திருகோணமலையில் நேர்மையான இடதுசாரிகள் ஒரு கலை இலக்கிய மாநாடு நடத்திய கதை பொன்னையன் பேசவிரும்பாத ஒரு விடயமாகும்.

தமிழர்கட்கு பிரச்சனைகள் இருக்கின்றன என்று சிறிமாவோ பண்டாரநாயக்கவைச் சொல்ல வைத்துவிட்டோம் என்று பூரித்துப்போயுள்ளார் மனிதர். பிரச்சனைகட்கு எது காரணம், எவர் காரணம் என்று சொல்ல வைத்திருந்தாரேயானால் நாங்கள் அவரை மெச்சலாம்.

சண்முகலிங்கத்தின் கட்டுரை, கைலாசபதியின் பங்களிப்பை மறுதலிப்பதையும் திரிப்பதையுமே நோக்கமாகக் கொண்டிருப்பதில் வியப்பில்லை. இது போன்ற திருப்பணிகளில் அவர் கடந்த இருபது ஆண்டுகளாகவே செயற்பட்டு வந்துள்ளார். கைலாசபதியின் சொற்களுக்கு வலிந்து பொருள் கொள்ளுகிற அவரது முயற்சியும் உள்ளது. அ.அ. மணவாளன் மூன்று வரியில் இரத்தினச் சுருக்கமாக எழுதியிருப்பதை கைலாசபதியும் முருகையனும் தமது "கவிதை நயம்" என்ற நூலில் 122 பக்கங்கட்கு மேலாக விரிந்துரைத்திருக்கின்றனர் என்ற அவரது கூற்று, அந்த நூலை வைத்துக் கைலாசபதியை எதிர்ப்பவர்களினதை விட மோசமான மனநிலையை வெளிப்படுத்துகிறது. கைலாசபதி நாவல், சிறுகதை, பழந்தமிழ் இலக்கியம் என்பன பற்றிக் கடைப்பிடித்த கறாரான நிலைப்பாட்டை கவிதை தொடர்பாகத் தளர்த்திக் கொண்டார் என்கிற சண்முகலிங்கம், அந்தக் கறாரான நிலைப்பாடு என்ன, அது கவிதை தொடர்பாக எங்கே எப்படித் தளர்கிறது என்பதை விரிவுபடுத்தியிருந்தால் அவரது கட்டுரை பயனுள்ள விவாதத்திற்காவது வழி செய்திருக்கும்.

ஒவ்வொருவரும் செய்யத் தவறுவனவற்றைப் பட்டியலிடுபவரும் பல வேறு விசாரணைகட்கு முன்னுரை எழுதிவிட்டு ஒரு அடி கூட முன்னால் நகராதவருமான மதுசூதனன் கைலாசபதி பற்றித் தனது மதிப்பீட்டை மாற்றிக் கொண்டாரா என்று தெரியவில்லை. அவரது சில கூற்றுக்கள் மிகுந்த ஐயங்களை எழுப்புகின்றன. கைலாசபதியின் மறைவின் பின்னரே தமிழில் மாக்ஸிய விமர்சனச் சூழலில் சுயவிமர்சனப் போக்குக்கள் தோன்றின என்ற அவரது கூற்றின் பொருள் என்ன? "அப்பொழுதான் கைலாசபதியின் "விமர்சனப் புலமை", "ஆய்வுத்திறன்", "ஆளுமை" எத்தகையது என்பது தெளிவாகும்" என்ற அவரது கூற்றில், விமர்சனப் புலமையும், ஆய்வுத் திறனும் ஆளுமையும் மேற்கோள் குறிகட்குள் வர வேண்டிய தேவை என்ன?

மதுசூதனனின் வழமையான குழப்பமான மொழி நடையின் விளைவுகள் என்று இது போன்ற நிந்தனைகளை நியாயப்படுத்த இயலாது. மறுமலர்ச்சி இயக்கம் தொடர்பாக 5 வருடங்கள் முன்னம் சரிநிகரில் எழுதிய ஒரு குறிப்பில் கைலாசபதியை வரலாற்று மோசடிக்காரர் என்று குற்றஞ்சாட்டி, அது கடுமையாக மறுக்கப்பட்டும், இது வரை அதைப் பிழை என்று ஏற்காத ஒருவர், கைலாசபதியைப் பற்றித்

தொடர்ச்சி 8ம் பக்கம்

*பாலஸ்தீனியர்கள்.........*

10ம் பக்கத் தொடர்ச்சி...

தலைவர்களை சிறையிலடைப்பதும் வீதித்தடைகள் போடுவதும் என இருக்கின்ற நிலையில் தேர்தல் நடப்பதோ மக்கள் வாக்களிப்பதோ மிகவும் சிக்கலானதும் பயங்கரமானதுமான ஒரு நிலை. அதையும் தாண்டி கிட்டத்தட்ட 80% மானவர்கள் வாக்களித்திருக்கிறார்கள். இஸ்ரேலிய அரசாங்கத்தின் இவ்வாறான செயற்பாடுகள் ஹமாஸ் இயக்கத்தின் வெற்றிக்கு பங்களித்திருக்கின்றன என்றே சொல்லவேண்டும்.

ஜனநாயகப் பாதையைத் தேர்ந்தெடுத்து ஒஸ்லோ உடன்படிக்கையின்படி செயலாற்ற தொடங்கிய யசீர் அரபாத் உட்பட்ட பழைய தலைமுறையினர் இறுதிவரை ஜனநாயக சமூகத்தில் வாழவில்லை அவர்கள் ஏனைய அராபிய நாடுகளின் கட்டுப்பாடுகளுக்குள் வீட்டுக்காவல்களிலுமே வாழ்ந்து முடிந்திருக்கிறார்கள். பலஸ்தீனர்களைப் பொறுத்தவரை ஜனநாயகம் எப்படி சிறையாக மாறும் என்பதை அவர்களது அனுபவங்களின் ஊடே கண்டிருக்கிறார்கள் புதிய தலைமுறையினர். இப்பொழுது என்ன செய்வது என பொறுப்புடன் சிந்திக்க வேண்டிய தேவை உள்ளது.

பலத்தை பிரயோகிப்பதன் மூலம் தனக்கு வேண்டிய முடிவுகளைப் பெற முடியாது என்பதை இஸ்ரேலுக்கு இத்தேர்தல் முடிவு உணர்த்தியிருக்கிறது. அதேவேளை தீர்வை காண்பதாயின் இஸ்ரேலாக இருப்பினும் சரி ஹமாஸாக இருப்பினும் சரி இதுவரை தாங்கள் கொண்டிருந்த சில அடிப்படைகளையும் காழ்ப்புணர்ச்சிகளையும் தூக்கித் தூர எறிந்து விட்டு வர வேண்டும் என்ற முன்நிபந்தனைக்கான சாத்தியமே இல்லை. எனெனில் இஸ்ரேல் ஆயுதக் களைவுக்கு தயார் இல்லாததால் ஹமாசும் அதற்குதம் தயார் இல்லை. பலஸ்தீனர்களின் ஹமாஸின் கைகளில் ஆயுதங்கள் என்பது ஆக்கிரமிப்புக்கு எதிராக போராடவே உள்ளன. இஸரேலின் ஆக்கிரமிப்பு, இல்லாமல் செய்யப்படவில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்தவிடயம்.

தீர்வுக்கு என்ன வழி

1. பொதுவாக உலகம் (குறிப்பாக இஸ்ரேல்) பாலஸ்தீன மக்களின் ஜனநாயகமான தெரிவை மதித்து ஏற்றுக் கொள்ளவேண்டும்.

2. பேச்சுவார்த்தைக்கு வருவதாயின் ஹமாஸ் 'இஸ்ரேலை அங்கீகரிக்க வேண்டியதுடன் இஸ்ரேலை இல்லாமல் செய்வது" என்ற கோஷத்தை நிறுத்த வேண்டும்.

3.ஹமாஸ் வன்முறைச் செயற்பாடுகளைக் குறைத்து மாற்றத்திற்கான ஒருவழியாக பலம்வாய்ந்த அரசியல் கட்சியாக மாற்றமடைதல் அவசியம்.

4. இரு தரப்பும் வன்முறையைக் குறைத்து இரண்டு தேசங்களும் இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டுடன் இருதரப்பும் குறிப்பாக 1967 பச்சைக் கோட்டின் அடிப்படையிலான எல்லையை மையப்படுத்தி விலக வேண்டும்.

சாத்தியப்பாடு குறித்து பேசுவது பற்றிப்பேசுவது சுலபமானது. ஆனால் நடைமுறையில் முன்னர் சொல்லப்பட்ட நான்கு விடயங்களும் சரிவருமா?

* தேர்தல் முடிவுகள் பிழை எனவும் ஏற்க முடியாதெனவும் இஸ்ரேலும் அமெரிக்காவும் கூறிவிட்டன. வன்முறையை கைவிடவேண்டும் என ஐ.நா கேட்டுள்ளது. ஆக இஸ்ரேல் தேர்தல் முடிவுகளை ஏற்றுக்கொள்வதாக இல்லை. எனவே பேச்சுக்கு சாத்தியமில்லை.

* ஹமாஸ் இஸ்ரேலை அங்கிகரிப்பது குறித்த நிலைப்பாடு மிகவும் ஐயத்துக்குரியது. ஏனெனில் ஹமாஸ் ஒரு இயக்கமாக 1987 இல் உருவெடுத்தது. அது 1988 ஓட்கஸ் 18ம் திகதி வெளியிட்ட கொள்கை விளக்கப்பிரகடனம் மிகவும் முக்கியமானது. 36 பகுதிகளைக் கொண்ட இந்த பிரகடனத்தின் சில பகுதிகள் இதோ.

பகுதி11:- பலஸ்தீனம் இஸ்லாமியர்களின் சொத்து. இதில் வேறு எவருக்கும் பங்கு கிடையாது. ஆகவே ஒரு பகுதியைக்கூட இழக்கவோ விட்டுக்கொடுக்கவோ முடியாது.

பகுதி13:- பலஸ்தீனப் பிரச்சனையைப் பொறுத்தவரை அமைதி முயற்சி, பேச்சுவார்த்தைகள், முன்வைக்கப்படும் தீர்வுகள் எல்லாம் ஹமாஸின் நம்பிக்கைக்கு எதிரானவை.

தூரத்தே தெரியும் ஒளி

18 ஆண்டுகளாக பலஸ்தீன விடுதலைக்காக போராடிவருகின்ற ஹமாஸ் 2005ம் ஆண்டுவரை தேர்தல்களை ஒரு பொருட்டாகவே எடுத்துக்கொள்ளவில்லை. எல்லாத் தேர்தல்களையும் புறக்கணிப்பதுவும் அதை எதிர்ப்பதுமாகவே இருந்து வந்திருக்கின்றது. ஆனால் 2005ம் ஆண்டிலிருந்துதான் ஹமாஸ் தேர்தல்கள் குறித்து கவனமெடுககத் தொடங்கியிருக்கிறது. ஆனால் தொடக்ககாலம் தொட்டே அது தனியே அரசியல் பிரிவு என்ற ஒன்றை வைத்திருந்தது. உள்ளுர் அரசியல், சர்வதேச அரசியல் தொடர்பில் ஹமாஸின் நிலைப்பாடுகள் அதனால் தான் எடுக்கப்பட்டன.

இதற்கு பொறுப்பாக இருந்தவர் அப்துல் அஜிஸ் அல் றன்பூசி. ஆனால் அவர்கள் தேர்தல்கள் பயனளிக்காது என்ற நிலைப்பாட்டிலேயே இருந்து வந்தனர். ஆனால் சில நிகழ்வுகள் ஹமாஸின் நிலைப்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கலாமோ என எண்ணத் தோன்றுகிறது. 2004 மார்ச் 22ம் திகதி ஹமாஸ் இயக்கத்தின் தாபகர் ஷேக் அகமது யாசின் இஸ்ரேலிய ரொக்கெட் தாக்குதலில் கொல்லப்பட்டார். அவரை தொடர்ந்து ஏண்டிசி ஹமாஸின் தலைவரானார். அவரும் 2004 ஏப்ரல் 17ம் திகதி கொல்லப்பட்டார்.

இதேபோல பல தலைவர்கள் இஸ்ரேலியர்களால் தொடர்ந்து கொல்லப்பட்டனர். இதனால் தொடக்கால உறுப்பினர்கள் பலர் இப்பொழுது உயிருடன் இல்லை. எனவே புதிய இளைய தலைமுறைக் ஹமாஸ் இயக்கத்தினர் புதிய பாதையை தேர்ந்தே தேர்தலில் போட்டியிட்டிருக்கலாம். எனவும் எண்ணிப்பார்க்க முடியும்.

நிறைவாக,

"பலஸ்தீன பிரச்சனையை தீர்ப்பதற்கு ஜிகாத் ஒன்றைத்தவிர வேறு எந்த வழியும் இல்லை. மற்ற அமைதித் தீர்வுகள், சர்வதேச பேச்சுவார்த்தைகள் எல்லாமே நேரத்தை வீணடிக்கும் முயற்சிதான், பலஸ்தீனியர்களின் எதிர்காலம் அவர்களுடைய உரிமைகள் எல்லாவற்றையும் இது போன்ற பயனற்ற விளையாட்டுக்கள் தீர்மானிக்க முடியாது"

(ஹமாஸின் கொள்கைப் பிரகடனம் பகுதி : 13)

இதனால் பரூச் ஸ்பிணேசா சொன்னது போல "பயமென்ற ஒன்று இல்லாமல் நம்பிக்கை என்ற ஒன்றில்லை" என்பதுதான் பொருத்தப்பாடானது.

"எல்லாம் ஒரு புறம் நடக்க
தனது மண்ணைக் குறிவைக்கும்
ஆயுதமேந்திய அயலவன் மீது
கல்லெறிகிறான் ஒரு பலஸ்தீனச் சிறுவன்.
விடுதலை கூப்பிடு தொலைவில்,
கல்லெறி தொலைவில்
என்கிறேன் நான் ".

என்ற சி. சிவசேகரத்தின் கவிதை அடிகளுடன் நிறைவு செய்கிறேன்.

-ஏகலைவா-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
පුදිය පූමී
# புதிய பூமி
Puthiya Poomi
சுற்று13 சித்திரை 2006 பக்கம்12 விலை 15/- சுழற்சி 90

## கொலை காரக் கோக்கா கோலா

கோக் நிறுவனம் அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக இந்தியாவில் தான் அதிகபட்சமாக முதலீடு செய்திருக்கிறது. இன்று இந்தியாவில் கோக் ஆலைகளின் எண்ணிக்கை 58,பெப்சி ஆலைகளின் எண் ணிக்கை 39, இந்நிறுவனங்கள் ஆண்டுதோறும் இந்தியாவிலிருந்து உறிஞ்சும் நிலத்தடி நீரின் அளவு சுமார் 5310 கோடி லீட்டர் ஆகும்.




# ஜே. வி. பி. யின் முகத்தில் கரி பூசப்பட்டது ஒரே ஒரு சபை மட்டுமே கிடைத்தது

உள்ளூராட்சி சபை தேர்தலில் ஐ.ம.சு.முன்னணியில் கூட்டாக போட்டியிடுவதாக இருந்தால் 50 உள்ளூராட்சி சபைகளின் ஆட்சியை தமக்கு கொடுக்க வேண்டுமென ஜே.வி.பியினர் கேட்டனர். அதனை மறுத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச 28 சபைகளின் ஆட்சியைத் தருவதாகக் கூறினார். அதனை ஏற்றுக் கொள்ளாது. ஜே.வி.பி தனியாக போட்டியிட்டது. தேர்தல் முடிவுகளின் படி ஏற்கனவே ஜே.வி.பி வசமிருந்த திஸ்ஸமஹறகம பிரதேச சபையின் ஆட்சியை மட்டுமே மீண்டும் அது பெற்றுக்கொண்டது.

உள்ளூராட்சி சபைகளின் ஆட்சி பற்றிய பேரப்பேச்சில் இணக்கம் ஏற்படாததாலேயே ஜே.வி.பி தனியாகப் போட்டியிட்டது. ஆனால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச ஜே.வி.பியுடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மாறாக நடப்பதனாலும் அதை எதிர்த்து சமாதான நடவடிக்கைகளிலிருந்து நோர்வேயை நீக்க வேண்டுமென்று கோரியும் தனியாக போட்டியிடுவதாக ஜே.வி.பி தலைவர்கள் கூறினர். ஜே.வி.பி அதனுடைய அடையாளத்தை நிலைநிறுத்திக் கொள்ளவே தனியாகப் போட்டியிடுவதாக அதன் செயலாளர் ரில்வின் சில்வா கூறினார்.

தேர்தல் முடிவுகள் ஜே.வி.பி தலைவர்கள் எதிர்பார்த்தது போன்று அமையவில்லை. அவர்களுக்கு வெற்றி கிடைக்கவில்லை. பல உள்ளூராட்சி சபைகளின் ஆட்சியை கைப்பற்ற முடியுமென்றே அவர்கள் நம்பியிருந்தனர். அது கைகூடவில்லை. கை கூடியிருந்தால் அவர்களது ஆட்டம் உச்சத்தை அடைந்திருக்கும்.

2002 ஆம் ஆண்டு உள்ளூராட்சிச் சபை தேர்தலில் ஜே.வி.பி 219 ஆசனங்களை பெற்றிருந்தது. தற்போது 365 ஆசனங்களை பெற்றிருப்பது வெற்றியே என்று ரில்சின் சில்வா கூறியுள்ளார். முன்பு 9 சதவீதமாக இருந்த ஜே.வி.பி யின் வாக்கு வங்கி 12 சதவீதமாக அதிகரித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். இலக்கங்களில் சத வீதத்தில் கணக்குக்காட்டுவது பாராளுமன்றப் பம்மாத்துக்களில் ஒன்றாகும்.

இந்த தேர்தல் முடிவுகளால் ஜே.வி.பி கூடுதல் வாக்குகளை பெற்றிருந்தாலும் அதன் எதிர்பார்ப்பான "கிராமங்களைத் தாருங்கள்" எனக் கேட்டு நின்றும் உள்ளூராட்சி சபைகளின் ஆட்சிகளை கைப்பற்ற முடியவில்லை. அத்துடன் சமாதான நடவடிக்கைகளுக்கு எதிராகவும் தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமைப்போராட்டத்திற்கு எதிராகவும் ஜே.வி.பி முன்னெடுத்த பிரசாரங்களுக்கு சிங்கள மக்கள் ஆதரவு வழங்கவில்லை என்பதும் தெளிவாகியுள்ளது.

இந்த தேர்தல் முடிவுகள் ஜே.வி.பியின் அரசியலுக்கு இனியும் வளர்ச்சி இல்லை என்பதை தெளிவாக்கியுள்ளது. அத்துடன் கட்சிக்குள்ளும் பூசல்கள் ஏற்பட்டுள்ளன. அதாவது ஐ.ம.சு முன்னணியில் இணைந்து தேர்தலில் போட்டியிட்டு மஹிந்த ராஜபக்ச கூறியது போன்று 28 சபைகளின் ஆட்சியை பெற்றிருக்கக் கூடிய சந்தர்ப்பத்தை ஜே.வி.பி இழந்துவிட்டதாக அதன் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா மீது குற்றஞ் சாட்டியுள்ளார். ரில்வின் சில்வா ஜே.வி.பி தனித்து போட்டியிட வேண்டும் என்பதை வலியுறுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜே.வி.பி யின் எதிர்பார்ப்பு இத் தேர்தலில் தோல்வியடைந்துள்ளமையால் அக்கட்சிக்குள் குழுச் சண்டையை மேலும் உக்கிரமடையச் செய்துள்ளது. சோமவன்ச, விமல் வீரவன்ஸ ஒரு புறமாகவும் ரில்வின் சில்வா, லால்காந்த மறுபுறுமாகவும் இரு குழுக்களாக செயல்பட்டு வருகின்றனர். அதேவேளை கீழ் மட்ட சக்திகளும் நூற்றுக்கு மேற்பட்ட முழுநேர ஊழியர்களும் விரக்தியடைந்து வெளியேறி வரும் போக்கு மேலும் அதிகரித்துக் கொண்டு செல்கிறதையும் அவதானிக்க முடிகிறது. ஜே. வி.பி இன்று முற்று முழுதான ஒரு தேசிய முதலாளித்துவ வர்க்க நிலைப்பாட்டை வரித்துக் கொண்டு செயல்படும் கட்சியாகியுள்ளது. அதிலும் கூட படு பிற்போக்கான பேரினவாதத்தை தூக்கிப் பிடித்து செல்வாக்குத் தேடவே அது முயன்று வருகின்றது. எனவே ஜே.வி.பியைப் பற்றி கொண்டிருந்த பிரமை பலருக்கு இப்போது தெளிந்திருக்கும் என நம்பலாம்.

## மலையகத்தில் குடியிருப்போர் தோட்டங்களிலிருந்து வெளியேற்றம்

பெருந்தோட்டங்களில் ஓய்வு பெற்றவர்களையும் வேலை செய்யாதவர்களையும் அவர்கள் வாழ்ந்து வரும் லயன் அறைகள், குவாட்டர்ஸ்களிலிருந்து வெளியேற்றும் நடவடிக்கைகளை தோட்ட நிர்வாகங்கள் மீண்டும் எடுத்துவருகின்றன. இந்நடவடிக்கைகள் கேகாலை, இரட்ணபுர, கண்டி, பதுளை மாவட்டங்களில் அதிகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தோட்டத்தொழிலாளர்களுக்கென சொந்தமாக காணியோ வீடுகளோ, கிராமங்களோ கிடையாது. அவர்கள் உருவாக்கிய பெருந்தோட்டங்களில் பரம்பரை பரம்பரையாகத் தொடர்ந்து தொழிலாளர்களாக வேலை செய்து வருகின்றனர். எட்டிடடி அறைக்குள்ளேயே பல குடும்பங்கள் ஒன்றாக வாழும் அவலம் இன்றும் தொடர்கிறது. இன்றைய பரம்பரையினரில் கணிசமானோர் தோட்டங்களில் வேலை செய் யாவிடினும் தோட்ட குடியிருப்புகளிலேயே வாழ்ந்து வருகின்றனர். அவர்களுடன் சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்களும் வாழ்கின்றனர். அவர்களை அக்குடியிருப்புகளிலிருந்து வெளியேற்றினால் அவர்கள் எங்கே செல்வார்கள்?

எவ்வித வசதியுமற்ற தோட்டக் குடியிருப்புகள் கூட அவர்களுக்கென வழங்கப்படவில்லை. தோட்டக்குடியிருப்புகளை அவற்றில் குடியிருப் போருக்கே சொந்தமாக்குவதாக கூறிக்கொண்டு பலமுறை உறுதிகள் வழங்கும் வைபவங்கள் நடைபெற்றன. ஐ.தே. கட்சி அரசாங்க காலத்திலும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்க காலத்திலும் அவ்வாறான மக்களை ஏமாற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அவற்றுக்கு மலையகத் தலைவர்கள் எனப்படுவோர் தொடர்ந்தும் துணை போனார்கள்

லயன் அறைகள், குவாட்டர்ஸ்களுக்கு புறம்பான தோட்டக்காணிகளில் சில இடங்களில் தோட்டத்தொழிலாளர்கள் தோட்டநிர்வாகத்தின் அனுமதியுடன் வீடுகளை கட்டிக்கொண்டுள்ளனர். அவற்றுக்கு அவர்களின் சேமலாப நிதியிலிருந்து கடன்களை பெற்றள்ளனர். ஆனால் அந்த வீடுகளோ வீடுகள் அமைக்கப்பட்டிருக்கும் காணிகளோ அவர்களுக்கு சொந்தமென கூறுவதற்கு எவ்வித உறுதிகளோ ஆவணங்களோ இல்லை.

தோட்டத் தொழிலாளர்களுக்கென சொந்தமாக வீடுகளோ, காணிகளோ கிராமங்களோ இல்லாத நிலையில் வசித்துவருகின்ற லயன் அறைகளிலிருந்தும் வசிப்போரை வெளியேற்றுவது இதயமற்ற செயலாகும். இவ்வாறான செயல்களை செய்து கொண்டுதான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சாவின் மஹிந்த சிந்தனையின்கீழ் தோட்டத்தொழிலாளர்களுக்கு 50 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவுள்ளதாக கூறப்படுவதுடன் சில இடங்களில் அவற்றுக்கு அடிக்கல்லும் நாட்டப்பட்டுள்ளது.

மஹிந்த சிந்தனையால் 50 ஆயிரம் தோட்டக்குடியிருப்புகள் கிடைக்கும் என ஆரவாரம் செய்துகொண்டு மறுபுறம் பரம்பரைபரம்பரையாக வசித்துவருவோரை அவர்களின் குடிமனைகளிலிருந்து வெளியேற்றும் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. சில இடங்களில் தோட்டத்துரைமார் பொலிசாருடன் சென்று வெளியேறுப்படி குடியிருப்போரை அச்சுறுத்தியுள்ளனர். இந் நடவடிக்கை பேரினவாதச் சிந்தனையின் மூலமே முன்னெடுக்கப்படுகிறது.

### மகிந்த என்ன செய்யப்....

1ம் பக்க தொடர்ச்சி........

அவை ஜனாதிபதிக்கு அப்பாற்பட்ட வகையில் முன்னெடுக்கப்படுகின்றதா? அல்லது அவரது வழிகாட்டலில் இடம் பெறுகின்றதா?

உண்மையாகவே, சமாதானத்தை ஜனாதிபதி மனதார விரும்புகிறார் என்றால் இன்றைய சூழ்நிலை அதற்குச் சாதகமாகவே இருக்கின்றது. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி சமாதானத்திற்கு உறுதியான ஆதரவு என தொடர்ந்து கூறி வருகின்றது. அத்துடன் அக் கட்சி உள் முரண்பாட்டினால் பலவீனமடைந்தும் காணப்படுகின்றது. சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளும் சமாதானத்திற்கு விரோதமானவர்களின் குரல் அடங்கியே இருந்து வருகிறது. அரசாங்கத்துடன் இணைந்துள்ள ஏனைய கட்சிகளும் மகிந்த சிந்தனைக்கு துதிபாடியே வருகின்றன. இவற்றுடன் அண்மைய உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளும் ஆளும் ஐ.ம.சு. முன்னணிக்கே சார்பாக கிடைத்துள்ளன. அதேவேளை தத்தம் உள்நோக்க நிலைப்பாடுகளைக் கொண்டிருந்த போதும் இந்தியாவும் அமெரிக்காவும் ஏனைய நாடுகளும் அரசியல் தீர்வும் சமாதானமும் ஏற்பட வேண்டும் எனப் பகிரங்கமாகக் கூறி வருகின்றன. வடக்கு கிழக்கு மக்கள் அனைவரும் தெற்கின் அமைதி இணக்கம் விரும்பும் அனைத்து மக்களும நியாயமான அரசியல் தீர்வையும் நிரந்தர சமாதானத்தையும் உளமார விரும்புகிறார்கள். அதேவேளை ஆளும் வர்க்க சக்திகளும் அந்நிய ஆதிக்க வாதிகளும் தத்தமது இருப்புக்கும் நலன்கள் தேவைகளுக்கும் ஏற்றவாறே சமாதானத்தை வேண்டி நிற்கின்றனர் என்பது காணக்கூடியதேயாகும்.

இவ்வாறு இருந்த போதிலும் இன்றைய சூழல் அரசியல் தீர்வையும் சமாதானத்திற்கான முன் முயற்சிகளையும் முன்னெடுப்பதற்கு ஏற்ற ஒரு சூழலாக நிலவுவதை எவ்வகையிலும் நிராகரிக்க முடியாது. இவ்விட த்தில் ஜனாதிபதி எவ்வாறு நடந்து கொள்ளப் போகிறார். தேசிய இனப்பிரச்சினை விடயங்களை எந்த வழிகளில் கையாளப்போகின்றார். ஜனாதிபதியைப் பொறுத்தவரையில் முற்றிலும் சோதனைக் கட்டமேயாகும். எல்லோரும் ஏறிய குதிரையில் சக் கடத்தாரும் ஏறிச் சறுக்கி விழுந்தாராம் என்ற நிலைக்கு மகிந்தவும் உள்ளாவாரா? அல்லது இருக்கையை சரிப்படுத்தி கடிவாளத்தை உறுதியாகக் கைப்பிடித்து வரலாற்றுத் திருப்பு முனையை ஏற்படுத்துவாரா? பொறுத்திருந்து பார்ப்போம் என்று பொத்தாம் பொதுவாகக் கூறிவிடமுடியாது.

ஏனெனில் ஜெனிவாப் பேச்சுவார்த்தையின் போது ஏற்பட்ட தொய்வு, ஊசலாட்டம் பலவீனம் என்பனவற்றைக் களைந்து இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையில் ஜனாதிபதியும் அரசாங்கத்தரப்பும் நடந்து கொள்ளப் போவதையிட்டே அடுத்த நகர்வு இடம் பெறப் போகின்றது. எனவே ஜனாதிபதி என்ன செய்யப் போகிறார் என்பதே தற்போதைய எதிர்பார்ப்பாகும்.

### அரசாங்க ஊழியர்களின்........

1ம் பக்க தொடர்ச்சி.........

11 ஆயிரத்து 600 ரூபா போதாதா? என்றும் கேள்வி எழுப்பியுள்ளார். 01/2006 சுற்று நிருபத்ததின் படி அரசாங்க ஊழியர்களின் சம்பள உயர்வை வழங்க வேண்டுமென வற்புறுத்தி தொடர்ச்சியான போராட்டங்கள் நடைபெற்றுவருகின்றன. அவைதொழிலாளர்களுக்கு நம்பிக்கை தரக்கூடியதாக இருக்கின்றன.

சக்திமிக்கதாக முன்னெடுக்கப்பட்டு வரும் இப் போராட்டங்களை அரசிற்கு எதிரான சதி என ஜனாதிபதி கூறியுள்ளார். வேலைநிறுத்தங்கள் தொடர்பாக எல்லா ஜனாதிபதிகளும் இவ்வாறே கூறினார்கள் என்பது நினைவிற்கு வருகிறது. இவ்வாறு கூறுவதன் மூலம் ஜனாதிபதி தன்னைச் சுற்றி எழுப்பிவரும் 'மக்கள் ஜனாதிபதி' என்ற படிமம் விரைவில் அம்பலமாகவே வழிவகுக்கும்.

- யுத்த நிறுத்தம் தொடர ஜனநாயக மனித உரிமைகளை நிலை நிறுத்த பேச்சுவார்த்தையை வற்புறுத்தி
- மலையக மக்களின் அடிப்படை உரிமைகளை வென்றெடுக்க அணிதிரளக் கோரி.
- விலைகளின் உயர்வைத் தடுத்து வாழ்கைச்செலவைக் கட்டுப்படுத்த வலியுறுத்தி.
- தொழிலாளர் விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்களின் உரிமைகளை வற்புறுத்தி .
- அமெரிக்க ஏகாதிபத்திய உலக மேலாதிக்கப் போர்வெறியை எதிர்த்து.

புதிய- ஜனநாயக கட்சியின்
புரட்சிகர மேதினம்
யாழ்ப்பாணத்தில் 01 - 05 - 2006 இராகலையில்

உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுவீர் !
ஒடுக்கப்படும் தேசிய இனங்களே ஐக்கியப்டுவீர் !
அனைத்து ஒடுக்கு முறைகளையும் எதிர்த்து போராடுவோம் !!

புதிய - ஜனநாயக கட்சி

வெளியிடுபவர் : இ.தம்பையா, இல. 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு: கொம்பிரின்ட், 334A,K.சிறில் சி.பெரேரா மாவத்தை, கொழும்பு 13.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்